Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

மழைக்கான சாத்தியம் உண்டு.
27°C 26°C

பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 304 | வள்ளுவர் ஆண்டு: 2044 | புரட்டாதி 11, வெள்ளி 27.09.2013

# வெள்ளவத்தை முதல் வடக்கு வரை நந்திக்கடலாக்க கூட்டமைப்பு முயற்சி

## தனி ஈழப் போராட்டத்தை கொழும்பிலும் விஸ்தரித்து வாக்கு வேட்டைக்குத் திட்டமாம்

கொழும்பு, செப்.27
"தனி ஈழப் போராட்டத்தை தென்னிலங்கை வரை விஸ்தரித்து அடுத்த தேர்தலில் தலை நகரத்திலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வாக்கு வேட் டையை நடத்தும். வெள்ளவத்தை, வத்தளை முதல் வடக்கு வரை நந்திக் கடலாக மாற்றும் அபாயகரமான நடவடிக்கையையே கூட்டமைப்பு முன் னெடுக்கிறது."
இவ்வாறு ஆளுந்தரப்பின் பங்கா ளிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமய அச்சம் வெளியிட்டு எச்சரிக்கை விடுத்துள்ளது.
"வடக்குத் தேர்தலில் தமிழ்க் கூட்டமைப்பு வெற்றிபெறு வதற்கு நேரடியாகவே அழுத்தம் கொடுத்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணை யாளர் நவநீதம்பிள்ளை, சர்வதேச விசாரணைப் பொறிமுறை என்ற சவாலை முன்வைத்து இலங்கையை அச்சுறுத்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சுய நிர்ணய ஆட்சியை உறுதி



செய்ய முயற்சிக்கிறார். இது தான் ஐக்கிய நாடுகள் சபை, இந்தியா, சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள் ஆகியவற்றின் நோக்கமாக உள்ளது" என்று ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.
"கூட்டமைப்பின் இந்த அபாயகர மான பயணத்தை தோற்கடித்து, அதற்கு முற்றுப்புள்ளி வைக்க எம் இனத்தை படை திரட்டி களமிறக்கி மாபெரும் மக்கள் போராட்டத்தை முன் னெடுப்போம். இதற்காக நாட்டி லுள்ள அனைத்து அரசியல் .

21

தீவிரவாதிகள் தாக்குதல்: இராணுவத்தினர் உட்பட 12 பேர் சாவு 06

136 பணயக் கைதிகள் சாவு 07

கொக்குவில் இந்துவுக்கு கிண்ணம் 22

நியூசிலாந்துக்கு எதிரான இலங்கை 'ஏ' அணி அறிவிப்பு 23

# காணி அதிகாரம் மத்திய அரசுக்கே

## உயர்நீதிமன்றம் நேற்று பரபரப்புத் தீர்ப்பு

கொழும்பு, செப்ரெம்பர் 27
"அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் மூலம் உரு வாக்கப்பட்ட மாகாணசபை களுக்குக் காணி அதிகாரங்கள் எவையுமே கிடையாது. ஜனாதிபதி தலைமையிலான மத்திய அரசுக்கே முழுமையான காணி அதிகாரங்கள் இருக்கின்றன" என்று உயர்நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்தது.



பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ், நீதியரசர்களான கே.சிறி பவன், ஈவா வணசுந்தர ஆகிய மூன்று நீதியரசர்களைக் கொண்ட ஆயமே இந்தத் தீர்ப்பை நேற்று அறிவித்துள்ளது.
மத்திய மாகாண சபையில் அமைந்துள்ள தோட்டக் காணி ஒன்று தொடர்பான வழக்கை விசாரித்த கண்டி மேல் நீதிமன்றம், இலங்கை அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் கீழ் மாகாணசபைகளுக்குக் காணிகள் சம்பந்தமான எந்த விதமான அதிகாரங்களும் இல்லை என்று 2000 ஆம் ஆண்டு தீர்ப்பளித்திருந்தது. இந்தத் தீர்ப்பை எதிர்த்து கொழும்புமேன்முறை

21

# தேசிய நல்லிணக்கத்துக்கான சந்தர்ப்பமே வடக்குத் தேர்தல்

## சுட்டிக்காட்டுகிறது ஐரோப்பிய ஒன்றியம்

பிரசல்ஸ்,செப். 27
வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்ற வெற்றியைப் பாராட்டியுள்ள ஐரோப்பிய ஒன்றியம்,தேசிய அரசுக்கும் மாகாணத்தில் வெற்றிபெற்ற கட்சிக்கும் இடையில் நம்பிக்கை மற்றும் தேசிய நல்லிணக்கச் செயற்பாடுகளை முன்னோக்கி நகர்த்துவதற்கு இந்த வெற்றி ஒரு



சிறந்த சந்தர்ப்பமாக அமையும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.
மூன்று தசாப்த கால மோதல்களினால் கஷ்டங்களை அனுபவித்த இலங்கையின் ஒரு பகுதியான வடக்கில் நடைபெற்ற தேர்தல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்று ஐரோப் பிய ஒன்றிய நாடாளு மன்றத்தின் தெற்காசிய விவகா

21

# பொறுப்புக்கூறாவிட்டால் சர்வதேச விசாரணைதான்

## இலங்கைக்கு அமெரிக்காவும் எச்சரிக்கை

ஜெனிவா,செப் 27
ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர்நவநீதம்பிள்ளை அறிவித்தது போலவே, பொறுப்புக்கூறுவதற்கு இலங்கை அரசு அர்த்தமுள்ள நடவடிக்கைகளை எடுக்காவிட்டால், அனைத்துலக விசாரணைக்கு வலியுறுத்தப்படும் என்று அமெரிக் காவும் எச்சரித்துள்ளது.
ஜெனிவாவில் ஐ.நா மனித உரிமைகள் சபையின் 24 ஆவது அமர்வில், இலங்கை குறித்து சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக உரையாற்றிய அமெரிக்கப் பிரதிநிதி எலீன் டொனாஹே இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
மனிதஉரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பாக, ஒத்துழைப்பு வழங்கும் ஐ.நா மனித உரிமைகள் ஆணையம் மற்றும் நாடுகளை அமெரிக்கா பாராட்டுகிறது. இலங்கை தொடர்பான நிலைமைகளை வெளிப் படுத்திய பிரதி ஆணையாளருக்கு எமது நன்றி.

21

# காங்கேசன் சிமெந்து ஆலை மீண்டும் இயங்கும் சாத்தியம்

யாழ்ப்பாணம், செப்.27
காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில் சிமெந்து பொதி செய்யும் நடவடிக்கைகள்ள மீண்டும் ஆரம்பிப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
போருக்கு முன்னர் காங்கே சன்துறைப் பகுதியில் லங்கா சிமெந்து, சிமெந்து கூட்டுத்தா பனம் ஆகிய இரண்டு தொழிற்சாலைகளும் இயங்கி வந்தன. போர் காரணமாக அவை 1990 ஆம் ஆண்டிலிருந்து இயங்கவில்லை.
தற்போது குறித்த பிரதேசம் இராணுவ உயர்பாதுகாப்பு வலயத்திலேயே உள்ளது. இருப்பினும் அதனை மீண்டும் ஆரம்பிப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
முதற்கட்டமாக சிமெந்துக் கலவைகள் கொண்டு

21

# ஈழத்து இனப் படுகொலைக்கு பான் கீ - மூனும் பொறுப்பாளி

## சர்வதேச விசாரணைக்கு வைகோ வலியுறுத்து

சென்னை, செப். 27
"இறுதிக்கட்ட யுத்தத்தின்போது தமிழர்களைக் காக்கத் தவறிய ஐ.நா. பொதுச்செயலாளர் பான் கீ மூனும் ஈழத்தில் நடைபெற்ற இனக்கொலைக் குற்றத்திற்குப் பொறுப்பாளியாவர்" என்று தமிழகத்தின் பழுத்த அரசியல் வாதியும், ம.தி.மு.க. பொதுச் செயலாள ருமான வைகோ குற்றஞ்சாட்டியுள்ளார்.
இதுதொடர்பாக அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரி விக்கப்பட்டிருப்பதாவது,
இலங்கைத்தீவில், சிங்கள அரசு, உலகம் தடை செய்த குண்டுகளையும், இந்தியா உள்ளிட்ட அணு ஆயுத வல்ல ரசுகள் தந்த ஆயுதங்களையும் பயன்படுத்தியபோது, அங்கு இடம்பெற்ற அழிவுகளை தடுக்கும் கடமையில் ஐ.நா. சபை திட்டமிட்டே தவறியது என்பதை ஐ.நா.வின் பொதுச்செயலாளர் பான் கீ-மூன் ஒப்புதல் வாக்கு மூலமாகத்தந்துள்ளார்.
யுத்தத்தை நிறுத்தவோ மனித உரிமைகளைக்

21




தியாகி தீலிபனின் 26 ஆவது நினைவுதின நிகழ்வுகள் நேற்று தமிழர் தாயகம் எங்கும் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப் பட்டன. யாழ்ப்பாணத்திலும் இந்த அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது.

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வடக்கில் இருந்து இராணுவம் வெளியேற்றப்பட வேண்டும்

## இந்திய மத்திய அமைச்சர் வாசன் வலியுறுத்து

கொழும்பு, செப்.27
இலங்கையில் நடந்து முடிந்த வடக்கு மாகாண தேர்தல் மூலம் தமிழ் மக்கள் தமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியுள்ளனர். இதனைக் கருத்திற் கொண்டு தமது பணிகளைச் செய்ய வேண்டும். குறிப்பாக வட பகுதியில் இருந்து இராணுவத்தினர் வெளியேற்றப்பட வேண்டும். இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் இந்திய மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் ஜி.கே. வாசன்.
தஞ்சையில் நேற்று ஊடகவியலாளர்களுக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
வடக்கில் தேர்தல் நடைபெறுவதற்கு இந்திய அரசின் அழுத்தமும் காரணமாக இருந்தது. அத்தோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றிக்கும் இந்திய அரசு முக்கிய பங்காற்றியுள்ளது. தமிழ் மக்களது தேர்தல் வெளிப்பாட்டின் பின்னர் அந்தப் பகுதிகளில் இருக்கும் தேவையற்ற தலையீடுகள் விலக்கப்படவேண்டும். இந்த வெற்றிக்கு பின்னரும் இராணுவம் அங்கே இருப்பது முறையற்ற செயல். எனவே, வட பகுதியில் இருந்து இராணுவத்தை உடனே வெளியேற்ற வேண்டும்.
இலங்கை அரசு இதனை செய்யும் என நான் நம்புகிறேன். அத்தோடு இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு உரிய பாதுகாப்பும், உரிமையும் வழங்க வேண்டும் என்பதையும் வலியுறுத்த விரும்புகின்றேன்.
இதேவேளை தமிழக மீனவர்கள் இலங்கை இராணுவத்தால் கைது செய்யப்பட்டு, அதில் ஒரு பகுதியினர் விடுதலை செய்யப்பட்டு உள்ளதும், ஒரு பகுதியினர் சிறையில் இருப்பதும் வருத்தம் அளிக்கிறது. எனவே சிறையில் இருப்பவர்களை உடனே விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் - என்றார். (ஐ)



# கூட்டமைப்பின் போனஸ்கள் மன்னார், முல்லைத்தீவுக்கு

யாழ்ப்பாணம், செப்.27
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் போனஸ் ஆசனங்கள் இரண்டுக்கும் மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்படவுள்ளதுடன் இது தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளருக்கு இன்றைய தினம் எழுத்து மூலமாக அறிவிக்கப்படவுள்ளது.
வட மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெரு வெற்றியைப் பெற்றுக்கொண்டது. இதன் மூலம் இரு போனஸ் ஆசனங்கள் கிடைக்கப்பெற்றன.
இதில் ஓர் ஆசனம் மன்னார் மாவட்டத்தில் முஸ்லிம் பிரதிநிதிக்கு வழங்கப்படவுள்ளது. நல்லாட்சிக்கான மக்கள் இயக்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான ஒப்பந்தத்தின் பிரகாரம் குறித்த ஆசனம் மன்னார் மாவட்டத்தில் போட்டியிட்ட அ. அஸ்மினுக்கு வழங்கப்படவுள்ளது.
மற்றைய ஆசனம் முல்லைத்தீவு மாவட்டத்தில் போட்டியிட்ட பெண் வேட்பாளர் திருமதி மேரி கமலா குணசீலனுக்கு வழங்கப்படவுள்ளது.
இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளரினால் இன்று உத்தியோகபூர்வமாக எழுத்து மூலம் தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

# கீரிமலை பாதுகாப்பு அணை அமைக்கும் பணி நிறுத்தம்

யாழ்ப்பாணம், செப்.27
கீரிமலையில் நிர்மாணிக்கத் தீர்மானிக்கப்பட்டிருந்த பாதுகாப்பு அணையின் பணிகளை, தற்காலிகமாக இடைநிறுத்துமாறு ஆளுநரின் செயலாளர் தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்துக்கு அறிவித்துள்ளார்.
கீரிமலை மற்றும் நகுலேஸ்வரம் பகுதி மக்களின் வேண்டுகோளுக்கு அமைவாக கீரிமலைக் கேணியடிப் பகுதியில் 300 மீற்றர் நீளமான பாதுகாப்பு அணை அமைக்கத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.
இடர் முகாமைத்துவ அமைச்சினால் குறித்த வேலைத் திட்டத்துக்கு அனுமதி வழங்கப்பட்டதுடன் 5 மில்லியன் ரூபா நிதியும் ஒதுக்கப்பட்டிருந்தது.
இதனையடுத்து அதற்கான கேள்விகோரல் ஒகஸ்ட் 15 ஆம் திகதி கோரப்பட்டு, 28 ஆம் திகதி கேள்வி கோரல் திறக்கப்பட்டது. இதன் பின்னர் தொழில் நுட்ப மதிப்பீடு செய்யப்பட்டது.
இவ்வாறானதொரு நிலையில் இந்த மாதம் 10 ஆம் திகதி ஆளுநரின் செயலாளரால் மாவட்ட செயலகத்துக்கு கடிதம் அனுப்பப்பட்டது.
ஆளுநர் குறித்த பகுதியின் அபிவிருத்தி தொடர்பில், சம்பந்தப்பட்டவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளதால் பணிகளை அதுவரை இடைநிறுத்தி வைக்குமாறு அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
மாரி மழைக்கு முன்னர் குறித்த பாதுகாப்பு அணை அமைக்கப்பட வேண்டும் என்று மக்கள் எதிர்பார்த்துள்ள நிலையில் ஆளுநரின் தலையீட்டால் பணிகள் தடைப்பட்டுள்ளன. (த-5)



பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மா இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை புதன்கிழமை நியூயோர்க்கில் நடைபெறும் ஐ.நா. பொதுக் கூட்டத்தின்போதே சந்தித்துக் கலந்துரையாடினார். இந்தச் சந்திப்பின் போது எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் மாநாடு தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டது.

# மஹிந்தவின் ருவிட்டர் உரையாடல் தோல்வியில்

நியூயோர்க், செப் 27
ஜனாதிபதி மஹிந்தவுடனான ருவிட்டர் உரையாடல் தோல்வியில் முடிந்துள்ளது.
நியூயோர்க் சென்றுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன், ருவிட்டரில் உரையாடுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக, பெரும் பரப்புரை செய்யப்பட்டது.
நேற்றுமுன்தினம் மாலை கேள்விகளுக்கு ருவிட்டர் மூலம் ஜனாதிபதி பதிலளிப்பார் என்று அறிவிக்கப்பட்டது.
எனினும் குறிப்பிட்ட நேரத்துக்குப் பின்னரே ஆரம்பமான இந்த ருவிட்டர் உரையாடல், திடீரென இடைநிறுத்தப்பட்டது.
இந்த உரையாடலின் நடுவராகச் செயற்பட்ட ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க, ருவிட்டர் உரையாடல், தற்போதைய ஐ.நா கூட்டத்தொடர், நியூயோர்க்கில் மஹிந்தவின் அதிகாரபூர்வ செயற்பாடுகளையும் மையப்படுத்தியதாக இருக்கும் என்று அறிவித்திருந்தார். கேள்விகளை முன்கூட்டியே அனுப்பும்படியும் கேட்கப்பட்டது.,
எனினும், பொதுநலவாயச் செயலருடனான சந்திப்பில், ஜனாதிபதி பங்கேற்றதால், குறிப்பிட்ட நேரத்துக்கு ருவிட்டர் உரையாடல் தொடங்கவில்லை.
தாமதமாக தொடங்கிய போதிலும், பல கேள்விகளுக்குப் பதில் கொடுக்க நீண்ட தாமதம் ஏற்பட்டது.
பின்னர், திடீரென, ஜனாதிபதி இன்னொரு கூட்டத்துக்குச் செல்வதாக, லலித் வீரதுங்க அறிவித்து விட்டு கேள்வி பதில் நிகழ்வை நிறுத்திக் கொண்டார்.
இதனால், கேள்விகளை அனுப்பிய பலரும் ஏமாற்றமடைந்தனர். (கு)

# உயர்தரப் பரீட்சைக்கு தோற்றியோருக்கு செயலமர்வு

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு வேள்ட் விஷன் நிறுவன அனுசரணையுடன் தொழில் உலகை அறிவோம். 'வாழ்வை இனிமையாக்குவோம்' என்றும் தொழில் வழிகாட்டல் செயலமர்வுகளின் ஆரம்ப நிகழ்வுகள் இன்று இரு நிலையங்களில் நடைபெறும்.
இன்றும் நாளையும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் ஆகிய நிலையங்களில் நடத்தப்படும்.
வழிகாட்டல் கருத்தரங்கில் கடந்த மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் தோற்றிய தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த 700 மாணவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (வ-9)

# கொழும்பு – கட்டுநாயக்க அதிவேகப்பாதை விரைவில் மக்கள் பாவனைக்கு!



கொழும்பு - கட்டுநாயக்க அதிவேகப் போக்குவரத்துப் பாதை அடுத்த மாதம் மக்கள் பாவனைக்கு கையளிக்கப்படவுள்ளது. கடல் மணலைப் பயன்படுத்தி இயற்கையான சூழலுடன் இலங்கையில் அமைக்கப்படும் இரண்டாவது அதிவேக போக்குவரத்து வீதி இதுவாகும்.
நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டுக்கு வருகை தரும் பல்வேறு நாடுகளினதும் தலைவர்கள் இந்த வீதியை பயன்படுத்த வசதியாக இந்த வீதி பாவனைக்கு வரவுள்ளது.
இதனூடாக கட்டுநாயக்கவிலிருந்து கொழும்பை வந்தடைய 20 நிமிடங்கள் மட்டுமே போதுமானது.
சீனாவின் அனுசரணையில் நிர்மாணிக்கப்படும் இந்த அதிவேக வீதி அமைக்கும் பணிகளுக்கு 350 மில்லியன் அமெரிக்க டொலர் செலவிடப்பட்டுள்ளது.
இதேவேளை தெற்கு அதிவேக போக்குவரத்து வீதியுடன் இணையும் கிளை வீதிகளின் அபிவிருத்திப் பணிகளுக்காக ஆசிய அபிவிருத்தி வங்கி 75 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது.
இந்தத்திட்டத்தினூடாக தென் மாகாணத்திற்கும் கொழும்புக்குமிடையே பொருள்களை கொண்டு செல்லல் மற்றும் பொதுவான பிரதான போக்குவரத்து என்பனவற்றை அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## ஆறு புத்தர் சிலைகள் சேதம்

மன்னார், செப் 27
மன்னார் முருங்கன் புராதன ரஜமஹா விகாரையிலுள்ள புத்தர் சிலைகள் நான்கு உட்பட சுமார் ஆறு சிலைகள் இனந்தெரியாதநபர்களினால் நேற்று வியாழக்கிழமை அதிகாலை சேதமாக்கப்பட்டுள்ளன.
இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் சம்பவம் தொடர்பில் இது வரை யாரும் கைது செய்யப்படவில்லை எனவும் தெரிவித்தனர். (த)

## 4 உறுப்பினர்கள் பதவியேற்கத் தடை

மாகாண சபை தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களில் நான்கு பேர் சத்தியப் பிரமாணம் செய்ய முடியாது எனத் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய நேற்று வியாழக்கிழமை அறிவித்துள்ளார்.
குறித்த நான்கு மாகாண சபை உறுப்பினர்களும் தங்களின் சொத்து விபரங்களை வெளிப்படுத்தத் தவறினர் என அவர் குறிப்பிட்டார்.
இதனால் இவர்களின் பெயர்கள் புதிய மாகாண சபை உறுப்பினர்களுக்கான வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவில்லை எனவும் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார்.
இதன் காரணமாக இவர்கள் மாகாண சபை உறுப்பினர்களாகச் சத்திய பிரமாணம் செய்ய முடியாது என அவர் மேலும் குறிப்பிட்டார். எனினும் அவர்களின் பெயர்களை வெளியிட தேர்தல்கள் ஆணையாளர் மறுத்துவிட்டார். (த)

# காலக்கெடு விதிப்பதற்கு நவிக்கு அதிகாரமில்லை

## அறிக்கையை நிராகரித்தது இலங்கை

ஜெனிவா, செப் 27
ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை நேற்று முன்தினம் ஜெனிவா கூட்டத்தொடரில் சமர்ப்பித்த வாய்மூல அறிக்கையை, இலங்கை அரசு நிராகரித்துள்ளது.
ஐ.நா மனித உரிமைகள் சபையின் ஆணைக்கு இணங்க, தனது இலங்கைப் பயணம் மற்றும், இலங்கையின் மனித உரிமைகள் நிலையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை தனது இடைக்கால அறிக்கையைச் சமர்ப்பித்தார்.
அதில், இலங்கை அரசு, போர்க் குற்றங்களுக்கு எதிர்வரும் 2014ஆம் ஆண்டு மார்ச் மாதத்துக்குள் சுதந்திரமான - நம்பகமான விசாரணைகளை முன்னெடுக்கத் தவறினால், அனைத்துலக சமூகம் தனியான விசாரணைப் பொறிமுறையை உருவாக்க வேண்டி வரும் என்று எச்சரித்திருந்தார்.
இது குறித்து நேற்றுமுன்தினம் அமர்வில் பதிலளித்துப் பேசிய இலங்கைப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க, இலங்கைக்குக் காலக்கெடு விதிக்கும் அதிகாரம் நவநீதம்பிள்ளைக்கு இல்லை என்று தெரிவித்துள்ளார்.
மேலும், நவநீதம்பிள்ளையின் வாய்மூல அறிக்கையின் பிரதி, உரிய காலத்தில் தமக்கு வழங்கப்படவில்லை என்று குற்றம் சாட்டிய ரவிநாத் ஆரியசிங்க, கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணிக்கே அது தமக்குத் தரப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.
தமக்குப் பதிலளிக்க ஒரு இரவு மட்டுமே அவகாசம் கொடுக்கப்பட்டதாகவும் அவர் விசனம் வெளியிட்டுள்ளார்.
வடக்கு மாகாணசபைத் தேர்தலை இலங்கை அரசு வெற்றிகரமாக நடத்தியுள்ளதையும் அவர் தனது உரையில் சுட்டிக் காட்டினார்.
வடக்கு மாகாணசபை உள்ளிட்ட, எல்லா மாகாண சபைகளுடனும், இலங்கை தொடர்ந்தும் இணைந்து பணியாற்றும் என்று ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளருக்குத்தாம் உறுதியளிப்பதாகவும் இலங்கைப் பிரதிநிதி கூறியுள்ளார். (கு)

# கிளிநொச்சி ரயில். மார்க்கம் சுற்றுலாத்துறைக்கு பங்களிப்பு

கொழும்பு, செப்.27
வடக்குக்கான ஓமந்தை - கிளிநொச்சி ரயில் மார்க்கம் திறந்து விடப்பட்டுள்ளமை வடபகுதி சுற்றுலாத்துறையை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்திக்கு வழி கோலியுள்ளது என்று உல்லாசப் பயண மற்றும் தொழில் துறைகள் சபையின் தலைவர் ஏ.எம்.ஜவுபர் தெரிவித்தார்.
போரால் இடைநிறுத்தப்பட்ட வடக்கு ரயில் போக்குவரத்து மார்க்கம் மீளத் திறக்கப்பட்டதன் மூலம் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளுக்கு வடக்கிலுள்ள பிரதேசங்களுக்குச் செல்வதற்கு வாய்ப்பும் கிடைத்துள்ளது.
அது அந்த மாகாணத்தின் தொழில் துறைகள் மற்றும் சேவைகளை வழங்கும் பிரிவுகளின் அபிவிருத்திக்கும் காரணியாக அமையக் கூடும் என்று அவர் கூறினார்.
எதிர்காலத்தில் இந்த ரயில் சேவை யாழ்ப்பாணம் வரையில் நீடிக்கப்பட்டதன் பின்னர் இந்த நாட்டின் போக்குவரத்திலும், பொருள் பண்டங்கள் பரிமாற்றச் சேவைகளிலும் பெரும் முன்னேற்றம் ஏற்படும்.
உள்நாட்டு - வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு செயற்திறன் மிக்க வகையிலும் இலாபகரமாகவும் தமது கருமங்களை மேற் கொள்வதற்கான வாய்ப்புக் கிடைக்கும் என்று அவர் மேலும் கூறினார். (ச-22)

## தியாகி திலீபனின் நினைவுதினம் யாழ்.பல்கலைக்கழகத்தில்




தியாக தீபம் திலீபனின் 26 ஆம் ஆண்டு நினைவு நாள் யாழ்.பல்கலைக்கழகத்தில் மாணவர்களால் உணர்வெழுச்சி பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.
திலீபனின் நினைவு தினச் சுவரொட்டிகள் பல்கலைக்கழக சுற்றாடல் எங்கும் ஒட்டப்பட்டிருந்தன.
இந்திய அமைதி காக்கும் படைகளுக்கு எதிராக 1987 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி 5 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தார். 12 நாள்கள் நீராகாரமின்றி உண்ணா நோன்பிருந்த திலீபன் 1987 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 26 ஆம் திகதி உயிரிழந்தார்.
தியாகதீபம் திலீபனின் 26 ஆவது ஆண்டு நினைவுநாள் ஈழத்திலும், புலம்பெயர் தேசம் எங்கும் அனுஷ்டிக்கப்பட்டது. மிகவும் உணர்வெழுச்சியுடன் நினைவுநாள் அனுஷ்டிக்கப்பட்டது.
யாழ்.பல்கலைக் கழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் தியாகதீபம் திலீபனின் வர்ணச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. அத்துடன் யாழ்.பல்கலைக்கழகத்தில் பிரத்தியேக இடத்தில் திலீபனின் நினைவு நாள் மாணவர்களால் அனுஷ்டிக்கப்பட்டது. (வ-5)

# பூநகரி வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர் இல்லை

### சிகிச்சை பெற முடியாது மக்கள் திண்டாட்டம்



வலி.தென்மேற்கு, செப். 27
பூநகரியில் இயங்கும் ஆதார வைத்தியசாலையில் கடந்த இரு வருடங்களுக்கு மேலாக நிரந்தர வைத்தியர் இல்லாததாலும் வாரத்தில் 3 தினங்கள் மட்டும் மாலை நேரத்தில் இயங்குவதாலும் அந்தப் பகுதியில் வசிக்கும் மக்கள் உரிய சிகிச்சை பெற முடியாமல் திண்டாடுகின்றனர்.
வைத்தியசாலை வாரத்தில் ஆறு தினங்களும் இயங்காததால் நோயால் பாதிக்கப்பட்ட ஏழை மக்கள் பணத்தைச் செலவு செய்து சாவகச்சேரி, யாழ்ப்பாணம் ஆகிய தூர இடங்களுக்குச் செல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.
போர்ச் சூழல் காரணமாக பூநகரியிலிருந்த ஆதார வைத்தியசாலை இயங்க முடியாதவாறு முற்றாகச் சேதமடைந்துள்ளதால் மீள்குடியேறியவர்களின் நன்மைகருதி, குறித்த வைத்தியசாலை தனியார் வீட்டில் வசதியீனங்கள் மத்தியில் இயங்கி வருகிறது.
குறித்த வைத்தியசாலையில் ஆரம்ப காலத்திலிருந்து கடமையாற்றி வந்த வைத்தியர் இடமாற்றம் செய்யப்பட்டு இரு வருடங்களுக்கு மேலாகியும் நிரந்தர வைத்தியர் நியமிக்கப்படவில்லை. அக்கராயன் வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர் வாரத்தில் மூன்று தினங்கள் மட்டும் மாலை நேரத்தில் பூநகரி வைத்தியசாலையில் கடமையாற்றுகின்றார்.
வைத்தியரின் வருகைக்காக காலையிலிருந்து நண்பகல் வரை காத்திருக்கும் மக்கள் ஏமாற்றத்துடன் வீடு செல்கிறார்கள். சீரான வைத்திய சேவையின்றி அல்லற்படும் மக்கள் நிரந்தர வைத்தியர் ஒருவரை குறித்த வைத்தியசாலையில் நியமிக்குமாறு அதிகாரிகளைக் கோரியுள்ளனர். (வ-115)

## மண் இலையான் தொல்லை நீங்கியது நெடுந்தீவில்

வலி.தென்மேற்கு, செப்.27
நெடுந்தீவுப் பிரதேசத்தில் வசிக்கும் மக்களை ஆட்டிப் படைத்த மண் இலையான் சுகாதாரப் பகுதியினர் மேற்கொண்ட நடவடிக்கையைத் தொடர்ந்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.
நெடுந்தீவுப் பிரதேசத்தில் லட்சக் கணக்காகக் குடிகொண்டிருந்த மண் இலையான்களால் அங்கு வசிக்கும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர். நிலத்திலிருந்து 3 அடி உயரம் வரை பறக்கும் இந்த இலையான்கள் மக்களின் உடம்பில் கூட்டம் கூட்டமாக இருந்து கடிப்பதால் மக்கள் பெரும் அவஸ்தைக்குள்ளாகினர்.
இந்த மண் இலையான்களின் தொல்லை குறித்து சுகாதாரப் பகுதியினருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து அங்கு விரைந்து சென்ற சுகாதாரப் பகுதியினர் புகையூட்டல் நடவடிக்கையை மேற்கொண்டதனால் இலையான்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.
மண் இலையான்களின் தொல்லையால் அவஸ்தைப்பட்ட மக்கள் தற்போது நிம்மதியடைந்துள்ளனர். (வ-115)

# வசதி குறைந்த மாணவர்கள் 25 பேருக்கு மாதாந்த நிதியுதவி

### *மாந்தை கிழக்கு உதவி அரச அதிபர் பணிமனையில் ஆரம்ப நிகழ்வு*



முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு மாதாந்தம் நிதியுதவி வழங்கும் ஆரம்ப நிகழ்வு மாந்தை கிழக்கு உதவி அரச அதிபர் அலுவலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் சமூக சேவை உத்தியோகத்தர் க.குணசிங்கம் தலைமையில் இடம்பெற்றது.
மேற்படி நிகழ்வில் முதன்மைச் சுடரினை முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன் ஏற்றி வைத்தார்.
வறிய குடும்பங்களைச் சேர்ந்த 25 மாணவரகளுக்கு மாதாந்தம் 1000 ரூபா வீதம் தொடர்ந்து வழங்குவதற்கு முன்னர் பாலிநகர் பகுதியில் வசித்தவரும் தற்போது புலம்பெயர்ந்து நோர்வேயில் வசிப்பவருமான மகாலிங்கம் இளையராஜா என்பவர் முன்வந்துள்ளார்
இதே போன்று பாலிநகர் பகுதியில் வசிக்கும் பிரபல தொழிலதிபரான கிருஸ்ணபிள்ளை சடாட்சரநாதன் பல்கலைக்கழகம் சென்று கல்விகற்கும் மாணவர்கள் இருவருக்கு மாதாந்தம் 5000 ரூபா வீதம் வழங்குவதற்கு முன்வந்துள்ளார்.
இந்த நிதியுதவிகளை முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் மாணவர்களுக்கு வழங்கினார்.
இந்த நிகழ்வில் சிறப்புரையை அரசாங்க அதிபர் வழங்க கருத்துரைகளை உதவி அரச அதிபர் தி.பிருந்தாகரன், தொழிலதிபர் கி.சடாட்சரநாதன் ஆகியோர் வழங்கினர். இந்த நிகழ்வில் நட்டாங்கண்டல், பாண்டியன்குளம் பாடசாலை அதிபர்கள், கோட்டக் கல்வி அதிகாரி, ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். மேலும் மாந்தை கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் அ.தனிநாயகம் உட்பட ஏனைய பிரதிநிதிகளும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (க-415)


## ச.ச.நிலையங்களில் அபிவிருத்திக்கு ரூ.3 மில்லியன் ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், செப்.27
நல்லூர் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட 48 சனசமூக நிலையங்களின் அபிவிருத் திக்கும் விளையாட்டு உபகரணங்கள் வழங்குவதற்கும் பிரதேச சபை நிதியில் இருந்து ரூபா மூன்று மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுஎன்று பிரதேசசபைத் தலைவர் ப.வசந்தகுமார் தெரிவித்தார்.
சனசமூக நிலையங்களின் அபிவிருத்தி நடவடிக்கை களுக்கு ரூபா 2 மில்லியனும், விளையாட்டு உபகரணங்களுக்கு ரூபா ஒரு மில்லியனும் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார். (ஒ-7)

## சட்டவிரோத மதுவிற்பனை மன்னாரில் 12 பேருக்கு தண்டம்

பேசாலை, செப். 27
மன்னார் மாவட்டத்தில் சட்டவிரோதமாக மதுபான விற்பனையில் ஈடுபட்ட 12 பேருக்கு 22 ஆயிரத்து 500 ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட மதுவரித் திணைக்களக் கட்டுப்பாட்டு அதிகாரி ரி.நந்தகுமார் தெரிவித்தார்.
கடந்த வாரம் மன்னார் மாவட்டத்தில் சட்டவிரோதமாக பியர் விற்பனையில் ஈடுபட்ட 2 பேருக்கும், கள் விற்பனையில் ஈடுபட்ட 8 பேருக்கும், அரச சாராயத்தை வீடுகளில் வைத்து விற்பனை செய்த 2 பேருக்கும் எதிராக மன்னார் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்த போது 22 ஆயிரத்து 500 ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டது.
பியர் விற்பனையில் ஈடுபட்ட 2 பேருக்கு தலா ஆயிரம் ரூபா வீதம் 2 ஆயிரம் ரூபாவும், கள் விற்பனையில் ஈடுபட்ட 8 பேருக்கு 10 ஆயிரத்து 500 ரூபாவும், அரச சாராயத்தை விற்பனை செய்த 2 பேருக்கு 10 ஆயிரம் ரூபாவும் தண்டப் பணம் விதிக்கப்பட்டது எனவும் தெரிவித்தார். (வ-14)

## வட்டுக்கோட்டையில் 7 வீதிகளைப் புனரமைக்கவும்



யாழ்ப்பாணம், செப்.27
வலி.மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட வட்டுக்கோட்டை பிரதேச மக்கள் மீள் புனரமைப்பு இன்றியுள்ள ஏழு வீதிகளை புனரமைப்புச் செய்து வழங்குமாறு மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத் தலைவர், அலுவலக இணைப்பாளர் பி.என்.சுதர்சன் , வலி.மேற்கு பிரதேச செயலர் அ.சோதி நாதனுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.
இது தொடர்பாக அவர் எழுதிய கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
வட்டுக்கோட்டை பிரதேச மக்கள் சந்தைவீதி, புதிய வீதி, சிவன்கோயில்வீதி, மழ வராயர் வீதி, கலைநகர் வீதி, கண்ணகை அம்மன் கோயில் வீதி, குறுக்கு வீதி என்ப வற்றை மீள் புனரமைப்புச் செய்து தருமாறு மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத் தலைவரைக் கோரியுள்ளனர்.
எனவே, மேற்படி வீதிகளை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பரிசீலனை செய்து அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-41)

# சபை அனுமதியின்றி திறக்கப்படும் கோழியிறைச்சிக் கடைகளால் திண்டாட்டம்

வலி.தென்மேற்கு, செப்.27
வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் சபையின் அனுமதியின்றி திறக்கப்படும் கோழி இறைச்சிக் கடைகளால் அதிகாரிகள் மட்டுமல்ல உறுப்பினர்களும் திண்டாடுகின்றனர்.
சண்டிலிப்பாய்ச் சந்தியில் அனுமதியின்றித் திறக்கப்பட்ட இறைச்சிக் கடை மூடப்பட்ட மறுநாள் கட்டுடைச் சந்தியில் அனுமதியின்றி திறக்கப்பட்டுள்ளதே இந்த நிலைக்குக் காரணமாகும்.
வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் கோழி இறைச்சிக்கடை திறப்பவர்கள் முன்கூட்டியே பிரதேச சபையிடம் விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பத்தைப் பரிசீலனை செய்யும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இறைச்சிக்கடை இயங்குவதற்குரிய சகல வசதிகளும் இருந்தால் மட்டுமே இயங்குவதற்கு அனுமதி வழங்குவார்கள். தற்போது இந்த நடைமுறையைப் பின்பற்றாமல் பலர் இறைச்சிக்கடை திறப்பதில் ஈடுபட்டுள்ளனர்.
தற்போது கடல் உணவுகளின் விலை அதிகரித்துள்ள அதே நேரம் ஆட்டிறைச்சியின் விலையும் பல மடங்கு அதிகரித்துள்ளது. ஆட்டுக் கடாக்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டால் மானிப்பாய் மத்திய சந்தை,ஆனைக்கோட்டை ஆகிய இடங்களில் இயங்கி வந்த ஆட்டிறைச்சிக் கடைகள் மூடப்பட்டுள்ளன.
இதனால் கோழி இறைச்சிப் பாவனையாளர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கோழி இறைச்சிக் கடைகள் திறப்பதில் பலர் ஈடு பட்டுள்ளனர். இதேவேளை கோழிப் பண்ணைகளிலும் கோழி இறைச்சி விற்கப்படுகிறது.
மானிப்பாய் மத்திய சந்தையில் கோழி இறைச்சிக்கடை இயங்குவதால் அதற்கு 500 மீற்றருக்கு அப்பால் கோழி இறைச்சிக்கடை இயங்குவதற்கு பிரதேச சபையால் அனுமதி வழங்கப்படுகிறது.
சண்டிலிப்பாய் சந்தியில் கடந்த வாரம் சட்டவிரோதமான முறையில் பிரதேச சபையின் அனுமதியின்றி இயங்கிய கோழி இறைச்சிக்கடை உறுப்பினர்கள் எடுத்துக் கொண்ட நடவடிக்கையைத் தொடர்ந்து மூடப்பட்டது. அதையடுத்து மறுநாள் கட்டுடைச் சந்தியில் பிரதேச சபையின் அனுமதியில் லாமல் கோழி இறைச்சிக் கடையொன்று திறக்கப்பட்டுள்ளது.
இது குறித்து பிரதேச சபையின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதையடுத்து கடையை மூடுவதற்கான நடவடிக்கையில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளன்ர்.
அனுமதியில்லாமல் திறக்கப்படும் கோழி இறைச்சிக் கடைகளால் அதிகாரிகள் மட்டுமல்ல உறுப்பினர்களும் சிரமங்களுக்குள்ளாகின்றனர். (வ-115)

### இலங்கைத் தமிழரின் விடியலுக்காக

# இந்திய, தமிழக அரசுகள் துணை நிற்க வேண்டும்

இலங்கை தமிழர்களுக்கு நல்லது நடக்க இந்திய, தமிழக அரசுகள் துணைநிற்க வேண்டும் என்று இவ்வார விகடன் ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் விகடன் ஆசிரியர் தலையங்கத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இது நிச்சயம் மகத்தான வெற்றி! ஒரு யுக இருளில் முளைத்த ஒற்றை வெளிச்சப் புள்ளிக்கு நிகரானது. இலங்கை வடக்கு மாகாணத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பெற்றிருக்கும் வெற்றி!

இலங்கை இராணுவத்துக்கும் -விடுதலைப்புலிகளுக்கு இடை-யிலான போர் முடிந்து நான்கு ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும், இலங்கை அரசு இலங்கைத் தமிழர்களின் காயங்களுக்கு மருந்து போடாதது மட்டுமல்லாமல், அதை மேலும் ரணமாக்கும் விதமாகச் செயற்பட்டு வந்திருக்கிறது.

இலங்கையில் தமிழர்கள் படும் அவலத்தை ஊடகங்களும் சமூக செயற்பாட்டாளர்களும் உரக்கக் கத்தியும் அது உலகத்தின் மனச் சாட்சியை இன்னும் உலுக்கவே இல்லை. இந்தநிலையில், வடக்கு மாகாணத் தேர்தலில் ராஜபக்ஷ வின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மிரட்டல்களுக்கும் பகட்டான வாக்குறுதிகளுக்கும் மசியாமல், தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு தங்கள் ஒருமித்த ஆதரவை அளித்துள்ளனர் இலங்கைத் தமிழர்கள்.

அந்த ஆதரவு தந்த வலிமையை, ஆக்கபூர்வமாக முன்னெடுத்துச் செல்லவேண் டிய மாபெரும் பொறுப்பு, வடக்கு மாகாண சபைக்கு முதல்வராகப் பதவியேற்க இருக்கும் சீ.வி.விக் னேஸ்வர னுக்கும் அந்தச் சபையின் உறுப்பினர்களுக்கும் இருக்கிறது.

அனைத்து நிலைகளிலும் தமிழர்களின் வாழ்வாதாரங்களை வலுப்படுத்தவும் எதிர்காலத்தை வழிநடத்தவும் ஆக்கபூர்வமான பணிகளை முன்னெடுக்க, அந்தச் சபை முனைப்பு காட்ட வேண்டும். இதற்கு மேலும் இலங்கையுடன் 'இராஜாங்க உறவை'ப் பேணிக்கொண்டிருப்பதில் கவனம் செலுத்தாமல், 'நல்லது நடக்கும்' என்று நம்பும் இலங்கைத் தமிழர்களின் நம்பிக்கையை நிஜமாக்க இந்திய அரசும் தமிழக அரசும் தங்கள் பொறுப்பையும் கடமையையும் உணர்ந்து செயற்பட வேண்டும்!

மக்களின் குரலுக்கு செவி சாய்க்காத அரசுகள் மண்ணோடு மண்ணாக மட்கிப் போன வரலாறு தெரியாதவர்கள் அல்ல நாம்!" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(வ)

### பொதுநலவாய மாநாட்டிலிருந்து

# இலங்கையை நீக்கக் கோரி சென்னையில் உண்ணாவிரதம்

சென்னை, செப்.27

இனப்படுகொலை மற்றும் போர்க்குற்றங்களுக்காக, இலங்கை அரசை பொதுநலவாய மாநாட்டிலிருந்து நீக்க வேண்டும். அந்த மாநாட்டைக் கொழும்பில் நடத்தக் கூடாது. மீறி நடந்தால் இந்தியாவும் பொதுநாலவாய மாநாட்டு ஏனைய உறுப்பு நாடுகளும் அதில் கலந்து கொள்ளக் கூடாது என்பது உள்ளிட்ட கோரிக் கைகளை முன்வைத்து போராட்டங்கள் நடந்து வருகின்றன. இந்தக் கோரிக்கையை முன் வைத்து தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தின் பொதுச்செயலாளர் தியாகு வரும் ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் உண்ணாவிரதம் மேற்கொள்ள இருக்கிறார். அவரது போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையிலும், தொடர்ந்து கோரிக்கைகளை வென்றெடுக்கவும், இலங்கையில் பொதுநலவாய மாநாட்டை நடத்தக் கூடாது என்ற எதிர்ப்பியக்கம் நேற்று வியாழக்கிழமை சென்னை வள்ளுவர்கோட்டத்தில் உண்ணாவிரப் போராட்டத்தை மேற்கொண்டது. இதில் விடு தலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமா வளவன், மதிமுக மல்லை சத்யா, பேராசிரியை சரஸ்வதி உள் ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (வ)

**தவறிவிட்டது**

ஆவணங்கள் அடங்கிய பிறவுன் கலர் பேர்ஸ் ஒரு தொகைப் பணத்துடன் வட்டுக்கோட்டைச் சந்திக்கும் மாவடி சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும்.(சன்மானம் வழங்கப்படும்)
தொடர்புகளுக்கு: 0771871258

**வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகளுக்கான**

✱12, 13 ஆம் திகதியில் நடைபெறவுள்ள அதிபர் தரம் I, II -I, II -II என்பவற்றுக்கானது. சனி, ஞாயிறு 9 மணிக்கு நடைபெறும்.
✱அரச முகாமைத்துவ உதவியாளர் தரம் III பரீட்சைக் கருத்தரங்கு சனி, ஞாயிறு 9 மணிக்கு.
தொடர்பு: 0754164564
யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டப்படிப்புக்கள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி, கொமர்ஷல் வங்கி அருகில்)

## பதிலடியில் இறங்கியது இந்தியா

சென்னைக்கு வட கிழக்கே 120 கடல் மைல் தூரத்தில் இலங்கையைச் சேர்ந்த துலாஜ் லக்மல் என்ற மீன்பிடிக் கப்பலை சுற்றி வளைத்தது.

இலங்கை மீன்பிடிக் கப்பல் இந்தியக் கடலோரக் காவல் படையால் சிறை பிடிக்கப் பட்டது.

இந்திய கடலோர காவல் படையின் கப்பலான விஸ் வாஸ்ட், நேற்று முன்தினம் வழக்கமான ரோந்து பணியில் ஈடுபட்டு இருந்தது. அப்போது சென்னைக்கு வட கிழக்கே 120 கடல்மைல் தூரத்தில் இலங்கையைச் சேர்ந்த துலாஜ் லக்மல் என்ற மீன்பிடிக் கப்பலை சுற்றி வளைத்தது. அந்த கப்பலில் 6 இலங்கைச் சிப்பந்திகளும், 450 கிலோ மீனும் இருந்தன.

இந்திய கடலோர காவல்படை கப்பலால் பிடிக்கப்பட்ட இந்தப் படகு சென்னை துறை-முகம் கொண்டு வரப் பட்டு இன்று வெள்ளிக்-கிழமை சென்னை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

(வ)

# மரண அறிவித்தல்கள்

## பேதுருப்பிள்ளை கிறிஸ்ரி அருமைநாயகம் (அருமை)



யாழ்ப்பாணம், சில்லாலையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், அச்சுக்கூட வீதியை வசிப்பிடமாகக் கொண்ட பேதுருப்பிள்ளை கிறிஸ்ரி அருமைநாயகம் நேற்று (26.09.2013) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நிக்கிலாம்பிள்ளை பேதுருப்பிள்ளை - பார்வரம்மா தம்பதியரின் மூத்த மகனும் பிலிப்புப்பிள்ளை - திரேசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் மேரிமாகிறேட்ரின் (றோஸ்மலர்) அன்புக் கணவரும் ஜஸ்மின் சுமங்கலா (சாம்றொக்), அன்ரன் கொலின்ஸ் (2015 கணித உயர்தர பிரிவு, புனித பத்திரிசியார் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் புஸ்பம் (இந்தியா), யசிந்தா (இந்தியா), ஜெரட்டினம், ஜீவரட்டினம் (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சந்திரா, சந்திரன், ஜேசுதாசன், ராசநாயகம், ஜோன்மார்க் ஆகியோரின் மைத்துனரும் சண்முகலிங்கத்தின் சகலனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (27.09.2013) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்திலிருந்து பி.ப. 3 மணிக்கு நல்லடக்கத்துக்காக கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*32/6, அச்சுக்கூட வீதி, யாழ்ப்பாணம்.* (32087-23) **தகவல் குடும்பத்தினர்.**

## வையித்திலிங்கம் கிருஷ்ணபிள்ளை



சுதுமலை தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் கிருஷ்ணபிள்ளை (கிருஷ்ணா ரதம் உரிமையாளர்) நேற்று (26.09.2013) வியாழக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்- தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்கள்ான சின்னப்பொடி- நாகம்மா தம்பதியரின் மருமகனும் இராசம்மாவின் அன்புக் கணவரும் குணபாலா, சந்திரபாலா, சுசீலாதேவி, வசந்தி, தனபாலா, காலஞ்சென்ற ஜெயபாலா மற்றும் சசிகலா ஆகியோரின் தகப்பனும் தங்கமணி, பஞ்சதேவி, கலியுகவரதன், இரத்தினசிங்கம், சசிலேகா, கதிர்ச்செல்வன் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"சசி பவனம்" சுதுமலை தெற்கு.* (32088-23) **தகவல்:** V.K.**தனபாலா (கிராம அலுவலர்)**

## ஆழ்வாப்பிள்ளை சங்கரப்பிள்ளை



புற்றளையைப் பிறப்பிடமாகவும் மருதங்கேணியை வசிப்பிடமாகவும் தற்போது சாரையடியில் வசித்தவருமாகிய ஆழ்வாப்பிள்ளை சங்கரப்பிள்ளை நேற்று (26.09.2013) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆழ்வாப்பிள்ளை - பொன்னாரி தம்பதியரின் அன்பு மகனும் சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும் சிவசங்கர் (சாரங்கன் பல்பொருள் வாணிபம், மந்திகை), சிவகுமார் (பிரதேச செயலகம், மருதங்கேணி) ஆகியோரின் அன்புத் தந்தையும் மோகனரூபி, வனஜா (பிரதேச செயலகம், கரவெட்டி) ஆகியோரின் பாசமிகு மாமனும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, கந்தையா, ஏரம்பு, கற்பாத்தை, பார்வதிப்பிள்ளை, இலட்சுமிப்பிள்ளை, வள்ளிப்பிள்ளை ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான பார்வதிப்பிள்ளை, கணபதிப்பிள்ளை மற்றும் அன்னபாக்கியம், இராஜேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் சாயித்தியா, சாரங்கன், ராகவன், ராகவி, கோகிலன், அனோஜன், அச்சயன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (27.09.2013) வெள்ளிக்கிழமை நடைபெற்று பூதவுடல் மு.ப. 11 மணிக்கு ஆனைவிழுந்தான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்,

*சாரையடி.*
*0776079550* (சி12170-23) **தகவல் ச.சிவகுமார் (மகன்)**

# கண்ணீர் அஞ்சலி

## அழகதுரை இரவீந்திரநாதன்

(அபிவிருத்தி உத்தியோகத்தர், மாவட்டச் செயலகம்- கிளிநொச்சி)



மனம் திறந்து பழகியெங்கள்
மனங்களில் இடம்பிடித்தாயே
தினம் நீ வந்த திட்டமிடல் செயலகம்
திணறிப் போய் கிடக்கிறதே
தேடி வந்த உறவுகளிங்கு
செய்வதறியாது தவிக்கிறதே
நாடி வந்த உறவுகளெல்லாம்
நாவிழுந்து போனதுவே!

**அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கும்**
**திட்டமிடல் பணிப்பாளரும், பணியாளர்களும்.**
**மாவட்டத் திட்டமிடல் செயலகம்- கிளிநொச்சி.**

# மரண அறிவித்தல்

## சுப்பு பரராசசிங்கம்



மறவன்புலோ மத்தி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பு பரராசசிங்கம் நேற்று (26.09.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் மறவன்புலோவைச் சேர்ந்த சுப்பு- சீதேவி தம்பதியரின் அன்பு மகனும் சின்னப்பொடியன்- சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் தவமலரின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சந்திரராசா மற்றும் சகுலராசா, தபோதரன், கோகிலா, தீபன், தமிழரசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெயந்தி, புஸ்பலலிதா, துஸ்யந்தி, நிமலறோகன் ஆகியோரின் அன்பு மாமனும் லக்சன், நிறோஜினி, சயந்தன், சரண்ராஜ், சபரீசன், கோபிகிருஸ்ணா, தனுசியா, சதுஜன், சந்தியா, திக்சனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.09.2013) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மறவன்புலோ தனிப்பனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மறவன்புலோ மத்தி,*
*சாவகச்சேரி.* (29646-23-14) **தகவல் குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

## வல்லிபுரம் ஆறுமுகம்



மீசாலை கிழக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும், மீசாலை மேற்கை வதிவிடமாகவும் கொண்ட வல்லிபுரம் ஆறுமுகம் 26.09.2013 புதன்கிழமை காலமானார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்க ளான வல்லிபுரம்-முத்துப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான ஞானசேகரம்-சிதம்பரம் தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற இராசலெட்சுமி, அருணாசலம் மற்றும் செல்லத்துரை, நடராசா ஆகியோரின் சகோதரனும், கமலேஸ்வரி, தங்கேஸ்வரி (பிரான்ஸ்), ஞானேஸ்வரி (ஜேர்மனி), குணேஸ்வரி, பரமேஸ்வரன் (ஜேர்மனி), அமரர் லோகநாதன், குகனேசன் (இத்தாலி), இராஜேஸ்வரி, ஜெகதீஸ்வரன், ஜேலட்சுமி (பிரான்ஸ்), புவனேஸ்வரி, சுதாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற யோகபாலன், பரமராசன் (பிரான்ஸ்), தனபாலகிருஷ்ணன் (ஜேர்மனி), பரமேஸ்வரி (ஜேர்மனி), தாரணி (இத்தாலி), கோமகன், சத்தியகௌரி, பரமநாதன் (பிரான்ஸ்), ரசாளன், சுரேஜினி ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.09.2013) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மீசாலை மேற்கு,**
**மீசாலை.** (C/12168) (10.14) **தகவல்: குடும்பத்தினர்.**
**T.P: 077 612 8728 (சுதா)**

## தென்மராட்சியில் ஜம்பு மரக் கன்றுகள் நடல்



தென்மராட்சி,.செப். 27
யாழ்.போதனா வைத்திய சாலை நீரிழிவு சிகிச்சை நிலையத்தினால் நீரிழிவு நோயாளிகளால் பயன்படுத்தக்கூடிய ஜம்பு மரக் கன்றுகளை தென்மராட்சிப் பிரதேசத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட் கிழமை நடப்படவுள்ளன.

இதன் பிரகாரம் தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள வைத்திய சாலைகள், பாடசாலைகள் போன்றவற்றிலும் ஜம்பு மரக் கன்றுகளை தென்மராட்சிப் பிரதேசத்தில் நடத் திட்டமிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.(வ-9)

## மண்டைதீவு வைத்தியசாலை பணிகள் துரிதகதியில்

யாழ்ப்பாணம், செப். 27
மண்டைதீவு அரசினர் வைத்தியசாலையில் நிர்மாணப் பணிகள் தற்போது துரிதப் படுத்தப்பட்டுள்ளன.

கடந்தகால போர் இடரால் குறித்த வைத்தியசாலை முற்று முழுதாக அழிக்கப்பட்டது. வைத்தியசாலை இருந்த இடத்திலேயே தற்போது புதிய கட்டடத்தில் கட்டுமானப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

குறித்த புதிய கட்டடம் சுகாதார அமைச்சின் உதவியுடன் நிர் மாணிக்கப்பட்டு வருகின்றது. (வ-17)

# உரிய சிகிச்சை இல்லை

## காசநோய் அதிகரிக்கும் அபாயம்

யாழ்ப்பாணம், செப்.27
காசநோய்க்கு உரிய சிகிச்சைகள் வழங்கப்படாத காரணத்தால் குடாநாட்டில் மீண்டும் காசநோய் அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

பண்ணையில் அமையப் பெற்றுள்ள யாழ்.மாவட்ட காசநோய்வைத்தியசாலையூடாகவே குடாநாட்டில் காச நோயால் பாதிக்கப்பட்டவர் களுக்கு சிகிச்சை வழங்கப்படுகிறது.

இந்த நிலையில் வேறு வைத்தியசாலைகளில் இருந்து காச நோய் சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டவர்களுக்கோ, தொடர்ச்சியாக கிளினிக் முறையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கோ உரிய சிகிச்சைகள் அளிக்கப்படுவதில்லை.

காசநோய் வைத்தியசாலையில் கடமையில் இருந்த காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரி 4 வருட இடமாற்றக் கொள்கையில் பண்டத்தரிப்பு வைத்திய சாலைக்கு பொறுப்பதிகாரியாக இடமாற்றம் பெற்றதையடுத்து பதில் வைத்தியர் ஒருவர் மட்டுமே தற்போது கடமையில் உள்ளார்.

காச நோய்க்காக ஒரேயொரு வைத்தியர் மட்டும் உள்ளதால் நாளாந்த சிகிச்சை மற்றும் கிளினிக் சிகிச்சை என்பவை சீராக வழங்கப்படுவதில்லை. இதனால் நோயாளர்கள் சிகிச்சைக்காகச் சென்றும் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்ல வேண்டியுள்ளது.



காச நோய்க்கான உரிய சிகிச்சைகள் வழங்கப்படாத காரணத்தால் கட்டுப்பாட்டுக்குள் இருந்த காசநோய் மீண்டும் அதிகரிக்கும் அபாயநிலை ஏற்பட்டுள்ளது. காசநோய்க்கான சளிப் பரிசோதனைகளோ, ஏனைய சிகிச்சை முறைகளோ சீராக வழங்கப்படுவதில்லை என்று பாதிக்கப்பட்ட நோயாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

சிகிச்சை முறைகள் சீராக வழங்கப்படாத காரணத்தால் தொடர்ந்து சிகிச்சை பெற்றவர்களும் சிகிச்சை பெறுவதை இடைநிறுத்தியுள்ளனர். (வ-14)

# மாற்றுத் திறனாளிகளின் திறன்களுக்கு மதிப்பளியுங்கள்

## நவீல்ட் பாடசாலை அதிபர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், செப். 27
மாற்றுத் திறனாளிகளது திறன்களுக்கும் அவர்களது உணர்வுகளுக்கும் மதிப்புக் கொடுத்து சமூகத்தினர் வழிகாட்டிகளாகச் செயற்பட முன்வர வேண்டும்.

இதனூடாக மாற்றுத் திறனாளிகள் தமது குறைகளை மறந்து தன்னம்பிக்கையுடன் செயற்படுவர் என்று கைதடி நவீல்ட் செவிப்புலன் , விழிப்புலன் இழந்தோர் பாடசாலையின் அதிபர் வி.எஸ். மகேந்திரன் தெரிவித்தார்.

சர்வதேச செவிப்புலன், விழிப்புலன் அற்றோர் தினத்தை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

> “ பாதிக்கப்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கவே உயர்ந்த பதவிகளில் கடமைக்கு அமர்த் தவோ முன் வரவில்லை. வங்கி, பல்கலைக் கழகம் போன்றவற்றில் வேலை வாய்ப்புக்கள் வழங்கப்படுவ தில்லை.

செவிப்புலன், விழிப்புலன் அற்றவர்களை சமூகம் ஏற்றுக் கொள்ளும் நிலை இன்னும் உருவாகவில்லை.

பாதிக்கப்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கவோ உயர்ந்த பதவிகளில் கடமைக்கு அமர்த்தவோ முன் வரவில்லை.

குறிப்பாக வங்கி, பல்கலைக் கழகம் போன்றவற்றில் வேலை வாய்ப்புக்கள் வழங்கப்படுவதில்லை.

இதனால் அவர்களது திறன்கள் மழுங்கடிக்கப்படுகின்றன. அத்துடன் பாடசாலைகளிலும் ஏனைய மாணவர்களைப் போன்று கல்வி, விளையாட்டுக்களில் வாய்ப்புக்கள் வழங்கப்படவேண்டும்.

இந்த மாற்றத்தை சமூகத்தில் ஏற்படுத்தினால் மாற்றுத் திறனாளிகள் தமது குறைபாடுகளை மறந்து சாதாரண மனிதர்களைப் போன்று உளத்தாக்கங்கள் இன்றிச் செயற்படுவர் -என்றார். (வ-14-ரீ)

# புல்லாந்திக் குளத்தை புனரமைக்க கோரிக்கை

தென்மராட்சி, செப். 27
சாவகச்சேரி, கல்வயல் விவசாயப் பகுதியில் நீண்ட காலமாக புனரமைக்கப்படாத புல்லாந்திக் குளத்தை புனரமைத்துத் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அந்தப் பகுதி விவசாயிகள் கேட்டுள்ளனர்.

மழை காலத்தில் குளத்தில் தேங்கியுள்ள நீரை சுமார் 200க்கு மேற்பட்ட விவசாயிகள் பயன்படுத்தி விவசாயத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

குளம் புனரமைக்கப்படாததாலும் தூர்வாரப்படாதுள்ளதாலும் குளத்துக்கு வரும் வெள்ள நீர் வாய்க்கால் வழியாக வெளியேறுவதால் கோடை காலத்தில் விளை நிலங்களில் பயிரிடுவோர் கிணறுகளிலி ருந்து பயிர்களுக்கு நீர்பாய்ச்சி வருகின்றனர்.

குறித்த பகுதி கமக்கார அமைப்பு கடந்த மூன்று வருடங்களாக குளத்தைப் புனரமைத்து தருமாறு பல தரப்பினரிடம் தொடர்பு கொண்டும் பயன் கிடைக்கவில்லையெனவும் தெரிவித்தனர்.

தமது கோரிக்கைக்கு இணங்க சாவகச்சேரி நகர சபையினர் தம்மிடம் நிதி இல்லையெனவும் தொண்டு நிறுவனங்கள் மூலம் குளத்தைப் புனரமைக்க நடவடிக்கை மேற்கொள் ளப்படுமென அறிவித்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

இதேவேளை, பிரதேச செயலகத்தால் வருடம் தோறும் குளங்கள் புனரமைப்பு தொடர்பான பதிவுகள் மேற்கொள்ளப் படுகின்ற போதிலும் இதுவரை எந்தவொரு குளமும் புனரமைக்கவில்லையெனவும் ஆதங்கம் தெரிவித்தனர். (வ-9)



# மானிய உரத்துக்கான வரி அறவீடு பயிர் காப்புறுதி வழங்குவதற்கே

## கமநல சேவை திணைக்கள அதிகாரி கருத்து

யாழ்ப்பாணம்.செப்.27
மானிய விலையில் விவசாயிகளுக்கு உரம் வழங்கும் திட்டத்தில் வரி அறவிடப்படும் நடைமுறை இந்த வருடம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளமை விவசாய நிலங்களுக்கு பயிர்க் காப்புறுதி வழங்குவதற்காகவே என்று கமநல சேவை திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வருடங்களைப் போல் அல்லாது இந்த வருடம் காலபோகத்தை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு மானிய விலையில் உரம் வழங்கப்படும் போது வரி அறவீட்டு முறைமை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இவ்வாறான வரி அறவீட்டை பெறாத காரணத்தால் காலநிலை மாற்றங்களால் பாதிப்புற்ற விவசாய நிலங்களுக்கு காப்புறுதி வழங்கமுடியாத நிலை ஏற்பட்டது.

இதன் காரணமாக கடந்த வருட காலபோகத்தில் பெரியளவில் வெள்ளப் பயிர் அழிவுகளைச் சந்தித்த விவசாயிகள் விவசாய நிலங்களுக்கான காப்புறுதியை பெறமுடியாத நிலையை எதிர் கொண்டனர்.

இந்த வருட மும் அவ்வாறன தொரு பாதிப்பை விவசாயிகள் சந்திக்காத வகையில் மானிய உரத்தை விவசாயிகளுக்கு வழங்கும் போது விவசாய நிலங்களுக்கான வரிப்பணமும் அறவிடப் படுகிறது.

> கடந்த காலங்களில் இவ்வாறான வரி அறவீட்டை பெறாத காரணத்தால் கால நிலை மாற் றங்களால் பாதிப்புற்ற விவ சாய நிலங்களுக்கு காப்புறுதி வழங்கமுடியாத நிலை ஏற்பட் டது.

இதனால் பயிர் அழிவுகளைச் சந்தித்து வரும் விவசாயிகள் பயிர்காப்புறுதிகளைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பாக அமையும் எனவும் தெரிவித்துள்ளனர். (வ-14)

# தேர்தல் கடமையில் ஈடுபட்ட ஊழியர்களுக்கு கொடுப்பனவு

அச்சுவேலி.செப்.27
வடக்கு மற்றும் வடமேல், மத்திய மாகாணங்களின் தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள் தொடர்பாக தேர்தல் ஆணையாளர் சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளார்.

தேர்தல் நடைபெற்ற தினத்தில் இருந்து (செப்ரெம்பர்-21) 60 தினங்களுக்குள் சகல கொடுப்பனவுகளும் வழங்கி முடிக்கப்பட வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

> தேர்தல் நடைபெற்ற தினத்தில் இருந்து (செப்ரெம்பர்-21) 60 தினங்களுக்கு உள்ளே சகல கொடுப்பனவுகளும் வழங்கி முடிக்கப்பட வேண்டும்.

தேர்தல் நடைபெற்ற தினத்தன்று கடமையாற்றியோருக்கு பின்வருமாறு கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு-3,000 ரூபா, சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலருக்கு-2,750 ரூபா, கனிஷ்ட தலைமை தாங்கும் அலுவலருக்கு-2,250 ரூபா, மேலதிக கனிஷ்ட தலைமை தாங்கும் அலுவலருக்கு-1,700 ரூபா, எழுது வினைஞர்களுக்கு-1,600 ரூபா, கனிஷ்ட உத்தியோகத்தர் (சிற்றூழியர்)களுக்கு-1150 ரூபா.

தேர்தலுக்கு முதல்நாள் வாக்குப் பெட்டிகளை பொறுப்பேற்றல் மற்றும் வாக்குப் பெட்டிகளை கையளித்தல் தொடர்பான பணிக்கு உதவித் தெரிவத்தாட்சி அலுவலருக்கு-750 ரூபா, சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலருக்கு-650 ரூபா, கனிஷ்ட உத்தியோகத்தருக்கு (சிற்றூழியர்)-500 ரூபா.

தேர்தல் வாக்குகள் எண்ணும் கடமையில் ஈடுபட்ட உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவு விவரம்:-

உதவித் தெரிவத்தாட்சி அலுவலருக்கு-3,500 ரூபா, சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலருக்கு-2,250 ரூபா, கனிஷ்ட தலைமை தாங்கும் அலுவலருக்கு-1,950 ரூபா, கனிஷ்ட ஊழியருக்கு (சிற்றூழியர்)-1,150 ரூபா.

கடமைகள் தொடர்பான உரிய வரவுச் சான்றிதழ் மற்றும் படிவங்கள் பொது 35 படிவம் என்பன நிரந்தர கடமை புரியும் அலுவலகத்துக்கு பொறுப்பான அதிகாரி மற்றும் ஆசிரியர்கள், அதிபர் ஊடாக தாம் தற்பொழுது பெற்றுக்கொள்ளும் மாதாந்த ஊதியத்தை உறுதிப்படுத்தி அனுப்பி வைக்க வேண்டும். (வ-11-9)

# வரி அறவீட்டால் மானிய உரம் பெறுவோர் எண்ணிக்கை குறைவு

சாவகச்சேரி கமநல சேவை நிலையத்தில் வரி அறவீட்டு முறை நடைமுறைப்படுத்தப் படுவதால் இந்த வருடம் மானிய விலையில் உரம் பெறுபவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவடைந்துள்ளது.

கடந்த காலங்களைப் போல் அல்லாது இந்த வருடம் மானிய விலையில் உரம் பெற்றுக் கொள்ளும் விவசாயிகளிடம் இருந்து விவசாய நிலங்களுக்கான ஏக்கர் வரி அறவிடப்படுகிறது. நிலங்களின் உறுதிப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் பரிசீலனை செய்து அதற்கான ஏக்கர் வரிப்பணம் செலுத்துவதற்கான பற்றுச் சீட்டு விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

வரி அறவீட்டுப் பற்றுச் சீட்டு இலக்கத்துக்கு அமைவாக பிரதேச விவசாய சம்மேளனங்கள் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டு மானிய உரம் பெறுவதற்கான அனுமதி கமநல சேவை நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

இந்த நடைமுறையில் மானிய விலையில் உரம் பெற நிலங்களுக்கு வரி செலுத்த நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதால் மானிய விலையில் உரம் பெறுவதற்கு விவசாயிகள் ஆர்வம் காட்டுவது குறைவடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-14-122)



## ரஜினியை சந்திப்பார் மோடி?



திருச்சி, செப்.27
திருச்சிக்குச் சென்றுள்ள பாரதிய ஜனதாக் கட்சியின் பிரதமர் வேட்பாளரும் குஜராத் முதல்வருமான நரேந்திர மோடியை நடிகர் ரஜினிகாந்த் சந்திக்கக் கூடும் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன.
பா.ஜ.கவின் பிரதமர் வேட்பாளரான நரேந்திர மோடி பங்கேற்கும் இளம்தாமரை மாநாடு திருச்சியில் நேற்று ஆரம்பமாகியது. திருச்சியில் தங்கியுள்ள நரேந்திர மோடியை நடிகர் ரஜினிகாந்த் சந்தித்துப் பேசக் கூடும் என்று கூறப்படுகின்றது.
திருச்சியில் நரேந்திர மோடி பா.ஜ.க. பிரமுகர்களை சந்திப்பார் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் அந்த நிகழ்ச்சி நிரல் தற்போது இரத்துச் செய்யப்பட்டுள்ளது. அனேகமாக ரஜினிகாந்த் சந்திப்புக்காகத்தான் பா.ஜ.க. பிரமுகர்கள் சந்திப்பு நிகழ்ச்சி இரத்து செய்யப்பட்டிருக்கலாம் என்று பா.ஜ.க. வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.
நரேந்திர மோடியின் நண்பரான நடிகர் ரஜினிகாந்தின் ஆதரவை அண்மைக்காலமாக வெளிப்படையாக பா.ஜ.க. கோரி வருகிறது. ஐதராபாத்தில் ரஜினிகாந்த் நண்பரான மோகன் பாபு நரேந்திர மோடியை சந்தித்திருந்தார். அதேபோல் ரஜினியின் மற்றொரு நண்பரான நடிகரும் பத்திரிகையாளருமான சோவும் நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.கவை ரஜினிகாந்த் ஆதரிக்க வேண்டுமென்றும் கோரி வருகின்றார். (ற)

சம்பா மாவட்டம்: பதில் தாக்குதல் நடத்தும் இந்திய இராணுவத்தினர்.



# தீவிரவாதிகள் தாக்குதல்

## இராணுவத்தினர் உட்பட 12 பேர் சாவு

ஶ்ரீநகர், செப்.27
ஜம்மு காஷ்மீரில் இராணுவ முகாம் மற்றும் பொலிஸ் நிலையம் என்பவற்றுக்குள் இராணுவ உடையில் புகுந்த தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் இராணுவத்தினர், பொலிஸார் உட்பட 12 பேர் உயிரிழந்துள்ளனர்.
கந்துவா மாவட்டம், ஹிராநகரில் உள்ள பொலிஸ் நிலையத்தில் முதலில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. அதில் 4 பொலிஸார் உட்பட பொதுமக்கள் இருவர் உயிரிழந்தனர். அதையடுத்து அந்த வழியாகப் பயணித்த லொறி ஒன்றை மறித்து ஏறிய துப்பாக்கிதாரிகள் ஜம்முவை நோக்கி பயணிக்குமாறு வற்புறுத்தியுள்ளனர்.
ஜம்மு செல்லும் வழியில் சம்பா மாவட்டத்தில் உள்ள இராணுவ முகாம் அருகே இறங்கிக் கொண்ட தீவிரவாதிகள், அந்த முகாம் மீது கடும் தாக்குதலை நடத்தினர். அதையடுத்து இரு தரப்புக்கும் இடையே கடும் மோதல் ஏற்பட்டது.
அந்த மோதல்களில் 6 இராணுவத்தினர் உயிரிழந்தனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. அந்தப் பகுதி தற்போதும் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களால் அதிர்ந்தவண்ணம் உள்ளது என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.
இராணுவ உடையுடன் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதை அடுத்து ஜம்மு- காஷ்மீர் மாநிலம் முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.
அமெரிக்கா சென்றிருக்கும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்- பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீபுடன் கலந்துரையாடவுள்ள நிலையில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளமை அந்தச் சந்திப்பில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று கூறப்படுகின்றது. (ற)

## மன்மோகனுக்கு அழைப்பாணை



புதுடில்லி, செப்.27
1990 ஆம் ஆண்டு பஞ்சாப்பில் நடந்த வன்முறைகள் தொடர்பான வழக்கில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு அழைப்பணை அனுப்பியுள்ளது அமெரிக்க நீதிமன்றம்.
இந்த வழக்கு சீக்கிய மனித உரிமை அமைப்பால் நியூயோர்க் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
அதனை விசாரித்த அமெரிக்க நீதிமன்றம் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிட்டுள்ளது.
தற்போது அமெரிக்காவில் தங்கியுள்ள இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு, வெள்ளை மாளிகை ஊழியர்கள் மூலமாகவோ அல்லது மன்மோகன் சிங்கின் பாதுகாவலர்கள் மூலமாகவோ அந்த அழைப்பாணையை அளிக்க சீக்கிய மனித உரிமைகள் அமைப்பு திட்டமிட்டுள்ளது. (ற)

## நவாஸ் சந்திப்பில் பயனில்லை

### சல்மான் குர்ஷித்



புதுடில்லி, செப்.27
நியூயோர்க்கில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கும் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் செரீப்புக்கும் இடையே நடைபெறவுள்ள பேச்சுக்களில் பயன் எதுவும் ஏற்படப் போவதில்லை என்று தெரிவித்துள்ளார் இந்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித்.
இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், அமெரிக்கா, பாகிஸ்தான், வங்கதேசம், நேபாளம் ஆகிய நாடுகளின் தலைவர்களைத் தனித்தனியே சந்தித்துப் பேசுகிறார்.
இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள வெளியுறவு அமைச்சர் சல் மான் குர்ஷித்.
"அண்மைக்காலமாக எல்லையில் பாகிஸ்தானின் ராணுவ அத்துமீறல்கள் அதிகரித்து வருவது குறித்து நவாஸ் ஷெரீப்பிடம் மன்மோகன்சிங் விவாதிக்க இருப்பதாக தெரிவித்தார்.
இந்தச் சந்திப்பு இரு நாட்டு உச்சிமாநாடு அல்ல என்பதால், பிரச்சினைகளுக்கு அதன் மூலம் தீர்வு கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியாது" என்று தெரிவித்தார். (ற)

## நரேந்திர மோடி வந்தால் குண்டுகள் வெடிக்கும்

### தொலைபேசியில் அச்சுறுத்தல்



திருச்சி, செப்.27
குஜாரத் முதலமைச்சர் நரேந்திர மோடி திருச்சிக்கு வந்தால் பல இடங்களில் குண்டுகள் வெடிக்கும் என்று தொலைபேசி மூலம் பொலிஸாருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
குறித்த தொலைபேசி அழைப்புத் தொடர்பாக துரித விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
பா.ஜ.கவின் இளந்தாமரை மாநாடு திருச்சியில் நேற்று ஆரம்பமாகியது. அதில் நரேந்திர மோடி மற்றும் பா.ஜ.க. தலைவர் ராஜ்நாத் சிங் ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.
இந்த நிலையில் மாநாடு நடக்கவுள்ள பகுதியில் உள்ள பொலிஸ் ஆணையாளர் அலுவலகத்துக்குத் தொலைபேசி மூலம் வெடிகுண்டு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.
பா.ஜ.க. திருச்சியில் ஏற்பாடு செய்திருக்கும் குறித்த மாநாட்டுக்கு பல தரப்பினர் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.
இந்த நிலையில் குறித்த தொலைபேசி அச்சுறுத்தல் தொடர்பாக பொலிஸார் துரித விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## பேச்சைச் சீர்குலைக்க முயற்சி

### காஷ்மீர் முதலமைச்சர் குற்றச்சாட்டு

ஶ்ரீநகர், செப்.27
ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் நடத்தப்பட்டுள்ள தாக்குதல் இந்தியா - பாகிஸ்தான் இடையிலான பேச்சுக்களைச் சீர்குலைக்கும் முயற்சி என்று குற்றஞ்சாட்டியுள்ளார் ஜம்மு-காஷ்மீர் முதலமைச்சர் உமர் அப்துல்லா.
"இராணுவ முகாம் மீதும், பொலிஸ் நிலையம் மீதும் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தியிருப்பது இந்திய - பாகிஸ்தான் அமைதிப் பேச்சுகளைச் சீர்குலைக்கும் செயல். திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் இவ்வாறான தாக்குதல்கள் கண்டிக்கத்தக்கது. தீவிரவாதிகளின் நோக்கம் இந்தியா-பாகிஸ்தான் உறவு சீராகக் கூடாது என்பதுதான்" என்று தெரிவித்துள்ளார் உமர் அப்துல்லா. (ற)



இந்தியாவின் திருவண்ணாமலை மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் நேற்றுக் காலை திடீரென நிலஅதிர்வு ஏற் பட்டது. வீடுகளில் இருந்த பாத்திரங்கள் உருண்டு விழுந்தன. இதனால் அதிர்ச்சி அடைந்த மக்கள் வீட்டை வீட்டு வெளியேறி வீதிகளில் தஞ்சமடைந்தனர். (ற)

## ஐ.நாவை முன்னிறுத்தி பிரச்சினைகளுக்குத் தீர்வு - மன்மோகன் சிங்



நியூயோர்க், செப்.27
சர்வதேச அளவிலான பொருளாதார நெருக்கடி மேற்காசிய நாடுகளில் ஏற்பட்டுள்ள அரசியல் கிளர்ச்சி உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு உலக நாடுகள் ஐ.நாவுடன் இணைந்து தீர்வுகாண வேண்டும் என்று ஐ.நா. கூட்டத் தொடரில் வலியுறுத்தவுள்ளார் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்.
தற்போது அமெரிக்கா சென்றுள்ள இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், மேற்காசிய நாடுகளில் அரசியல், பொருளாதார நிலவரம் மிகவும் மோசமாக இருப்பது சர்வதேச அளவிலான பொருளாதார நெருக்கடி போன்ற சர்வதேச சவால்களை எதிர்கொள்ள உலக நாடுகள் ஒன்றிணைந்து தீர்வுகாண வேண்டும் என்று வலியுறுத்தவுள்ளதுடன், இது தொடர்பாக ஐ.நா. பாதுகாப்பு சபை மேற்கொள்ள வேண்டிய சில சீர்திருத்த நடவடிக்கைகள் பற்றியும் வலியுறுத்துவார் என்றும் கூறப்படுகின்றது.
பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் செரீப்புடன் கலந்துரையாடவுள்ள மன்மோகன் சிங், எல்லை தாண்டிய பயங்கர வாதம் போன்ற பிரச்சினைகள் குறித்து விவாதிக்கவுள்ளார்.
போர் நிறுத்த ஒப்பந்தத்தை பாகிஸ்தான் மீறியுள்ள விவகாரம், மும்பை பயங்கரவாத தாக்குதல் சம்பவத்துக்கு காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்காதமை போன்ற விவகாரங்கள் குறித்தும் நவாஸ் ஷெரீப்புடன் மன்மோகன் சிங் பேசுவார் என்று வெளியுறவுத் துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.
இந்தப் பேச்சுக்கள் நவாஸ் ஷெரீப் அளிக்கும் பதில்களின் அடிப்படையிலேயே இரு நாடுகளுக்கிடையே அடுத்தக்கட்ட பேச்சுக்கள் அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
அதேவேளை, இந்திய நாடாளுமன்றத்தில் நிலுவையில் உள்ள இந்தியா- பங்களாதேஷ் எல்லை ஒப்பந்த சட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று அந்நாட்டுப் பிரதமர் ஷேக் ஹசினா, பிரதமர் மன்மோகன் சிங்குடன் நடைபெறும் சந்திப்பின்போது வலியுறுத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
இந்தச் சட்டத்தை விரைவில் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று இந்தியா சார்பில் உறுதியளிக்கப்படும் என்று இந்திய வெளியுறவுத் துறை அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்தன. (ற)

# வேடம் போடுகிறது ஈரான்

## அச்சப்படுகிறார் பெஞ்சமின்



ஜெருசலேம், செப்.27
ஈரான் திடீரென தனது போக்கை மாற்றியுள்ளது. அதன்வேடத்தை நம்பிவிடக் கூடாது என்று தெரிவித்துள்ளார் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன் யாஹூ.

அணு செறிவூட்டல் தொடர்பாக பேச்சு நடத்துவதற்குத் தயார் என்று ஈரான் ஜனாதிபதி ரௌஹானி அறிவித்துள்ளமை தொடர்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"ரௌஹானியின் பேச்சால் மேற்கு நாடுகள் ஏமாந்து விடக் கூடாது. அணு ஆயுதங்களை அதிகரித்துக்கொள்ள பேச்சு நடத்தும் காலத்தை ஈரான் பயன்படுத்தி கொள்ளும். இது தொடர்பாக அமெரிக்க ஜனாதிபதியை நேரில் சந்தித்துப் பேசவுள்ளேன்" என்று தெரிவித்துள்ளார் நெதன்யாஹூ. (ற)

# ரூ.90,000 அபராதம்

## பொது இடத்தில் எச்சில் துப்பியதற்காக



லண்டன், செப். 27
பொது இடத்தில் எச்சில் துப்பிய இருவருக்கு ரூபா 90 ஆயிரம் அபராதம் விதித்து அதிரடித் தீர்ப்பு வழங்கியுள்ளது பிரிட்டன் நீதிமன்றம்.

பொது இடங்களில் எச்சில் துப்புவது, சிறுநீர் கழிப்பது, செல்லப்பிராணிகளைச் சுற்ற விடுவது போன்றவற்றுக்குக் கடும் தண்டனை வழங்கப்படும் என்று கடந்த பெப்ரவரி மாதம் அறிவித்திருந்தது பிரிட்டன் அரசு.

இந்தநிலையில் பொது இடத்தில் எச்சில் துப்பிய குற்றத்துக்குக்காக பெருந்தொகை அபராதம் விதித்து அதிரடியாகச் செயற்பட்டுள்ளது நீதிமன்றம். இந்தக் குற்றத்துக்காக அவர்களுக்கு முதலில் ரூபா 30 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டது. எனினும் நீதிமன்றத்தில் குறித்த நேரத்தில் முன்னிலையாகாததால் அது ரூபா 90 ஆயிரமாக உயர்த் தப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது. நீதிமன்றத்தின் இந்த அதிரடி நடவடிக்கைக்கு மக்கள் மத்தியில் வரவேற்புக் கிடைத்துள்ளது. (ற)

நைரோபி: வணிக வளாகத்தில் மீட்கப்படும் பணயக் கைதிகள்



# 136 பணயக் கைதிகள் சாவு

## கென்ய இராணுவத்தின் தாக்குதலே காரணம்
## அல் - சாஹாப் இயக்கம் பரபரப்புத் தகவல்

நைரோபி, செப். 27
வணிக வளாகத்தில் இருந்தவர்களை மீட்பதாகக் கூறி கென்ய இராணுவம் நடத்திய மூர்க்கத்தனமான தாக்குதலில் 136 பணயக் கைதிகள் கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கி உயிரிழந்தனர் என்று தாக்குதலுக்கு பொறுப்பேற்றுள்ள அல் - சஹாப் அமைப்பு பரபரப்புத் தகவலை வெளியிட்டுள்ளது.

கென்யத் தலைநகர் நைரோபியில் உள்ள வணிக வளாகத்தில் அல் -சாஹாப் இயக்கத்தினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதுடன், அங்கிருந்தவர்களை பணயக் கைதிகளாகவும் பிடித்திருந்தனர்.

பயணக் கைதிகளை மீட்கும் முயற்சியில் இறங்கிய கென்ய இராணுவம், 80 மணி நேரப் போராட்டத்தின் பின்னர் பணயக் கைதிகள் அனைவரும் மீட்கப்பட்டனர் என்று அறிவித்துள்ளது.

இந்தநிலையில் அல் -சஹாப் அமைப்பு இந்தத் தாக்குதல் குறித்து தகவல் வெளியிட்டுள்ளது.

"பணயக் கைதிகள் உயிரிழந்த சம்பவங்கள் இராணுவத்தின் தாக்குதலாலேயே அதிகமாக நிகழ்ந்தன. தாக்குதலின்போது சக்தி வாய்ந்த வெடிகுண்டுகளை கென்ய இராணுவத்தினர் பயன்படுத்தினர். அதனால் வணிக வளாகத்தின் ஒரு பகுதி இடிந்து வீழ்ந்துள்ளது. அதற்குள் 137 பேர் சிக்குண்டு உயிரிழந்தனர்" என்று அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

குறித்த சம்பவத்தில் 69 பேர் மட்டுமே உயிரிழந்துள்ளனர் என்று கென்ய அரசு அறிவித்துள்ள நிலையில் இந்தத் தகவலால் அங்கு பரபரப்பு ஏற்பட்டுள்ளது. (ற)

# ஹெல்சிங்கி

## இது நேர்மையான நகரம்

லண்டன், செப்.27
உலகின் நேர்மையான நகரமாக பின்லாந்தின் தலைநகரான ஹெல்சிங்கி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

உலக நாடுகளின் முக்கிய நகரங்கள் 16 தேர்ந்தெடுக்கப்பட்டு அங்கு வீதியில் கைவிடப்படும் பணப்பைகளில் எத்தனை திருப்பி ஒப்படைக்கப்படுகின்றன என்ற சோதனை மேற்கொள்ளப்பட்டது.

சிறுதொகைப் பணம், தொலைபேசி இலக்கம், வர்த்தக அட்டைகள், குடும்பப் புகைப்படங்கள் போன்றவை அடங்கிய சிறிய பணப்பைகள் வணிக வளாகங்கள், நடைபாதைகள், பூங்காக்கள் போன்ற இடங்களில் போடப்பட்டன. ஒவ்வொரு நகரத்திலும் 12 பைகள் வீதம் மொத்தம் 192 பைகள் இதுபோல் போடப்பட்டன.

கைவிடப்பட்ட பைகளில் 47 வீதமான பைகள் திரும்ப ஒப்படைக்கப்பட்டன. அதில் பின்லாந்தின் தலைநகரான ஹெல்சிங்கில் 12 பைகளில் 11 திரும்ப ஒப்படைக்கப்பட்டு நேர்மையான மக்களைக் கொண்ட நகரமாக ஹெல்சிங்கி தெரிவாகியது.

இந்தியாவின் மும்பையில் 9 பைகள் திரும்ப ஒப்படைக்கப்பட்டு இரண்டாவது இடத்தைப் பிடித்தது. புடாபெஸ்ட் மற்றும் நியூயோர்க் நகரங்களில் 8 பைகள் திரும்பக் கிடைத்தன. ஆம்ஸ்டர்டாம் மற்றும் லண்டனில் ஏழும், பெர்லினில் ஆறும், வார்சாவில் ஐந்தும், சூரிச்சில் நான்கும் திரும்பக் கிடைத்தன. போர்த்துக்கலின் லிஸ்பன் நகரில் ஒரு பை மட்டுமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அதுவும் நெதர்லாந்திலிருந்து விடுமுறைக்கு வந்திருந்த தம்பதியர்களால் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

# கடவுள் துகள்கள்; கண்டறிந்தவர்களுக்கு நோபல்

நியூயோர்க், செப்.27
அணுவில் 'எலெக்டிரான்', 'புரோட்டோன்', 'நியூட்ரோன்' ஆகிய மூன்று துகள்கள் உண்டு என்பது விஞ்ஞானி ரூதர் போர்டின் கண்டுபிடிப்பு. ஆனால் அந்த அணுவுக்கு அடிப்படை 16 துகள்கள் என்று கண்டறியப்பட்டது. இந்த 16 துகள்களும்தான் அனைத்துப் பொருள்களின் இயக்கத்துக்கும் அடிப்படை எனவும் கண்டறியப்பட்டது.

ஆனால் 17ஆவது அடிப்படை துகள் என்று ஒன்று உண்டு என்று கூறி கண்டுபிடித்து அதை உலகுக்கு அறிவித்தவர் இங்கிலாந்து விஞ்ஞானி பீற்றர்ஹிக்ஸ்(வயது 84). அவர்தான் கண்டறிந்த துகளுக்கு 'போஸான் துகள்' என பெயரிட்டார். அதை 'கடவுள் துகள்' என்றும் 'கடவுள் இல்லாத துகள்' என்றும் கூறுவோர் உண்டு.

அந்த ஆராய்ச்சியில் பீற்றர் ஹிக்சுக்கு உதவியவர் சகவிஞ்ஞானியான பிராங்கோயிஸ் இங்கிலெர்ட் (80) ஆவார். அவர்கள் இருவருக்கும் இந்த ஆண்டு இயற்பியலுக்கான நோபல் பரிசு வழங்கப்படலாம் என்று தகவல் வெளியாகி உள்ளது. (ற)

பாகிஸ்தான் நிலநடுக்கம்: உயிரிழந்தோரின் எண்ணிக்கை 350 ஐ எட்டியுள்ளது.



இதுதான் பாகிஸ்தானில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் பலுசிஸ்தான் கத்வார் கடற்பரப்பில் புதிதாக முளைத்த குட்டித்தீவு. இது 100 சதுரமீற்றர் பரப்பளவையும், 30 அடி உயரத்தையும் கொண்டுள்ளது.(ற)

# ஒபாமா - ரௌஹானி சந்திப்பு சாத்தியமில்லை




நியூயோர்க்கில் நடைபெறும் ஐ.நா. கூட்டத் தொடரில் பங்கேற்றுள்ள ஈரான் ஜனா திபதி ரௌஹானி, அங்கு பிரான்ஸ் ஜனாதிபதி ஹொலாந்தை நேரில் சந்தித்துப் பேசினார்.

நியூயோர்க், செப்.27
சர்வதேச அளவில் பலத்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவுக்கும் ஈரானிய ஜனாதிபதி ரௌஹானிக்கும் இடையிலான சந்திப்பு நடப்பதற்குச் சாத்தியம் இல்லை என்று அமெரிக்க உயர்மட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

"இருநாட்டுத் தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்பு நடைபெறுவதற்கான திட்டம் எதுவும் இல்லை. அதாவது ஐ.நா. பொதுக்குழுக் கூட்டம் நடை பெறும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி இரு தலைவர்களும் சந்தித்துத் கொள்ளப் போதில்லை என்பதை மட் டுமே நான் குறிப்பிடுகின்றேன்" என்று அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, நியூயோர்க்கில் வைத்துக் கருத்துத் தெரிவித்துள்ள அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா "முன்னெப்போதும் இல்லாத வகையில் ஈரானின் புதிய அரசு மென்மையான போக்கைக் கடைப்பிடிக்கின்றது. அதை வரவேற்கின்றேன். ஈரானுடன் நேரடியான பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு வெளியுறவுத்துறைச் துறைச் செயலர் ஜோன் கெரிக்கு அறிவுறுத்தியுள்ளேன்" என்று தெரிவித்தார். (ற)



விமானியில்லாமல் பறக்கும் விமானமாக மாற்றப்பட்ட எப்-16 விமானம்

# பழைய எப்-16 விமானம் ஆளில்லா விமானமாகியது

நியூயோர்க், செப்.27
விமானப் படைகளில் இருந்து ஓய்வு கொடுத்து அனுப்பப்பட்ட ஜெட் போர் விமானங்களை மீண்டும் புதுப்பித்து ஆளில்லா விமானங்களாக மாற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் போயிங் விமான நிறுவனம், ஒரு எப்-16 ரக போர் விமானத்தை வெற்றிகரமாக ஆளில்லா விமானமாக மாற்றி அமைத்துள்ளதாக அறிவித்துள்ளது.

இந்த எப்-16 ரக போர் விமானம் விமானிகள் இல்லாமல் கடந்த வாரம் அமெரிக்காவில் பறக்கவிடப்பட்டது.

அமெரிக்க மாநிலமான புளோரிடாவில் இருந்து மெக்ஸிகோ வளைகுடாவிற்கு பறந்த இந்த ஆளில்லா எப்.16 விமானத்தை, தரையிலிருந்து இரண்டு அமெரிக்க விமானப்படை விமானிகள் இயக்கினர்.

இந்தத் தொழில்நுட்பக் கண்டுபிடிப்பை வைத்து, விமானப் படையினர் ஆளில்லா விமானங்களை குறிவைத்துத் தாக்கும் இலக்காக பயிற்சிகளில் பயன்படுத்த முடியும் என்று போயிங் கூறுகிறது.

கடந்த 15 ஆண்டுகளாக அரிஸோனா மாநிலத்தின் ஒரு இடத்தில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த இந்தப் பழைய விமானம் மணிக்கு 1800 கிலோமீற்றர் வேகத்தில், சுமார் 40,000 அடி உயரத்தில் பறந்தது.

இந்தப் பறத்தலின் போது அது தலைகீழாகப் பறப்பது உள்ளிட்ட பல வான் சாகசங்களையும் செய்தது. (ற)

# வேலைத்திட்ட செயலமர்வு

யாழ்ப்பாணம், செப்.27

வலயக்கல்வி அலுவலகங்கள், கோட்டக் கல்வி அலுவலகங்கள் வலுப்படுத்தும் வேலைத் திட்டத்தின் கீழ் பணிகளை நிர்ணயித்தல் தொடர்பான செயலமர்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு மாகாணக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் கோட்டக் கல்வி அலுவலர்கள், இணைப் பாளர்கள் கலந்து கொள்ளவேண்டும் என வட மாகாண மாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவித் துள்ளார். (ந-35)


## கோண்டாவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ ஞானப்பழனி முருகன் கோயில் பரிபாலன சபை

## முக்கிய அறிவித்தல்



மேற்படி ஆலயத்தில் பிரதம குருக்களாகவும் நித்திய பூசகராகவும் **சிவஸ்ரீ த. ரவீந்திரராசா குருக்கள்** (ரவீ ஐயா) அவர்கள் நியமிக்கப்பட் டுள்ளார். இவர் மட்டுமே தற்போது ஆலயத்தின் பூசைப் பணிகளைச் செய்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. ஆலயத்தின் திருப்பணி நிதிக்கும். பொருள் உதவி மற்றும் ஏனைய நிதி உதவிகளையும் ஆலய பரிபாலன சபையிடம் வழங்கி பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்வதோடு, வேறு எவரும் நிதி உதவியோ வேறு உதவிகளோ பெற்றுக் கொள்வதற்கு ஆலய பரிபாலன சபை அனுமதி தரவில்லை என்பதனையும் அறியத் தருகின்றோம்.

கோண்டாவில் கிழக்கு. ஆலய பரிபாலன சபை.

(32063) (7.6.3)

## வாடகைக்கு

வெள்ளவத்தையில் காலி வீதி நித்தியகல்யாணி ஜீவலறிக்கு எதிராக வெளி இடங்களிலிருந்து வருபவர்களுக்கு Luxary Rooms நாள் வாடகைக்கு உண்டு. ஒரு நாளைக்கு Rs. 3500/- தனிநபருக்கு ஒரு நாளைக்கு 500/- தொடர்பு Hotel Villa City

**0777 427 774**

## மணிவிழாக் காணும் நாயகியை மனமார வாழ்த்துகின்றோம்

### திருமதி நாகேஸ்வரி சிவநாதன்

(ஆசிரியை)



யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தி யாலயத்தில் பதினாறு (16) ஆண்டுகள் கடமையாற்றி 26.09.2013 வியாழக்கிழமை சேவையிலிருந்து ஓய்வுபெற்றுள்ளார். இவர் ஆரம்பபிரிவு மாணவர்களின் கல் விக்காக அர்ப்பணிப்புடன் சேவையாற்றி யதுடன், ஆரம்பபிரிவு மேற்பார்வையாள ராகவும் சிறப்பாகப் பணியாற்றியுள்ளார். அவர் நீண்ட ஆயுள்பெற்று சகல செல் வங்களுடன் இனிதாக வாழ வாழ்த்துகின் றோம்.

**பாடசாலைச் சமூகம்,**

**யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்.**

(32067)(10,3)

## English Classes

A/L முடித்து பல்கலைக்கழக அனுமதியை எதிர் பார்த்துக் காத்திருக்கும் மாணவர்களுக்கு விசேட ஆங்கில வகுப்புக்கள் பல்கலைக்கழக விரிவுரை யாளரைக் கொண்டு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

புதிய பிரிவு ஆரம்பம்
28.09.2013
8.30am

CAPSTONNE
ENGINEERING COLLEGE

ஒரு வகுப்பில் 40 மாணவர்கள் மட்டுமே (32073) (7.6.3)

*No. 01, 2nd Lane,*
*Power House Road, Jaffna.*
*(யாழ் Bus stand அருகில்)*
*021 720 1190, 077 787 4645*

## உயர்தர பரீட்சைகளின் பின்

அலுவலக பயன்பாட்டுக்கல்வி

**Advanced Diploma in Office Administration**

(Office Application, DTP, Accounting)

Duration 4 Months

Mega Special offer

CSC-ASIAN COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2008 CERTIFIED TRAINING INSTITUTION

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் 021 2225677 | சாவகச்சேரி 021 2270267 |
| கிளிநொச்சி 021 2283925 | வவுனியா 024 2226050 |

## Wanted

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல உயர்கல்வி நிறுவனமொன் றுக்கு Operations Manager ஒருவர் வேண்டப்படுகிறார்.
தகுதி : ஏதாவதொரு Degree அல்லது தொழில்சார் தகைமை, உயர்கல்வித் துறையில் அனுபவம் இருத்தல் விரும்பத் தக்கது. Public Relations மற்றும் Marketing திறன்கள் அவசியம்.
நிலையான சம்பளமும், செயல்திறன் அடிப்படையில் மேலதிக கொடுப்பனவும் வழங்கப்படும்.

தொடர்பு: 021 720 1190, 077 787 4645 (32072) (7.6.3)

## Eletrical/Electronic Engineering

CAPSTONNE இல் Electrical & Electronic Engineering புதிய பிரிவு ஆரம்பமாகி வகுப்புக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

முதற் பிரிவு மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு உத்தரவாதம்!

CAPSTONNE
ENGINEERING COLLEGE

(32071) (7.6.3)

*No. 01, 2nd Lane,*
*Power House Road, Jaffna.*
*(யாழ் Bus stand அருகில்)*
*021 720 1190, 077 787 4645*

## புதிய கட்டடம் யாழ்நகர மையத்தில் விற்பனைக்கு



புதிதாக கட்டி முடிக்கப்பட்ட 4 மாடிகளைக் கொண்ட கட்டடம் யாழ்நகரில் விற்பனைக்குண்டு.

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் (யாழ். போதனாவைத்திய சாலையில் இருந்து 60 m தூரத்தினுள், வேம்படிச் சந்திக்கு அருகில் ஸ்ரீ லங்கா இன்சூரன்ஸ் கம்பனிக்கு எதிரில்) கடை, அலுவலகம், காட்சியறை முதலியவற்றிற்கு மிகவும் ஏற்றது. ஒவ்வொரு தளமும் 700 சதுர அடி கொண்டது. (மொத்தம் 2. 800 சதுர அடி) வாகனத் தரிப்பிட வசதி. குழாய்க் கிணறு. குளியலறை. நீர்த் தாங்கி போன்ற வசதிகள் உண்டு. Lift கட்டுவதற்கும் இடமுண்டு.

(32056) (45.6.3) விலை பேசித் தீர்மானிக்கலாம்.

**தொடர்புகளுக்கு: 077 100 7231, 077 431 3588**
**Mail: thevaher@gmail.com**

## வாகனம் விற்பனைக்கு

"மஹின்றா பொலறோ மக்ஷிறக்" NPPS-xxxx. 12,000km.

தொடர்பு: 077 663 2412 (37537) (7.6.3)

## வாகனம் விற்பனைக்கு

TATA Super ACE விற்பனைக்குண்டு.

தொடர்பு:077 331 9829 (29645) (3,11.6)

## வான் விற்பனைக்கு

252-xxxx, 12 A/C, அலோவீல் வெள்ளைநிற டொல்பின் விற் பனைக்குண்டு.

தொடர்பு: 021 222 8604
075 650 8660 (32059) (7.6.3)

## தவறிவிட்டது

A.விமல் என்பவரது iPhone கிளிநொச்சியில் இருந்து யாழ்.நோக்கிவந்து கொண்டிருக்கும்போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: 077 605 6886

(சி/12161)(45.6.3)

## C/C++, Java and visual Basic classes

கொழும்பில் பிரபல Programming Language விரிவுரையாளரான ரமணன் அவர்கள் தற்போது யாழ்ப்பாணத்தில் CAPSTONNE இற்கு வருகை தருகிறார்.

CAPSTONNE
ENGINEERING COLLEGE

புதிய பிரிவு 08.10.2013 அன்று ஆரம்பம்

(32070)

*No. 01, 2nd Lane,*
*Power House Road, Jaffna.*
*(யாழ் Bus stand அருகில்)*
*021 720 1190, 077 787 4645*

## வாடகைக்குத் தேவை

வட மாகாணக் காணி நிர்வாகத்திணைக்களத்தின் அலுவலகப் பாவனைக்கு
கைதடி, அரியாலை, சுண்டுக்குளி பிரதேசங்களில் A9 வீதிக்கு அண்மித்ததாக விசாலமான அறைகளுடன் கூடிய கட்டடமொன்று வாடகைக்குத் தேவை.
3000 சதுர அடி பரப்பளவிற்கு குறையாது மின்சாரம், குடிதண்ணீர், வாகனங்கள் தரிக்கக்கூடிய காணி உடையதாக இருக்கவேண்டும்.
கட்டடத்தினை வாடகைக்கு வழங்க விரும்புவோர் கீழ்குறிப்பிடப்படும் இலக்கங்களுடன் **2013.09.30 ஆம்** திகதிக்கு முன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தொடர்புகளுக்கு:
செயலாளர்,
விவசாய அமைச்சு - வ.மா
தொலைபேசி : 021 222 0882
தொலைநகல் : 021 222 0882
மாகாணக் காணி ஆணையாளர்,
காணி நிர்வாகத் திணைக்களம் - வ.மா.
தொலைபேசி : 021 222 0836
தொலைநகல் : 021 222 0836

(c/12163) (45.6.3)

## மலிவு விலையில்

அண்ணா
உற்பத்திப் பொருள்கள்

அண்ணா கோப்பி விற்பனை நிலையம்,
256, பருத்தித்துறை றோட்,
நல்லூர்.

(சி/12160)(45.6.3)

SOS CHILDREN'S VILLAGES SRI LANKA

SOS சிறுவர் கிராமத்திற்கு நல்ல நிலையி லுள்ள HIACE வாகனம் (Without A/C) பாடசாலை சிறுவர்களுடைய போக்கு வரத்திற்கு தேவைப்படுவதால், மாதாந்த வாடகைக்குக் கொடுக்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். மாத வாடகை பேசித்தீர்மானிக்கப்படும். (32030) (3.11.6)

தொடர்பு கொள்ளவேண்டிய தொலை பேசி இல:
077 236 6106, 077 311 6602

உங்கள் முகம்,மேனி பளபளக்க வேண்டுமா? எரிகாயங்களினால் ஏற்பட்ட தழும்புகள் மாற வேண்டுமா?
இன்றே பாவியுங்கள்.

**'றோயல் ஒலிவ் ஒயில்'**
**(Product of Spain)**




உணவுத் தேவைகளுக்கு ஏற்ற சுத்தமான ஒலிவ் ஒயில்

ஏக விநியோகஸ்தர்:
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 2567

*Re Packed By:*
**Royal Industries**
No.221/1, Adamally Building,
Wolfendhal Street, Colombo-12.
T.P.: 077 727 7670

(C/12491)(5.6.3)

அனைத்துப் பார்மசிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

## முதியோர் சங்க செயற்பாட்டுக்கு பாராட்டு

அச்சுவேலி, செப். 27

வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் கிராம அலுவலர் பிரிவு வாரியாக செயற்படும் முதியோர் சங்கங்களில் கோப்பாய் வடக்கு கிராம அலுவலர் பிரிவு முதியோர் சங்கத்தின் செயற்பாட்டுக்கு பாராட்டுத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் 20 முதியோர் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு செயற்பட்டு வருகின்றன. இவற்றில் கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் செயற்பாடுகள் முன்மாதியானதும் வரவேற்கத்தக்கதுமாகும் எனப் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது.

கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் வலிகாமம் கிழக்கு முதியோர் சங்கங்களின் பேரவைப் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

பொதுக் கூட்டத்தில் கோப்பாய் வடக்கு முதியோர் சங்கம் கிராம அலுவலர் பிரிவில் உள்ள முதியவர்களின் மேம்பாட்டில் செலுத்திவரும் அக்கறை மற்றும் பொழுதுபோக்கு அம்சங்கள், வாராந்த மற்றும் மாதாந்த ஒன்றுகூடல், முதியோருக்கான சுற்றுலா வசதி என்பன தொடர்பாக பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது. இதனை ஏனைய முதியோர் சங்கங்களும் முன்மாதிரியாகக் கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டது.

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கம் அடுத்த மாதம் தனது இரண்டாவது ஆண்டு விழாவை விமர்சையாக கொண்டாடவுள்ளது. (வ-11)


## கொழும்புத்துறை 3ஆம் குறுக்குத்தெரு ஆலயத்தில் திருட்டு

யாழ்ப்பாணம், செப்.27

கொழும்புத்துறை, மூன்றாம் குறுக்குத்தெரு ஸ்ரீ சந்திர சேகரப்பிள்ளையார் ஆலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு திருட்டுச் சம்பவமொன்று இடம் பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் ஆலயத்துக்குச் சொந்தமான இரண்டு பெரிய பித்தளைக் குத்து விளக்குகள், பித்தளையில் வார்க்கப்பட்ட 5 கற்பூரச் சட்டிகள் களவாடப்பட்டுள்ளதாக நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு



தெரிவிக்கப்பட்டதை அடுத்து மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (வ-10)

# மயிலிட்டி ஆஸ்பத்திரியை மீள இயங்க வையுங்கள்

## காச நோயாளர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம்.செப்.27

கடந்த 23 வருடங்களாக செயற்படாது இருக்கும் மயிலிட்டி காசநோய் வைத்திய சாலையை மீள இயக்குவதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

1990 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் போர்ச் சூழலின் போது கைவிடப்பட்டிருந்த மயிலிட்டி காசநோய் வைத்தியசாலை 110 இற்கும் மேற்பட்ட கட்டில் வசதிகளுடன் 55 உத்தியோகத்தர்கள் கடமையாற்றக்கூடியதான வசதியைக் கொண்டிருந்தது.

வடமாகாணத்துக்கு மிகப் பெரிய காசநோய் வைத்தியசாலையாக இருந்த மயிலிட்டி காசநோய் வைத்தியசாலை போர்ச் சூழலால் முடக்கப்பட்டு கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகிறது.

இதன் காரணமாக வடமாகாணத்தில் காசநோயால் பாதிப்புறும் நோயாளர்கள் தமக்கான சிகிச்சைகளை தனித்துப் பெற முடியாமல் பொது வைத்தியசாலைகளை நாட வேண்டியுள்ளது.

சுகாதார அமைச்சால் மயிலிட்டி காசநோய் வைத்தியசாலையை இயக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தும் அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் காசநோயாளர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

> “யாழ்.மாவட்டம் உட்பட வடமாகாணத்தில் உள்ள ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும் இந்த வைத்தியசாலை மீள இயக்கப்படும் பட்சத்தில் பயன்பெறுவர்.

யாழ்.மாவட்டம் உட்பட வடமாகாணத்தில் உள்ள ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும் இந்த வைத்தியசாலை மீள இயக்கப்படும் பட்சத்தில் பயன்பெறுவர். வடமாகாணத்தில் காசநோயைக் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கு உரிய சிகிச்சை முறைகள் வழங்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, காசநோயாளர்களின் நலன்கருதி மயிலிட்டி காசநோய் வைத்தியசாலையை மீள இயக்க நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை பொதுமக்கள் கேட்டுள்ளனர். (வ-14)

# நெல்லை தகுந்த முறையில் துப்புரவாக்கிப் பயிரிடவும்

## விவசாயப் பணிப்பாளர் அறிவுறுத்தல்

அச்சுவேலி, செப். 27

"யாழ்.மாவட்ட விவசாயிகள் காலபோக பயிர்ச் செய்கைக்கு பயன்படுத்தும் விதை நெல்லை உரிய முறையில் துப்புரவு செய்து முளை திறன் கொண்ட நெல்லை விதைப்பதன் மூலம் வீரியத்துடன் கூடிய பயிர் முளைத்து கூடிய விளைச்சலைத் தரும். இந்த விடயத்தில் கூடிய கவனம் செலுத்துமாறு வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் கி.ஸ்ரீபாலசுந்தரம்பிள்ளை விவசாயிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.



யாழ்.மாவட்ட விவசாயப் பணிப்பாளர் விவசாயிகளுக்கு விடுத்துள்ள அறிவுறுத்தலில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

யாழ்.மாவட்டத்தில் இந்த வருடம் காலபோகத்தில் 11,900 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் நெற் பயிர்ச்செய்கை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்தளவு நிலத்திலும் பயிர்ச் செய்கை மேற்கொள்ளத் தேவையான நெல்லில் 70 வீதமான அளவு கடந்த வருட நெற் செய்கை மூலம் விவசாயிகள் விதை நெல்லுக்கென சேமித்து வைத்தவை. மிகுதி 30 வீதமும் விவசாயத்திணைக்களம் மற்றும் கமநல சேவைத்திணைக்களம், தனியார் விவசாயிகள் உள்ளீடு விற்பனை நிலையம் ஒப்பந்த விதை நெல் உற்பத்தியாளரிடம் இருந்து பெறப்படுகின்றன.

கடந்த வருடம் காலம் தப்பிய பெருமழையால் நெல் அறுவடையின்போது நெற் கதிர்கள் நீரில் நனைந்துள்ளன. நீரில் நனைந்த நெல்லையே காய வைத்து விவசாயிகள் விதை நெல்லுக்காக சேமித்து வைத்துள்ளனர்.

இதனால் விதை நெல்லில் சப்பி, அரை வயிறன் பீடைத் தாக்கத்துக்கு உள்ளாகியது, பௌதிகத் தாக்கத்துக்குள்ளாகிய சேதமாகிய நெல்லும் காணப்படலாம். அவற்றை உரிய முறையில் நீக்கிய பின்னர் விதை நெல்லைப் பயன்படுத்துவது வீரியமான பயிரையும் நல்ல விளைச்சலையும் தரும்.

விதை நெல்லை உப்பு நீரில் பரிகரணம் செய்வதன் மூலம் தரமான விதை நெல்லைப் பெறுவதோடு அதனைப் பயன்படுத்தி பயிர்ச்செய்கையை மேற்கொள்ளுவதன் மூலம் வீரியமான பயிரையும் அதிகூடிய விளைச்சலையும் பெற்று விவசாயிகள் நன்மை அடைய முடியும் எனத் தெரிவித்துள்ளார். (வ-11)

## வீட்டுக் கடனை முழுமையாக செலுத்தினால்தான் ஓய்வூதியம்

### மேலதிகாரியின் உத்தரவால் இளைப்பாறியவர் திகைப்பு

யாழ்ப்பாணம், செப்.27

தேசிய வீடமைப்பு அதிகார சபையிடம் பெற்ற வீடமைப்புக் கடனின் மிகுதிப் பணம் செலுத்திய பின்னரே உத்தியோகத்தரின் ஓய்வூதியக் கோவை உரிய திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

இவ்வாறு மேலதிகாரி உத்தரவிட்டதால் செய்வதறியாமல் திகைத்துள்ளார் ஓய்வுபெற்ற பணியாளர்.

இவ்வாறான சம்பவம் யாழ்.மாவட்டத்தில் உள்ள அரச திணைக்களம் ஒன்றில் இடம்பெற்றுள்ளது.

அலுவலகத்தில் பணியாற்றிய தொழிலாளி ஒருவர் வீடமைப்பு அதிகார சபையிடம் இரண்டு வருடங்களுக்கு முன்னர் பெற்ற கடனுக்காக மாதாந்தம் அவரது வேதனத்தில் ஒரு தொகைப் பணம் அற விடப்பட்டு உரிய திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டு வந்தது.

கடந்த மாதம் அந்தத் தொழிலாளி சேவையிலிருந்து இளைப்பாறிய நிலையில் தினமும்கடமை புரிந்த அலுவலகத்துக்குச் சென்று ஓய்வூதியக்கோவை அனுப்பப்பட்டுள்ளதா என விசாரித்து வருகின்றார்.

> “அந்தத் தொழிலாளி சேவையிலிருந்து இளைப்பாறிய நிலையில் தினமும் கடமை புரிந்த அலுவலகத்துக்குச் சென்று ஓய்வூதியக் கோவை அனுப்பப்பட்டுள்ளதா என விசாரித்து வருகின்றார்.

இந்த வாரம் அங்கு சென்று விசாரித்த போது வீடமைப்பு அதிகார சபையின் கடன் தொடர்பாக மிகுதியாகஉள்ளதொகையை முழுமையாகச் செலுத்துமாறும் அவ்வாறு செலுத்தத் தவறின் ஓய்வூதியத் திணைக்களத்துக்கு அனுப்பப்படும் கடிதத்தில் நிலுவையை திரட்டிய ஓய்வூதியத் தொகையில் கழிக்குமாறு குறிப்பிடப்படவுள்ளதாக வும் இந்த நிலையைத் தவிர்க்கவீடமைப்புஅபிவிருத்தி அதி கார சபையிடம் கடிதம் வாங்கி வருமாறு உத்தர விடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை குறித்த உத்தியோகத்தர் ஓய்வுபெற்ற பின்னர் இரண்டு தவணைக் கட்டணங்கள் வீடமைப்பு அதிகார சபை உத்தியோகத்தரிடம் செலுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடன் தொடர்பாக குறித்த உத்தியோகத்தருக்கும் கடன் கொடுத்த அரச நிறுவனத்துக்கும் உடன்பாடு உள்ள போதும் அலுவலக அதிகாரி ஓய்வூ தியரின் ஓய்வூதியக் கோவை யையே உரிய நடவடிக்கைக்கு அனுப்பாமல் தடுத்து வைத்திருப்பது பெரியளவிலான மனித உரிமை மீறலாகும். இதற்கு உரிய அதிகாரி கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. (வ)

நல்லூர் பிரதேச சபைக்கான காணியில்

## ஆயுள்வேத வைத்தியசாலை புதிய கட்டடம் அமைக்கப்படும்

யாழ்ப்பாணம்.செப்.27

நல்லூர் பிரதேச சபைக்குரிய காணியில் ஆயுள்வேத வைத்தியசாலைக்கான புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளதாக நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் தெரிவித்தார்.

கோண்டாவில் இருபாலை வீதியில் அமைந்துள்ள இந்தக் காணியில் ஆயுள்வேத வைத்தியசாலைக்கான கட்டடம் அமைப்பதுடன் மூலிகைத் தோட்டமும் அமையவுள்ளதாகவும் திருநெல்வேலி சந்தையைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சந்தை புனரமைப்புக்கு ரூபா ஏழு மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் சந்தையின் திருத்தப் பணிகள் பூர்த்தியடைந்ததும் மக்கள் தமக்குத் தேவையான பொருள்களை சிரமமின்றிப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும் எனவும் நெருக்கடியின்றி மக்கள் தமக்குத் தேவையானவற்றைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக மரக்கறி, மீன்கடைகள், பழக் கடைகள் என்பன அமையும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (வ-7)

## கடல் உணவுகளுக்கு கிராக்கி அதிகரிப்பு

யாழ்ப்பாணம், செப்.27

யாழ்.குடாநாட்டில் கடலுணவுகளின் விலைகள் திடீரென அதிகரித்துள்ளதால் அவற்றுக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது.



தற்போதைய சீரற்ற காலநிலை கடல் கொந்தளிப்பு போன்றவற்றின் காரணத்தால் பிடிபடும் மீன்களின் தொகை குறைவடைந்துள்ளதாக மாவட்டக் கடற்றொழில் நீரியல்வள திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடல் உணவுகளின் பிடிபாடு குறைந்து காணப்படுவதுதான் அவற்றின் விலை சடுதியாக அதிகரித்துள்ளமைக்கு முக்கிய காரணம் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

கடல் உணவுகளின் தட்டுப்பாடு, அதிக விலை போன்ற காரணத்தால் நுகர்வோர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக கொட்டடி, பாஷையூர், சின்னக்கடை, நாவாந்துறை போன்ற மீன் சந்தைகளில் கடல் உணவுகளுக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது. (வ-17)

## வேதாள வெங்காயச் செய்கையை அதிகரிக்க ஏற்பாடுகள் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம்.செப்.27

யாழ்.குடாநாட்டில் வேதாள வெங்காயச்செய்கையைமேலும் அதிகரிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கென இருநூறு கிலோ வேதாள உண்மை விதையைத் தருவித்து விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்கு குடாநாட்டு விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம் ஏற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளது.



குடாநாட்டில் கடந்த போகங்களில்மேற்கொள்ளப்பட்டவேதாள வெங்காயச் செய்கை பெரும் வெற்றியளித்துள்ளது.

இந்தச் செய்கையை மேலும் ஊக்குவிக்கும் முகமாக இதற்கான உண்மை விதைகளை விவசாயத் திணைக்களத்தின் அனுசரணையுடன் தருவிக்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அனேகமான பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட இந்த வெங்காயச் செய்கை மூலம் விவசாயிகள் அதிக பயனைப் பெற்றுள்ளனர். (வ-17)

உதயன்
27/09/2013

## 69,000 ரூபாவுக்கு விலைபோன புலிச் சுறா



வாழைச்சேனை பிரதேசத்தில் இருந்து ஆழ்கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற படகொன்று 1.500 கிலோ கிராம் எடையுடைய புலிச் சுறா இன மீன் ஒன்றை புதன்கிழமை பிடித்துள்ளது.
இந்த மீன் 24 அடி நீளமும் 15 அடி சுற்றளவையும் கொண்டது என்று குறித்த படகின் உரிமையாளர் ஏ.எல்.எம். முபாறக் தெரிவித்தார்.
இந்த மீனைப் பார்வையிடுவதற்கு அதிகமானோர் வருகை தருகின்றனர் என்று அவர் கூறினார். இந்த மீன் ஏலத்தில் விடப்பட்டு 69.000 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

# மேய்ச்சல் தரைக் காணியில் அத்துமீறி மக்கள் விவசாயம்

### தடுத்து நிறுத்த கிழக்கு மாகாணசபையில் பிரேரணை



மட்டக்களப்பு.செப்.27
மட்டக்களப்பு மாவட்டத்தில், கால்நடைகளுக்குரிய மேய்ச்சல் தரைக்காணியில் விவசாயம் செய்யப்படுவதை தடுத்து நிறுத்தி, அந்த இடத்தை கால்நடைகளுக்கென வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தல் வேண்டும் என்ற தனிநபர் பிரேரணை கிழக்கு மாகாண சபையில் கொண்டு வரப்படவுள்ளது.
இந்தத் தகவலை கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம் தெரிவித்தார்.
நீண்டகாலமாக இருந்து வரும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் திங்கட்கிழமை நடைபெறவுள்ள கிழக்கு மாகாணசபை அமர்வில் இந்தத் தனிநபர் பிரேரணை கொண்டுவரப் படவுள்ளது என்று அவர் கூறினார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:
மட்டக்களப்பு, பிரதேச செயலர்களினால் வாகரை, கிரான், செங்கலடி, வவுணதீவு, பட்டிப்பளை பிரதேசசெயலக பிரிவுகளில் 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கர் மேய்ச்சல் தரைக் காணிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இந்தக் காணிகள் பரம்பரை பரம்பரையாக மேய்ச்சல் தரையாக பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன.
கடந்த காலங்களில் அண்ணளவாக ஐம்பதுஆயிரம் ஏக்கருக்கு மேல் மேய்ச்சல் தரைக் காணிகளை பயன்படுத்தி வந்தபோதும், குளங்களை அக லித்தல், விவசாயச் செய்கைக்கு காணிகளை பயன்படுத்துதல் போன்ற காரணங்களைக் காட்டி மேய்ச்சல் தரைக் காணிகள் குறைக்கப்பட்டு வருகின்றன. இதனால் ஐந்து பிரதேச செயலகப் பிரிவுகளில் அண்ணளவாக 45 ஆயிரம் ஏக்கருக்கு காணிகள் குறைக்கப்பட்டு கால் நடைகளுக்கு ஒதுக்கப்பட்டதாக அறிய முடிகின்றது.
குறைத்து ஒதுக்கப்பட்ட காணிகளையும், எல்லைப் பகுதியிலுள்ள பெரும்பான்மை மக்கள் அத்துமீறி விவசாயச் செய்கைக்கு பயன்படுத்தி வருகின்றனர்.
அதனால் கால்நடைகள் வளர்ப்பிற்கு இடமில்லாத நிலை ஏற்பட்டுள்ளது. அத்துமீறி விவசாயம் செய்கின்றவர்களால் கால்நடைகள் சுடப்படுவதும், கால் நடைகளைக் கட்டி வைத்து பணம் பறிப்பதும், கால்நடைகளைக் களவாகக் கொண்டு செல்வதும் என பாதுகாப்புத் தரப்பினர் அச்சுறுத்தல் செய்வது என்பன தொடர்ந்து நடந்து கொண்டே வருகின்றன.
எனவே இதை தடுத்து நிறுத்தி கால்நடை பண்ணையாளர்களை இந்தப் பாதிப்பிலிருந்து பாதுகாக்க இந்தப் பிரேரணையைச் சபையில் கொண்டு வருகிறேன்.-என்றார். (ச)

## சுகாதார விழிப்புணர்வு நடவடிக்கை



மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள மக்களின் சுகாதார மேம்பாட்டினை முன்னிட்டு சுகாதார விழிப்புணர்வு நடவடிக்கை மற்றும் இலவச வைத்திய முகாம் என்பன நடத்தப்பட்டது.
இந்த நடவடிக்கைகளை இலங்கை பகவான் ஸ்ரீசத்திய சாயி சேவா நிலையங்களின் மத்தியசபை மற்றும் பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையங்களின் கிழக்கு பிராந்திய இணைப்பு குழு ஆகியன இணைந்து மேற்கொண்டு வருகின்றன.
இந்தச் சுகாதார விழிப்புணர்வு நடவடிக்கை, மருத்துவ முகாம் என்பன மட்டக்களப்பு மாவட் டத்தில் அடிப்படை வசதிகள் அற்ற செங்கலடி பிரதேச செயலகத்துக்குட்பட்ட உன்னிச்சை, எட்டாம் கட்டை மற்றும் கிரான் பிரதேச செயலகத்துக்குட்பட்ட எல்லைப் பகுதியான வட முனை ஆகிய பகுதிகளில் நடத்தப்பட்டன.
இந்த மருத்துவ முகாமில் மட்டக்களப்பு போதனா வைத்திய சாலை வைத்தியர்கள், தாதியர்கள், மருந்தாளர்கள் மற்றும் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவின் பிராந்திய பல் வைத்திய நிபுணரும் கலந்து கொண்டு சேவைகளை வழங்கினர்.
பார்வைக்குறைபாடுகள் உள்ளவர்களுக்கு பரிசோதனைகள் செய்யப்பட்டு இலவச மூக்குக் கண்ணாடிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

## வலயக் கல்விப் பணிப்பாளரை உடனடியாக இடம் மாற்றுங்கள்

### ஆளுநரிடம் கோரிக்கை

மட்டக்களப்பு.செப்.27
மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப் பணிப்பாளரை உடனடியாக இட மாற்றுமாறு ஆளுநரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பாக செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஏறாவூர் நகர சபை கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.
இந்தத் தீரமானம் கிழக்கு மாகாண ஆளுநர் ரியர் அட்மிரல் மொஹான் விஜேய விக்ரமவிடம் புதன்கிழமை கையளிக்கப்பட்டுள்ளது.
மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப் பணிப்பாளரை உடனடியாக இடமாற்றுமாறு ஆளுநரிடம் கோரிக்கை விடுத்ததாக ஏறாவூர் நகர சபைத் தலைவர் அலிஸா ஹீர மௌலானா தெரிவித்தார்.
மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப் பணிப்பாளரின் நடவடிக்கைகளினால் வலயம் பின்னடைவை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)



மட்டக்களப்பு, படுவான்கரை 35 ஆம் கிராமத்துக்குள் புகுந்த காட்டுயானைகள் நாராயணர் ஆலயத்தின் களஞ்சிய அறையை உடைத்து முற்றாகச் சேதப்படுத்தியுள்ளன. (ச)

## கிழக்கின் அபிவிருத்திக்கு துருக்கி அரசு ஒத்துழைப்பு

### உடன்படிக்கை மேற்கொள்ளுங்கள் என்கிறார் தூதர் கே.ஒக்யாய்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்வி, விவசாயம், மீன்பிடித்துறை, கைத்தொழில், தொழில்நுட்பத்துறை ஆகிய ஐந்து துறைகளின் அபிவிருத்திகளுக்கு பூரண ஒத்துழைப்புகளை வழங்க துருக்கி அரசு தயாராக உள்ளது என்று துருக்கி தூதர் இஸ்கெந்தர் கே.ஒக்யாய் தெரிவித்தார்.
துருக்கி அரசுடனான புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றினூடாக பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று அவர் தெரிவித்தார். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளரும் உற்பத்திவள ஊக்குவிப்பு அமைச்சருமான பசீர் சேகுதாவூதை அவரது இல்லத்தில் சந்தித்து உரையாடியபோதே துருக்கித் தூதர் இவ்வாறு கூறினார்.
இந்தப் பேச்சின்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்தும், தற்போதைய நிலை குறித்தும் அமைச்சர் பசீர் சேகுதாவூத், துருக்கித் தூதருக்கு விரிவாகக் கூறியதுடன் நாடளாவிய ரீதியில் அமைச்சு மட்டத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்தும் விளக்கியுள்ளார்.

## விவசாயிகள் பயன்பெறுவதற்காக உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சி

விவசாய கிராமங்களை இணைத்து அதன் மூலம் 2000 விவசாயிகள் பயன் பெறக் கூடிய ஒழுங்குகளை கரித்தாஸ் எகெட் நிறுவகம் முன்னெடுத்துள்ளது. இதன் முதற்கட்டமாக நிறுவக உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிப் பட்டறை புதன்கிழமை மட்டக்களப்பு சாள்ஸ் மண்டபத்தில் நடைபெற்றது.
'சமூக அமைப்புக்களை மேம்படுத்தி நீடித்து நிலைத்திருக்கக்கூடிய விவசாயத்தை உறுதி செய்து உணவுப் பாதுகாப்பை அளித்தல்' எனும் செயற்பாடானது 2017 ஆம் ஆண்டு வரை அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் முன்னெடுக்கப்படவுள்ளது. இந்த நிகழ்வில் கொழும்பு கரித்தாஸ் செடெக் தேசிய நிறுவகத்தின் கண்காணிப்பும், மதிப்பீடும் மற்றும் திட்ட இணைப்பாளருமான நிலாணி திசேரா, எகெட் நிறுவக இயக்குநர் அருட்பணி கிறைட்டன் அவுட்ஸ்கோன், ஆளணி நிர்வாக முகாமையாளர் எஸ்.ஒ.ஜெயானந்தன், வாழ்வாதார முகாமையாளர் பி.கந்தசாமி ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரை நிகழ்த்தியுள்ளனர். (ச)

## ஹெரோயின் வைத்திருந்த ஒருவர் கைது



மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள கரபலா கிராமத்தில் ஹெரோயின் வைத்திருந்ததாகக் கூறப்படும் ஒருவரைப் பொலிஸார் புதன்கிழமை இரவு கைது செய்துள்ளனர்.
சந்தேக நபரிடமிருந்து 140 மில்லிகிராம் ஹெரோயினை காத்தான்குடி பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.
இந்தச் சம்பவம் தொடர்பில் காத்தான்குடி பொலிஸாருக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து சந்தேகநபரை கைதுசெய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.
கைப்பற்றப்பட்ட ஹெரோயினுடன் சந்தேக நபரை மட்டக்களப்பு நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்துவதற்கான நடவடிக்கையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## திருக்கோவிலில் காடழிப்பு; 31 பேர் வசமாக மாட்டினர்



மேய்ச்சல் தரைக்காக ஒதுக்கப்பட்ட பிரதேசத்தில் அத்துமீறி காடுகளை அழித்தல், ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை கண் டித்து கால்நடை வளர்ப்பாளர்கள் திருக்கோவில் பிரதேச செயலகத்தின் முன்னால் புதன்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திருக்கோவில் பிரதேச செயலகப் பிரிவின் வட்டமடு கால் நடை மேய்ச்சல் தரைப் பகுதியாக வர்த்தமானி அறிவித்தல் செய்யப்பட்டுள்ள காணிப் பகுதிக்குள் காடழிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்த 5 பெண்கள் உட்பட 31 பேர் அம்பாறை புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டு, திருக்கோவில் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.
அம்பாறை புலனாய்வுப் பிரிவு, அம்பாறை பிரிவினாவின் விகாராதிபதி சம்மேந்ததேரர், ஆலையடிவேம்பு, திருக்கோவில் கால்நடை பண்ணையாளர்கள் ஒன்றிணைந்து சட்ட விரோத காடழிப்பு நடவடிக்கைக்கு எதிராக எடுத்துக் கொண்ட நடவடிக்கையின் போதே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.
அவர்களிடமிருந்து 5 கோடரிகள் 15 வெட்டுக் கத்திகளும் கைப்பற்றப்பட்டு பொலிஸில் ஒப்படைக் கப்பட்டுள்ளன.
இந்தப் பிரதேச காடழிப்பு நடவடிக்கைக்கு எதிராக வன பரிபாலன திணைக்களம் . பொலிஸ் ஆகிய இரு தரப்பும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று திருக்கோவில் பிரதேச செயலர் வி. கோபாலரெத்தினம் தெரிவித்தார். (ச)

# இலங்கையின் நலன்களை சீர்குலைக்க அமெரிக்கா சதி

## பாதுகாப்புச் செயலாளர் குற்றச்சாட்டு

"இலங்கையின் நலன்களைச் சீர் குலைக்கும் அரசியல் நிகழ்ச்சி நிரலை கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் தொடர்ந்து முன்னெடுத்து வருகிறது" என பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ குற்றஞ்சாட்டியுள்ளார்.

வடக்கு மாகாணசபைத் தேர்தல் தொடர்பாக அமெரிக்கத் தூதரகம் வெளியிட்ட அறிக்கை குறித்து கருத்து வெளியிட்ட அவர், மேலும் தெரிவித்ததாவது:

"கடந்த மூன்று தசாப்தங்களாக தொடர்ந்த போர் முடிவுக்கு வந்த பின்னர் ஜனநாயகத்தை ஏற்படுத்த இலங்கை அரசு தனது அதிகாரங்களைக் கொண்டு எல்லாவற்றையும் செய்த போதிலும், அமெரிக்கத் தூதரகம் அவற்றை வலுவற்றதாக்கியுள்ளது.

பலகட்சிகள் கொண்டது எமது நாடு. போர் உச்சத்தில் இருந்தபோது கூட நாம் தேர்தல்களை நடத்தினோம். ஐக்கிய மக்கள் சுதந்தர முன்னணி மீது குற்றம்சாட்டுவது நியாயமற்றது. தெற்கில், அமெரிக்க தூதரகத்தின் பின்புலத்துடன் எந்தவொரு மட்டத்திலும் தேர்தல்களில் அவர்களால் வெற்றி பெற முடியாது. சில வங்குரோத்து அரசியல் கட்சி கள்கூட அமெரிக்கத் தூதரகத்தைப் போன்றே குற்றம்சாட்டுகின்றன.

18 ஆவது திருத்தச்சட்டத்தின் மூலம் இலங்கை ஜனாதிபதியின் பதவி வரம்பு நீடிக்கப்பட்டதை மேற்கு நாடுகள் விமர்சிக்கின்றன. அண்மையில் ஜேர்மனியின் ஜனாதிபதி ஏஞ்சலா மேர்க்கல், மூன்றாவது பதவிக்காலத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்குமாறு விடுதலைப் புலிகளும் அவர்களின் பிரதிநிதிகளும், தமிழ் மக்களுக்கு உத்தரவிட்ட போது, மேற்குலக சக்திகள், மௌனம் காத்தன. போரில் பிரபாகரன் உயிர் தப்பியிருந்தால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிறைக்கைதியாகவே இருந்திருக்கும். வடக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்டிருக்க முடியாது.

வடக்கு மாகாணசபைத் தேர்லில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்ற வெற்றியை, பிரிவினைவாத உணர்வுகளை ஊக்குவிப்பதாக அர்த்தம் கொள்ளப்பட்டால் மோசமான தவறாகி விடும்" என்றார் அவர்.

# பொதுநலவாய மாநாட்டை புறக்கணிக்க வேண்டாம்

## உறுப்பு நாடுகளிடம் ஆஸி. கோரிக்கை

"இலங்கையில் எதிர்வரும் நவம்பர் மாதம் இடம்பெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கும் உச்சி மாநாட்டுக்கு ஆஸ்திரேலியா முழுமையான ஆதரவளிக்கிறது" என்று அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் ஜூலி பிஷப் தெரிவித்துள்ளார்.

"இலங்கையில் மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கம் குறித்து கவலை வெளியிடப்பட்டாலும் பொதுநலவாய அரச தலைவர் கள் அனைவரும் கட்டாயம் மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டும். மனிதாபிமான உதவிகள் மற்றும் மனித உரிமைகள் குறித்த செயற்பாடுகளின் முன்னேற்றத்தை வெளிக்காட்ட இலங்கைக்கு இது ஒரு வாய்ப்பாக இருக்கும்" என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், வட மாகாண சபைத் தேர்தலை இலங்கை அரசு நடத்தி முடிந்தமைக்கும் அவர் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொண்டு அனைத்து நாடுகளும் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனப் பிரிட்டனும் கோரிக்கை விடுத்துள்ளது.

# பாகிஸ்தான் பிரதமருடன் ஜனாதிபதி மஹிந்த பேச்சு

அமெரிக்கா சென்றுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாகிஸ்தான் பிரத மர் நவாஸ் செரீப்பை நியூயோர்க்கில் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 68ஆவது கூட்டத் தொடரில் கலந்து கொள்வதற்காக நியூயோர்க் நகரில் தங்கியிருக்கும்போதே இரு தலைவர்களும் நேற்றுமுன்தினம் சந்தித்துள்ளனர்.

இச்சந்திப்பின்போது பொருளாதாரக் கூட்டுறவு உட்பட இரு நாடுகளுக் கிடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் பலப்படுத்துவதற்கான வழிகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது. இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கு இடையே இருந்துவரும் நீண்டகால நட்புறவையும் இரு தலைவர்களும் நினைவுபடுத்தினர்.

பாகிஸ்தான் பிரதிநிதிகள் குழுவில் தேசிய பாதுகாப்பு, வெளிவிவகாரங்க ளுக்கான பிரதமரின் ஆலோசகர் சர்த்தாஜ் அசீஸ், நிதி அமைச்சர் இஸ்ஹாக் தார் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் பாகிஸ்தானுக்கான நிரந்தரப் பிரதிநிதி மஸ்ஹூத் கான் ஆகியோர் உட்பட பல்வேறு உயர்மட்ட அதிகாரிகள் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இலங்கைக் குழுவில் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், நீர்ப்பாசன, நீர்வளங்கள் முகா மைத்துவ அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, இளைஞர் விவகார, திறன் விருத்தி அமைச்சர் டளஸ் அழகப்பெரும, ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி பாலித கொஹன்ன மற்றும் வெளிவிவகார அமைச்சின் மேலதிக செயலாளர் ஷெனுகா சென விரத்ன ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர்.



மறைந்த முன்னாள் பிரதமர் எஸ்.டப்ளியு.ஆர்.டீ பண்டாரநாயக்கவின் 54 ஆவது நினைவு தினம், நிட்டம்புவ ஹொரகொல்லையிலுள்ள பண்டாரநாயக்க நினைவு தூபிக்கு மலரஞ்சலி செலுத்தி இன்று 26 ஆம் திகதி வியாழக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது. நிகழ்வில் சந்திரிகாவை, சரத் பொன்சேகா சந்தித்துக்கொண்ட வேளையில்....

# நல்லிணக்கப் பயணம் ஜப்பான் ஆதரவு

வட மாகாணசபைத் தேர்தல் நடந்துள்ளதைத் தொடர்ந்து இலங்கையின் தேசிய நல்லிணக்கம் நோக்கிய நிலை யான பயணத்திற்கு ஜப்பான் ஆதரவு தெரிவித்துள்ளது.

''நடைபெற்றுமுடிந்த வடக்கு மாகாண சபைத் தேர்தல் பெரும்பாலும் அமைதியான முறையில் நடைபெற்றமை வர வேற்கத்தக்கது'' என ஜப்பானிய வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

பல வருடகால மோதல்களின் பின்னர் தேசிய நல்லிணக்கச் செயற்பாட்டில் இந்தத் தேர்தல் குறிப்பிடத்தக்கதொரு முன்னேற்றம்எனவும், இலங்கை தேசிய ஒருமைப்பாட்டை நோக்கி சீரான முன்னேற்ற பாதையில் செல்லும் என வும் ஜப்பான் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

# காலாவதியான அரசியல்வாதிகள் பொறுப்புகளை துறக்க வேண்டும்

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

மக்களின் ஆணைக்கு புறம்பாக அரசியல் நடத்த முடியாது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.


மக்களின் ஆதரவினை நேர்மையுடன் ஏற்றுக் கொள்ளும் அதேவேளை, காலாவதியான அரசியல்வாதிகள் தமது பொறுப்புக்களை துறக்க வேண்டும். மாறாக மக்களின் ஆணைக்குக்குப் புறம்பான வகையில் அரசியல் நடத்துவது பொருத்தமற்றது.

நாகரிகமடையாத காலம் முதல் மனிதனின் பலம் ஒற்றுமையாக செயற்படுவதாகும். தனிமைப்பட்டு எந்தவொரு சாதனையையும் படைக்க முடியாது.

மக்களின் விருப்பு வெறுப்புக்களை அறிந்து கொண்டு அதன் அடிப்படையில் அரசியல் நடத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கட்டுவான பிரதேசத்தில் நடை பெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# மூவாயிரம் சிறுவர்கள் நன்னடத்தைக்கு



வருடாந்தம் 2,700 முதல் 3,000 வரையான சிறுவர்கள் நன்னடத்தைக்கு உட்படுத்தப்படுவதாக சிறுவர் நன்னடத்தைகள் ஆணையாளர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

துஷ்பிரயோக சம்பவங்கள் காரணமாகவே அதிகமானோர் நன்னடத்தைக்கு உட்படுத்தப்படுவதாக நன்னடத்தைகள் ஆணையாளர் யமுனா பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பல்வேறு திருட்டுகள், போதை பொருள் விற்பனைக்காக சிறுவர்களை ஈடுபடுத்தல், பெற்றோர்களால் கைவிடப் படல் மற்றும் சிறுவர்களைத் தொழில் களில் ஈடுபடுத்துதல் போன்ற [illegible] ணங்களாலும் சிறு[illegible] நன்னடத்தைக்கு [illegible] தப்படுவதாக ஆ[illegible] சுட்டிக்காட்டியுள்ள[illegible]

பெரும்பாலா[illegible] களின் கவனயீ[illegible] கவே பிள்ளை[illegible] தைக்கு உட்படு[illegible] அவர் தெரிவித்து[illegible]

# நாகபாம்பு பெண்: பிடியாணை வாபஸ்

நாகபாம்பு பெண் நீதிமன்றுக்குச் சமுகமளித்தமையால் அவருக்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்டிருந்த பிடியா ணையை நீதிமன்றம் நேற்று வாபஸ் பெற்றுக்கொண்டது.

நாகபாம்புப் பெண்ணுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கின் தீர்ப்பு நேற்று வழங்கப்படவிருந்த நிலையில் அவர் நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கவில்லை. இதையடுத்து, பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையி லேயே நாகபாம்பு பெண் தீர்ப்பு வழங்குவதற்கு சில நிமிடங்களுக்கு முன் நீதிமன்றத்தில் ஆஜரானார். இதையடுத்து பிடியாணை வாபஸ் பெறப்பட்டது.

இந்நிலையில், மிருக வதை தடைச் சட்டத்தின் கீழ் பொலிஸாரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நவம்பர் மாதம் 7 ஆம் திகதி ஒத்திவைக்கப்பட்டதுடன், அன்றையதினம் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

# அமைச்சரின் வாகனம் மோதி காயம்

அமைச்சரின் வாகனம் மோதியதில் மூன்று வயது குழந்தை படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கொக்கரல்லையிலேயே இந்த சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

சுதேச மருத்துவத் துறை அமைச்சர் சாலிந்த திஸாநாயக்கவின் வாகனமே இவ்வாறு மோதிச் சென்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

# எயிட்ஸ் நோயாளிகள் எண்ணிக்கை இலங்கையில் வெகுவாக அதிகரிப்பு

## இதுவரை 4,500 பேர் இனங்காணல்

"உலகம்முழுவதும்எயிட்ஸ் நோயாளிகளின் எண்ணிக்கை குறைந்து வரும் நிலையில், இலங்கையில் அது வெகுவாக அதிகரித்து வருகிறது."

இந்தத் தகவலை எச்.ஐ.வி. மற்றும் எயிட்ஸ் தடுப்பு வேலைத் திட்டத்தின் பணிப்பாளர் மருத்துவர் சிசிர லியனகே தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நிலைமையைக் கட்டுப்பாட் டுக்குள் கொண்டுவருவதற்காக வைத் தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட சகல நோயாளர்களையும் எச்.ஐ.வி. பரிசோதனைக்கு உட்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

ஆபத்தான பாலுறவுகளில் ஈடுபடும் நபர்கள் இரத்த பரிசோதனைகளை செய்து கொள்வதில்லை. இதுவே இந்த நோய் வேகமாக பரவ காரணமாகியுள்ளது. 2011 ஆம் ஆண்டு 146 எயிட்ஸ் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். 2012 ஆம் ஆண்டு 186 பேர் அடையாளம் காணப்பட்டனர்.

இந்த வருடத்தில் முதல் ஆறு மாதங்களில் எயிட்ஸ் நோய் பாதிப்புக்கு உள்ளான 90 பேர் அடையாளம் காணப்பட்டனர். மொத்தமாக இது வரை 1,739 எயிட்ஸ் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இலங்கையில் மொத்தமாக 4,500 எயிட்ஸ் நோயாளர்கள் இருக்கின்றனர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது" என்றார்.

# பயங்கரவாதிகளை பாதுகாக்கும் அரசுக்கு கண்டி மக்கள் பதிலடி

## ஐக்கிய தேசிய பிக்கு முன்னணி

பயங்கரவாதிகளை பாதுகாக்கும் அரசிற்கு கண்டி தொகுதி மக்கள் சிறந்த பாடத்தைப் புகட்டியுள்ளனர் என ஐக்கிய தேசிய பிக்கு முன்னணியின் தேசிய அமைப்பாளர் அம்பன்வல ஞானாலோக்க தேரர் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

"தலதா மாளிகை மீது தாக்குதல் நடத்தி புத்த பகவானின் புனித தந்தத்தை அழிக்க நினைத்த பயங்கரவாத தலைவர்களுக்கு அரச பாதுகாப்பையும் அனுசரணையும் அரசு வழங்கி வருகிறது.

இதற்கு எதிராக மத்திய மாகாண சபைத் தேர்தலில் கண்டித் தொகுதி மக்கள் ஐக்கிய தேசியக்கட்சிக்கு வாக்களித்து அரசுக்கு சிறந்த பாடத்தைப் புகட்டியுள்ளனர். அரசின் இந்தத் தோல்வியானது ஐக்கிய தேசியக்கட்சிக்கு கடவுளின் ஆசியும் பாதுகாப்பும் இருப்பதை காட்டியுள்ளது" என்றார்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஜனநாயகம் என்ன விலை என்று கேட்கும் நிலை நாடி....

மூன்று தசாப்தங்களுக்கு முன்னர்- ஜே.ஆர். ஜெயவர்த்தனா தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் இருந்த வேளையில்- 1979 ஆம் ஆண்டில் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்ட மாவட்ட சபைகள் முறையை மீள்வித்துச் செயற்படுத்துவதற்கு, அரசாங்கம் உத்தேசித்துள்ளதாக, தகவல்கள் வெளிவந்துள்ளன.

உத்தேச மாவட்ட சபைகளுக்குப் பொறுப்பாக ஜனாதிபதியால் நியமிக்கப்படும் மாவட்ட அமைச்சர்கள் அரசியல் அதிகாரம் கொண்டவர்களாக இருப்பர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. அதேபோன்று மாவட்ட அபிவிருத்தித் திட்டங்களையும் அவர்களே வகுத்துச் செயற்படுத்துவர் என்றும் ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மாவட்ட சபைகள் தேர்தல் ஒன்றின் போதே, அப்போது ஆட்சியில் இருந்த ஐ.தே.க.தோல்வி அடைந்ததைப் பொறுக்க முடியாது, அக்கட்சியின் அமைச்சர் பிரதானிகளின் தூண்டுதலால் ஆசியாவின் அறிவுக் களஞ்சியங்களில் ஒன்றான யாழ்ப்பாணப் பொது நூலகம் தீயிட்டுப் பொசுக்கப்பட்டமை பொல்லாத சரித்திரமாகிவிட்டது.

மாவட்ட சபைகள் மற்றும் அரசினால் நியமிக்கப்படும் மாவட்ட அமைச்சர்கள் முறைமை சந்திரிகா குமாரணதுங்கா ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்திலேயே இல்லாது ஒழிக்கப்பட்ட ஒன்று.

இப்போது அந்த முறைமையை மீள்விக்க மஹிந்த அரசு உத்தேசித்திருப்பதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன. நாட்டின் இருபத்தைந்து மாவட்டங்களுக்கும் மாவட்ட அமைச்சர்களை ஜனாதிபதி நியமிப்பார் என்றும், அந்தந்த மாவட்டங்களின் அபிவிருத்தியைத் துரிதப்படுத்தும் மற்றும் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் பொறுப்புக்கள் அவர்களிடமே ஒப்படைக்கப்படும் என்றும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

இப்போதைய அரசின் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில், முன்னிலை வகிக்கும் இளம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கே மாவட்ட அமைச்சர் பதவிகள் வழங்கப்படும் என்றும் அரசல் புரசலாக தெரிவிக்கப்படுகிறது.

எதுவோ, மாவட்ட அமைச்சர்கள் முறைமையை மீள்விப்பதன் உள்நோக்கம், கடந்த வாரம் நடந்தேறிய தேர்தல் மூலம் உருவாக்கப்படும் வடக்கு மாகாண சபையை, அதன் அபிவிருத்தி மற்றும் சட்டம் ஒழுங்கு நிலைநாட்டப்படும் அதிகாரங்களை, பலவீனப்படுத்துவதே என்று கொள்வது தப்பன்று.

மாவட்ட சபைகள் (உள்ளூராட்சி) முறைமை ஒழிக்கப்பட்டு சுமார் கால் நூற்றாண்டு காலம் கழிந்த நிலையில், திடீரென மீண்டும் அதனை மீள்விப்பதில் உள்ளார்ந்த வஞ்சகத் திட்டம் இல்லாதிருக்க முடியாதே.

கடந்த வாரம் நடைபெற்ற வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (தமிழரசுக்கட்சி) அமோக வெற்றி பெற்றது என்ற உத்தியோகபூர்வ அறிவிப்பு-வர்த்தமானி மூலமான தகவல்- வெளியாவதற்கு முன்னரே மாவட்ட சபை குறித்த 'எடுப்பு' வெளிப்படுத்தப்பட்டிருப்பது உள்ளார்ந்த நோக்கம் கொண்டதன்றி, வேறென்ன?

வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு, அரசு எவ்வளவு பிகு பண்ணியது என்பதும், பின்னடித்து வந்தது என்பதும், அனைத்துலக நாடுகள் கொடுத்த பல வகை அழுத்தங்களின் பேரிலேயே அது நடந்தேறியது என்பதும் ஏற்கெனவே தெரிந்ததே. அவை எதுவும் இரகசியமன்று.

வடக்குத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி அடைந்து ஆட்சியைக் கைப்பற்றிய கையோடு, மாவட்ட அமைச்சர் பதவியை உள்நுழைத்து அதிகாரத்தின் மூக்கணாங்கயிற்றை தனது கையில் பிடித்துக் கொள்வதற்கே கொழும்பு அரசு முனைகிறது என்றே கொள்ளலாம்.

கூட்டிக் கழித்துப் பார்த்தால், வடக்கு மாகாண சபையின் செயற்பாடுகளை அமிழ்த்துவதற்கான ஆரம்பம், முன்னோட்டம் இது எனலாம்.

ஜனநாயகம், மக்களின் வாக்குகளின் வல்லமை எல்லாம் ...ம் புதையுண்டு போக, அரசு தனது நோக்கங்களை ...னும் நிறைவேற்றும் போக்கு தொடரும் என்பதற்கான ...வட்ட அமைச்சர் நியமனம் என்ற முன்னெடுப்பு. ...ம்பான்மை பலம் உள்ள அரசும் அதன் தலை ...தனையும், எப்போதும், தான் நினைத்தவாறு, ...மான வடிவத்தில் வெளிப்படையாகவோ, ...டு காதாகவே பேசிச் செயற்படுத்தலாம் எனின், ...சி என்றால், அது என்ன விலை என்ற ...மலெழுந்து நிற்கிறது!

### சாம்பலில் இருந்து மீண்டெழும்

# ஈழப் பறவையின் முதல் சிறகடித்தல்

இனப்படுகொலைப் பயங்கரங்களுக்குப் பிறகு கதறி அழக்கூட உரிமையற்று இருந்த இலங்கைத் தமிழர்கள், தங்களுக்கான அரசியலைத் தாங்களே தீர்மானிக்க அடித்தளமாக, ஓர் ஆரம்பமாக, முதல் முத்திரை வெற்றியைப் பெற்றிருக்கிறார்கள்!

இலங்கையில் 25 ஆண்டுகளுக்குப் பின்னர் நடந்த வடக்கு மாகாண சபைத் தேர்தலில் வரலாறு காணாத வெற்றி பெற்றுள்ளது, ஈழத் தமிழர்கள் ஆதரித்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு. முதல்வர் வேட்பாளராக போட்டியிட்ட சி.வி.விக்னேஸ்வரன், 1,32,255 வாக்குகள் பெற்று வென்றிருக்கிறார். 36 ஆசனங்களில் 28 ஆசனங்களை தமிழ் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்ற, ஒரு மாகாண சபையில் அதிகளவு ஆசனங்களைக் கைப்பற்றும் கட்சிக்கு, கூடுதலாக இரண்டு ஆசனங்கள் என்ற மாகாண சபையின் விதிப்படி, 30 தொகுதிகள் இப்போது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வசம்.

இந்தத் தேர்தலில் வேடிக்கையான தோல்வியைத் தழுவினார், டக்ளஸ் தேவானந்தா. தனித்து நிற்க முனைந்த டக்ளஸை அதட்டி, தனது வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடுமாறு நிர்ப்பந்தித்து களம் இறக்கினார் ராஜபக்ஷ, ஆனால், தனது செல்வாக்கு மண்டலமான ஊர்காவற்றுறையைக் கூட தமிழ் தேசியக் கூட்டமைப்பிடம் இழந்தார் டக்ளஸ்.

இலங்கைக்கு வெளியில் அரசியல் செய்யும் ஈழ அரசியல் பிரமுகர்கள், தனித் தமிழீழத்துக்குக் குறைவாக எதையும் பெற்றுக்கொள்ள மாட்டோம் என்று உறுதிகாட்ட, தமிழ் தேசியக் கூட்டமைப்போ 'தனி ஈழம்' என்ற கோரிக்கையைக் கைவிட்டு ஒன்றுபட்ட இலங்கைக்குள் தீர்வு என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்தி, அதையே தேர்தல் கோஷமாக மக்கள் மன்றத்தில் முன்வைத்தார்கள்.

சர்வாதிகார இலங்கைக்குள் எது சாத்தியமோ, அதிலிருந்து தொடங்குவது தான் புத்திசாலித்தனம் என்பதைப் புரிந்துகொண்ட மக்கள், தமிழ் தேசியக் கூட்டமைப்பினரை தங்களின் ஏக பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுத்து இருக்கிறார்கள். ஆக, இதுதான் இலங்கையின் நிதர்சனம்!

பிரபாகரனால் சாதிக்க முடியாததை, இந்தச் சம்பந்தனும் சி.வி.விக்னேஸ்வரனுமா சாதிக்கப் போகிறார்கள்?' என்ற ராஜபக்ஷவின் இறுமாப்பு உடைக்கப்பட்டு விட்டது.

**வட மாகாண சபைத் தேர்தல் வெற்றி எந்தளவுக்கு இலங்கைத் தமிழர்களின் துயர் துடைக்கும்?**

1987-இல் இந்திய-இலங்கை ஒப்பந்தம் உருவானபோது, தனித் தனியாகப் பிரிந்துகிடந்த வடக்கு - கிழக்கை ஒன்றாக்கி, ஒரே மாகாண சபையின் கீழ் கொண்டுவந்து, 1988-இல் முதல் தேர்தலை நடத்தி வரதராஜப்பெருமாளை முதல்வராக்கியது இந்தியா. அப்போது, 'இந்தியாவின் இன்னொரு மாநிலமாக மாகாண சபை இருந்தது' என்ற விமர்சனம், அரசியல் அரங்கில் முன்வைக்கப்பட்டாலும்கூட காணி, பொலிஸ் உட்பட சிவில் நிர்வாக அதிகாரங்கள் சில, அந்த மாகாண சபையின் வசம் இருந்தன.

தமிழ் மக்கள் விரும்பாத வரதராஜப் பெருமாளை, இந்தியா தனது பொம்மை முதல்வராக நியமித்ததும், புலிகள் வரதராஜப்பெருமாளை வெறுத்தார்கள். இன்னொரு பக்கம் சிங்கள ஆட்சியாளர்கள் வடக்கு-கிழக்கு இணைந்த மாகாண சபையை தமிழீழத்துக்கு நிகராகப் பார்த்தனர். இந்த இருவேறு பார்வைகள் நாளடைவில் மாகாண அமைப்பையேசெயலற்றதாக்க, 2007-இல் 'வடக்கு-கிழக்கு இணைப்பு செல்லாது' என்று கொழும்பு நீதிமன்றம் உத்தரவிட, வடக்கும் கிழக்கும் மறுபடியும் பிரிக்கப்பட்டன.

போர்க்காலத்துக்குப் பிறகு, வட மாகாண சபையை முதன்முறையாகக் கைப்பற்றி இருக்கிறது தமிழ் தேசியக் கூட்டமைப்பு. ஆனால், வட மாகாண சபை முதல்வராகப் பொறுப்பேற்க இருக்கும் சி.வி.விக்னேஸ்வரனுக்கு என்ன அதிகாரம் உள்ளது என்பது அவருக்கே தெரியாது என்பதே உண்மை. இந்தியா உருவாக்கிய ஒப்பந்தத்தின் அடிப்படையில் வகுக்கப்பட்ட உரிமைகளில் ராஜபக்ஷ மனம்வைத்து எந்த உரிமைகளைக் கொடுக்கிறாரோ, அதன் அடிப்படையிலேயே சி.வி.விக்னேஸ்வரனின் செயல்பாடுகள் அமையும்.

இது பற்றி கொழும்பில் உள்ள அரசியல் பார்வையாளர்கள் கூறும்போது, 'இலங்கை அரசு, வடக்கு மாகாண சபையை, பிரபாகரனின் சபையாகவே கருதும். இது சுதந்திரமாக இயங்க இலங்கை அரசு ஒருபோதும் அனுமதிக்காது. விரைவில் ஒவ்வொரு மாகாணத்தையும் ஆட்சிசெய்ய இலங்கை அரசு, புதிய அமைச்சர்களை நியமிக்கும் என்று கொழும்பில் பேசுகிறார்கள். அப்படிப் புதிய அமைச்சர்களை நியமித்தால், மாகாண சபைகளை நிறைத்திருக்கும் பொம்மைகளாகவே கூட்டமைப்பினர் இருக்க நேரிடும். சிங்களர்கள் ஆட்சி செய்யும் நிலை வரலாம். அதற்கேற்றால் போல சட்டத்திருத்தமும் வரலாம்!' என்கிறார்கள்.

**அனந்தி சசிதரன், இந்த வெற்றி பற்றி என்ன சொல்கிறார்?**

"சிங்கள ஆட்சியாளர்கள் மீதான மக்களின் வெறுப்பும், கொலையுண்ட மக்களின் தியாகமுமே இந்த வெற்றியை ஈட்டிக் கொடுத்திருக்கிறது. நான் தேர்தலில் போட்டிடுகிறேன் என்றவுடன், இலங்கை ராணுவப் புலனாய்வுக் குழுவின் முழுமையான கண்காணிப்பு வளையத்தின் கீழ்கொண்டு வரப்பட்டேன். ஒருநாள்கூட என்னை நிம்மதியாகத் தூங்கவிடவில்லை. 'தேர்தலை விட்டு விலகு... நாட்டைவிட்டு ஓடிப்போ' என்ற ரீதியில் மிரட்டல்கள் தொடர்ந்தன. உச்சகட்டமாக என் வீட்டுக்குள் நுழைந்து ராணுவத்தினர் தாக்கினார்கள். நானும் எனது குழந்தைகளும் உயிர் தப்பியதே அதிசயம்தான். தேர்தல் தொடங்குவதற்கு சில மணி நேரம் முன்பு, நான் ஆளும் கட்சியுடன் இணைந்து விட்டதாக 'உதயன்' என்ற பெயரில் போலி நாளிதழ் ஒன்றை அச்சிட்டு மக்களிடம் வதந்தி பரப்பினார்கள். என்னைப் பற்றிக் கேவலமாக எழுதி, துண்டுப் பிரசுரங்களையும் வெளியிட்டார்கள். இந்த வீண் அவதூறுகள் மூலம் சில வாக்குகளைச் சிதைத்தாலும், என் வெற்றியை அவர்களால் தடுக்க இயலவில்லை. காணாமல்போனோர், அரசியல் கைதிகள் விடுதலை, இழந்த வீடுகளையும் நிலங்களையும் மக்களுக்கு மீளப் பெற்றுக் கொடுத்தல் உள்ளிட்ட நிவாரணங்களுக்கு நான் முன்னுரிமை கொடுப்பேன்!" என்றார் அனந்தி சசிதரன்.

**எழுத்தாளர் சயந்தனின் தேர்தல் முடிவுகள் தொடர்பான சில கருத்துகள்**

"போர் முடிந்த இந்த நான்கு ஆண்டுகளில் கிளிநொச்சி வரை ரயில் வந்தது. சர்வதேசத் தரத்தில் சாலைகள் போடப்பட்டன. வடக்கு மாகாண மக்கள் இது வரை காணாத பல நவீன வாகனங்களைக் கண்டார்கள். ஆனால், இவை எதுவும் இந்தப் பகுதி மக்களின் மனதில் மாற்றத்தைக் கொண்டுவரவில்லை. தோற்கடிக்கப்பட்ட இனமாக தங்களை உணரும் தமிழ் மக்களின் மனக்காயங்களை, இலங்கை அரசு ஆற்றுப்படுத்தவில்லை என்ற கூட்டு மனக்காயத்தின் கொதிப்புத் தான் இந்தத் தேர்தல் முடிவுகள்.

வெளிப்படையாகப் பேசவோ, தங்களின் உரிமைக்காக உண்ணாவிரதம் இருக்கவோ கூட முடியாத வட பகுதித் தமிழ் மக்கள், வாக்குச் சீட்டுகள் மூலமாக 'எங்களுக்கு தனித்த தமிழர் தலைமை வேண்டும்' என்பதை மிகத் தெளிவாக சிங்களத் தலைமைக்கு உணர்த்தியிருக்கிறார்கள். ஆனால், இந்த வெற்றியை மக்களுக்குப் பயன்படும் வகையில் கூட்டமைப்பால் பயன் படுத்த முடியுமா என்பது, அவர்கள் முன்னுள்ள சவால்!" என்றார் சயந்தன்.

இலங்கையில் இந்தத் தேர்தல் நடந்த சனிக்கிழமை, புரட்டாதிச் சனி விரதநாள். அதிகாலை எழுந்து குளித்துக் கோயிலுக்குச் சென்று தங்களுக்கு வேண்டியதை கடவுளிடம் கேட்கும் வழக்கம் உள்ளவர்கள் ஈழத் தமிழர்கள். அந்தச் சனிக்கிழமை விரத நாளில், கோயிலுக்குச் செல்வதற்குப் பதிலாக வடபகுதி மக்கள் வாக்குச்சாவடிகளுக்குச் சென்று இழந்த அரசியல் உரிமைகளை மீட்டுக்கொள்ளும் வேண்டுதலாக தங்கள் வாக்குகளைப் பதிந்து இருக்கிறார்கள். ஈழத்தில் ஆயுதப் போராட்டம் முடிந்திருக்கலாம். ஆனால், தமிழ் மக்களை ராணுவத்தின் பலத்தால் அச்சுறுத்தியோ, அடக்கியோ கையாண்டுவிடலாம் என்ற பேரினவாதிகளின் கனவுகளை ஈழத் தமிழ் மக்கள் அடித்து நொறுக்கியிருக்கிறார்கள்.

கண்ணுக்கெட்டிய தூரம் வரை இருண்ட மேகமாகக் கவிந்திருந்த கவலைகளும் கண்ணீரும் துடைக்கப்படுமோ, இல்லையோ... ஆனால், இது சாம்பலில் இருந்து மீண்டெழும் ஈழப் பறவையின் முதல் சிறகடித்தல்.

ஈழத் தமிழர்கள் ஒன்றை மட்டும் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள், 'நாங்கள் வீழ்ந்து விடவில்லை!' "உரிமைகளை விட்டுக் கொடுக்க மாட்டோம்!"

**முதல்வர் வேட்பாளராக பெரும் வெற்றி பெற்றிருக்கும் சி.வி.விக்னேஸ்வரன் என்ன சொல்கிறார்?**

"யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் அடங்கிய வட மாகாணத்தில் 36 தொகுதிகளில் 51 பேர் போட்டியிட்டோம். பெரும்பான்மை இடங்களில் நாங்கள் வெல்வோம் என்று நம்பினோம். ஆனால், மூன்றில் இரண்டு பங்கு இடங்களில் மிகப் பெரிய வெற்றியை மக்கள் எங்களுக்கு அளித்திருக்கிறார்கள். அதிமான பலத்தை மக்கள் எங்களுக்கு அளித்திருக்கிறார்கள். இப்போது அரசோடு எங்களுக்கு உள்ள உறவுதான், மிகப் பெரிய பிரச்சினை. தமிழ் மக்கள் சுயமாக ஆள்வதையோ, தனித்து தங்களுக்கான முதல்வரைத் தேர்ந்தெடுப்பதையோ, பிரிவினைவாதமாகவே ராஜபக்ஷ அரசு கருதுகிறது. இதுதான் நாங்கள் சந்திக்கக் கூடிய மிகப் பெரிய நெருக்கடி. எங்களுடைய அதிகாரங்களை 13-ஆவது சட்டத்திருத்தத்தில் நாங்களே வரையறுத்துக்கொள்ள வேண்டிய நெருக்கடியான ஒரு பரிசோதனைக் களத்தில் உள்ளோம். தெற்கிலும் வடக்கிலும் வாழும் மக்களை நன்கு அறிந்தவன் என்ற முறையில் இலங்கை ஆட்சியாளர்களோடு உறவைப் பேணி, தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் சிலவற்றைத் தீர்க்க முடியும் என்று நம்புகிறேன். அதே நேரத்தில் தமிழ் மக்களின் உரிமைகள் எதனையும் விட்டுக்கொடுக்காமல், சுயமரியாதையோடு இதைச் சாதித்தாக வேண்டிய சிக்கலான ஓர் இடத்திலும் இருக்கிறோம். தமிழ் மக்கள் சந்திக்கும் முதன்மையான பிரச்சினைகளைத் தீர்த்துவைப்போம் என்ற நம்பிக்கை உள்ளது." என்றார்.

*நன்றி: ஆனந்தவிகடன்.*




# வரலாற்றுப் பெரும் கடமை கூட்டமைப்பின் கைகளில்

போர் முடிவுற்ற கையோடு இலங்கையில் வாழும் தமிழ் மக்களில் பெரும்பாலானவர்கள் தமது அடுத்த கட்ட நிலை தொடர்பில் குழப்பமடைந்திருந்தனர். குறிப்பாகத் தமிழ் மக்கள் தமக்கான அரசியல் எதிர்காலம் தொடர்பில் குழப்பமடைந்திருந்தனர்.

இவ்வாறு சமூக சிற்பிகள் அடைப்பின் (The Social Architects d TSA) நிறுவக உறுப்பினர்களான கிப்சன் பேற்மன் மற்றும் ராதிகா இன்னாசிமுத்து ஆகியோர் தாம் Gibson Bateman and Rathika Innasimuttu எழுதியுள்ள ஆய்வில் தெரிவித்துள்ளனர்.

இவ்வார இறுதியில் இலங்கையின் வடக்கில் இடம்பெற்ற மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது 38 ஆசனங்களில் 30 ஆனங்களைப் பெற்று வெற்றியீட்டியது. இதில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியானது ஏழு ஆசனங்களையும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒரு ஆசனத்தையும் பெற்றுக் கொண்டன.

ஆகஸ்ட் 2009இல், யாழ்ப்பாணத்தில் மாநகரசபைத் தேர்தல் நடைபெற்றது. இதில் 50.7சதவீத வாக்குகளை ஆளும் கூட்டணி பெற்றுக் கொண்டதுடன் 23 ஆசனங்களில் 13 ஆசனங்களைத் தனதாக்கிக் கொண்டது.

2010இல்இலங்கையின் நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெற்றபோது, யாழ் மாவட்டத்தின் பத்துத் தேர்தற் தொகுதிகளில் ஒன்பது தொகுதிகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது பெரும்பான்மை வெற்றியைப் பெற்றுக் கொண்டது. யாழ்ப்பாணத்தில் ஒட்டுமொத்தமாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது 44 சதவீத வாக்குகளையும், ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியானது 32 சதவீத வாக்குகளையும் பெற்றுக் கொண்ட அதேவேளையில், யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தின் பகுதியான கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது 45.51 சதவீத வாக்குகளையும் ஆளும் கூட்டணியானது 36.55 சதவீத வாக்குகளையும் பெற்றுக் கொண்டது.

யூலை 2011இல், உள்ளுராட்சிச் சபைத் தேர்தல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இடம்பெற்ற 16 உள்ளுராட்சி சபைகளுக்கான தேர்தல்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது 13 சபைகளில் வெற்றி பெற்றது. ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் கோட்டையாக விளங்கிய வேலணை, ஊர்காவற்துறை மற்றும் நெடுந்தீவு ஆகிய உள்ளுராட்சி சபைத் தொகுதிகளில் இலங்கை ஆளும் கூட்டணி வெற்றி பெற்றது. ஒட்டுமொத்தமாக இத்தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது 63 சதவீத வாக்குகளையும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியானது 34 சதவீத வாக்குகளையும் பெற்றன.

இம்மாதம் 21ஆம் திகதி இடம்பெற்ற வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் 82.8 சதவீத வாக்குகளையும் ஆளும் கூட்டணியானது 16.1 சதவீத வாக்குகளையும் பெற்றன.

மேற்கூறப்பட்டுள்ள தேர்தல் பெறுபேறுகள் எவ்வாறான போக்கைக் கொண்டுள்ளன என்பதையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கான வாக்குகள் அதிகரித்துள்ளதையும் காண்பிக்கின்றன.

இந்தத் தேர்தலில் ஆளும் அரசானது தான் தோல்வியுற்றுள்ளது என்பதை அறிந்துகொள்ள வேண்டும். அதாவது இலங்கையில்நவம்பரில்நடைபெறவுள்ள பொதுநலவாய அமைப்பின் அரச தலைவர்கள் ஒன்றுகூடும் உச்சிமாநாடு மற்றும் மார்ச் 2014இல் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 25வது அமர்வு போன்றவற்றில் அனைத்துலக சமூகத்தால் மேற்கொள்ளப்படும் அழுத்தத்தில் இருந்து இலங்கை தப்பிப்பதற்கு இத்தேர்தலில் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றிருந்திருக்க வேண்டும். இத் தேர்தலில் இலங்கை அரசானது மிகப் பெரிய தோல்வியை அடைந்துள்ளது என்பதை கற்பனை செய்து பார்ப்பதென்பது அவர்களுக்கு கடினமாக இருக்கும்.

2009இல்யாழ்ப்பாணத்தில்இடம்பெற்ற நகரசபைத் தேர்தலில் இலங்கை அரசு வெற்றி பெற்றதற்கும் தற்போது இடம்பெற்ற வடக்கு மாகாண சபைத் தேர்தலில் இலங்கை அரசு தோல்வியைச் சந்தித்தமைக்கும் இடையிலான மிகப் பெரிய வேறுபாட்டை அறிந்துகொள்ள முடிகிறது. 2009இல் 50.7 சதவீத ஆதரவைப் பெற்றிருந்த இலங்கை அரசுக்கான ஆதரவானது தற்போது 16.1 சதவீதமாகக் குறைவடைந்துள்ளது.

போர் முடிவுற்ற கையோடு இலங்கையில் வாழும் தமிழ் மக்களில் பெரும்பாலானவர்கள் தமது அடுத்த கட்ட நிலை தொடர்பில் குழப்பமடைந் திருந்தனர். குறிப்பாகத் தமிழ் மக்கள் தமக்கான அரசியல் எதிர்காலம் தொடர்பில் குழப்பமடைந்திருந்தனர். இலங்கை அரசானது தமிழ் மக்களுக்கு அரசியற் தீர்வொன்றை வழங்கி நாட்டில், மீளிணக்கப்பாட்டை ஏற்படுத்துவதாக வாக்குறுதி வழங்கிய போதிலும் தமிழ் மக்கள் தமக்கான அடுத்த கட்ட அரசியல் நகர்வு எவ்வாறிருக்கும் என்பதில் தெளிவான தீர்மானத்தை எடுக்க முடியாது குழம்பினர். நாங்கள் இதயபூர்வமாக வாக்களிப்பதானால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கே வாக்களிப்போம். நாம் அழுத்தத்தின் பேரில் வாக்களிக்க வேண்டுமெனில் நாம் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணிக்கே வாக்களிப்போம் என யூலை 2009 இல் மக்கள் சிலர் தெரிவித்திருந்தனர். தற்போது காலம் மாறிவிட்டது. இலங்கையின் வடக்கு வாழ் மக்களின் வாழ்வியலின் ஒவ்வொரு செயற்பாடுகளிலும் இலங்கை இராணுவத்தின் தலையீடுகள் காணப்படுகின்றன. இங்கு அதிகாரங்கள் மத்திய மயப்படுத்தப்பட்டுள்ளன. தனியார் காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான பல்வேறு பிரச்சினைக ளுக்கு தமிழ் சமூகம் உட்பட்டுள்ளது. தவிர, மீள் கட்டுமானம் மற்றும் அபிவிருத்திக் கோட்பாடுகள் போன்றவற் றில் தமிழ் மக்கள் பாரபட்சப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் போருக்குப் பின்னான சூழலில் தமிழ் மக்கள் கௌரவத்துடனும், அமைதியுடனும் வாழ்வதற்கான சூழல் உருவாக்கப்பட்டு தமிழ் மக்கள் சமமாக மதிக்கப்படுவதற்கான வாய்ப்பைத் தற்போதைய அரசு கொண்டிருந்தது. ஆனால் இலங்கையை ஆளும் தற்போதைய அரசானது தமிழ் மக்களின் உரிமையை மதித்து அவர்களைச் சமமாக நடத்தத் தவறிவிட்டது. எவ்வாறான அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டாலும், இந்த அபிவிருத்திகள் மக்கள் கௌரவத்துடன் வாழ்வதற்கு ஈடாகாது என வடக்கில் வாழும் தமிழ் மக்கள் இந்தத் தேர்தலின் ஊடாக ஆளும் அரசுக்கு ஒரு தெளிவான செய்தியை வழங்கியுள்ளனர்.

வடக்கு மாகாண சபையில் பெற்றுக் கொண்ட வெற்றியானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கான மிகப் பெரிய வெற்றியாகும். தற்போதைய அரசின் கோட்பாடுகளால் தமிழ் மக்கள் எவ்வளவு தூரம் அதிருப்தி யடைந்துள்ளனர் என்பதைப் பிரதிப லிக்கின்ற ஒன்றாகவே இத்தேர்தல் பெறுபேறு அமைந்துள்ளது. இது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி தொடர் பான ஒரு கருத்து வாக்கெடுப் பாகவும் காணப்படுகிறது.

முதற்தடவையாக மாகாண சபை அரசை அமைக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இது ஒரு சவாலாக இருக்கும். இதனை ஆட்சி செய்வதென்பது மிகவும் கடினமானதாக இருக்கும். மாகாணங்களுக்குப் பகிரப்பட்ட அதிகாரங்களை நீர்த்துப் போகச் செய்வதற்கான நடவடிக்கையை இலங்கை அரசு முன்னெடுக்கின்ற நிலையில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு இந்த மாகாண சபை நிர் வாகத்தை மிகவும் சவாலுடன் நடத்த வேண்டும்.


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது மூலோபாயத்துடன், யதார்த்தமாக நடந்து கொள்ள வேண்டிய தேவையுள்ளது. அத்துடன் கூட்டமைப்பானது தமக்குள் சண்டையிட்டுக் கொண்டால் அது கொழும்பிலுள்ள இலங்கை அரசுக்கு மேலும் பலம் சேர்க்கும் என்பதையும் புரிந்துகொள்ளவேண்டும். இந்நிலையில் கூட்டமைப்பானது தனது கைகளில் ஒப்படைக்கப்பட்ட இந்த வரலாற்றுக் கடமையை முன்னெடுத்துச் செல்லவேண்டும்.

*நன்றி: புதினப்பலகை*

# குறை ஒன்றும் இல்லை...

உமாசுதன், பர்ஷான்





'உடம்பில் உள்ள குறைகளெல்லாம் ஊனம் அல்ல. தன்னம்பிக்கையோடு இரு' அது தளரும் போது தட்டிக்கொடுத்து முறுக்கேற்றும் நண்பர்களைத் தேடிக் கொள். இறை நம்பிக்கையோடு இரு என்கின்றனர் பெரியோர். அந்த வகையிலே உலக ஊனம் மற்றும் செவிப்புலனற்றோர் தினம் ஒவ்வொரு வருடமும் செப்ரெம்பர் மாதம் 26 ஆம் திகதி உலகம் எங்கும் கொண்டாடப்பட்டு வருகின்றது. ஊனமுற்றவர்கள் எனக் கூறி அவர்களை சமூகத்திலிருந்து விலக்கி வைக்க முடியாது. மதிப்பளிக்க வேண்டும். அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு விட்டுக் கொடுப்புக்களை மேற்கொள்ள வேண்டும். அவர்களைச் சமூகத்தோடு ஒன்றிணைக்க வேண்டும். அதுவே எம் அனைவரதும் முக்கிய பணியாகும்.

அந்த வகையிலே கைதடியில் அமைந்துள்ள நவீல்ட் செவிப்புலன், விழிப்புலன் இழந்தோர் பாடசாலை முக்கிய பணியினை செவிப்புலன், விழிப்புலன் இழந்த மாணவர்களுக்கு ஆற்றி வருகின்றது. 1956 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20 ஆம் திகதி அங்கிலிக்கன் சபையின் கீழ் நவீல்ட் என்ற ஐரோப்பியர் செவிப் புலன் விழிப்புலன் அற்றோருக்கான பாடசாலையைத் தொடங்கினார். தொடர்ந்து தற்போது வரை வட பகுதியில் உள்ள செவிப்புலன், விழிப்புலன் இழந்தோருக்கு உதவி அவர்களின் கல்வி நிலையூடாக அவர்களது வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் பணியினை மேற்கொண்டு வருகின்றது. ஆண்டு ஒன்று முதல் தரம் 11 வரையிலுள்ள மாணவர்களுக்கு அரச பாடத்திட்டத்துக்கு அமைவாக கல்வி அறிவூட்டி வருகின்றது. அதுமட்டுமன்றி க.பொ.த. சாதாரண தரம் கல்வி கற்ற மாணவர்களுக்கான தச்சு வேலைப் பயிற்சி, தையல் பயிற்சி, அழகு சாதனக் கலைப் பயிற்சி போன்றவற்றை வழங்கி அவர்களைத் தமது சொந்த முயற்சியில் வாழ்வதற்கும் உதவிகளினை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் பாடசாலையிலே மொத்தமாக 20 ஆசிரியர்கள் கடமையாற்றி வருகின்றனர். மொத்தமாக 177 மாணவர்கள் தங்களது கற்றல் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். அவர் களில் 164 மாணவர்கள் செவிப்புலனற்றவர்களாகவும் 13 மாணவர்கள் விழிப்புலனற்ற மாணவர்களாகவும் உள்ளனர்.

கராத்தே, கிரிக்கெட் அணிகளை உருவாக்கி தமது விளையாட்டுத் திறமைகளை வெளிப்படுத்தி வரும் இவர்கள் தேசிய ரீதியிலும் கூடத் தங்களது திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றனர்.

கடந்த ஆண்டு முதல் பத்து இடங்களுக்குள்ளே தமது திறமைகளை வெளிப்படுத்தியுள்ளதுடன் தங்கப் பதக்கம், வெள்ளிப் பதக்கம் போன்றவற்றையும் பெற்றுக் கொண்டுள்ளனர். கடந்த 2010 ஆம் ஆண்டு இந்தப் பாடசாலையிலிருந்து க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றிய விழிப்புலன் இழந்த மாணவன் சந்திரராஜ விக்கினேஸ்வரன் 3ஏ,பி5,சி சித்திகளைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.


தற்போது தரம் 10 இல் கல்வி பயின்று வரும் நயினாதீவைச் சேர்ந்த தர்சன் தெரிவிக்கையில்:

எனது குடும்பத்திலே ஆறு அங்கத்தவர்கள். நான் உட்பட எனக்கும் எனது அக்காவுக்கும், தம்பிக்கும் எங்கட வீட்டில கண்பார்வையில்லை என்கிறார். அது மட்டுமல்ல பரீட்சைகளில் 60 வீதத்துக்கு கூடுதலான மதிப்பெண்கள் பெற்று வருவதாகவும் கூறுகின்றார்.

எதிர்காலத்திலே ஒரு சட்டத்தரணியாகி சமூகத்துக்கு நல்ல சேவையாற்ற வேண்டும் என்பதே எனது விருப்பம். அதுமட்டுமல்ல, என் போன்ற விழிப்புலனற்ற, செவிப்புலனற்ற மாணவர்கள் நன்றாக படிக்க வேண்டும். அதுவே அவர்களின் மூலதனம் என்று கூறுகின்றார். செவிப்புலன் இழந்தோர் தினத்தைக் கொண்டாடுவது மகிழ்ச்சியே.

இந்தப் பிள்ளைகளை இந்த சமுதாயம் இன்னமும் முற்றுமுழுதாக ஏற்றுக் கொள்ளும் நிலை நிலவாதது கவலைக்குரியதொன்றே. அவர்களுக்கு ஏற்ற தொழில் வாய்ப்பை வழங்கி உதவ ஒருவரும் முன்வருவதில்லை. வங்கி, பல்கலைக்கழகம் மற்றும் வேறு நிறுவனங்களில் வேலை வாய்ப்பு வழங்கி உதவ எவரும் அக்கறை காட்டுவதில்லை. அவ்வாறு வேலைவாய்ப்பு வழங்கி உதவினால் தங்களையும் சமூகம் மதிக்கிறது என்ற உணர்வு ஏற்படும். எனவே அவர்களுக்கான தேவை களை செய்து கொடுக்க வேண்டும். அடிப் படை தேவையாக பாடசாலைக் கல்வியையும், அதன் மூலம் விளை யாட்டுத் திறன்களையும் ஊக்குவித்து அவர்களை நாங்கள் சாதாரண மாணவர்களோடு கற்றல் செயற்பாடுகளை முன்னெடுக்க கல்வித் திணைக்களம் உதவி வருகின்றது. அந்த வகையிலே மாணவர்கள் தேசிய மட்டம் வரை தமது திறமைகளை வெளிக்காட்டக் கூடியவர்களாக வளர்ந்துள்ளனர் என்கி றார் பாடசாலையின் அதிபர் வி.எஸ்.மகேந்திரன்.

எனவே எதிர்காலத்தில் வாழ்க்கை முறையினை அமைத்து நாங்களும் எந்த குறைபாடுகளும் அற்றவர்க[illegible]
என்ற உணர்வு அவர்கள் [illegible]
ஏற்பட சமூகத்தில் உ[illegible]
பெரும்பங்காற்ற வே[illegible]
மூலம் நாங்கள் அவ[illegible]
கவனிக்கப்படுகிறோ[illegible]
அவர்களுக்கு ஏ[illegible]
தன்னம்பிக்கையே[illegible]
அனைவரும் அவர்[illegible]
வேண்டும். நம்பி[illegible]
ணிக்க வேண்டும்.[illegible]
"ஒன்றுபட்டால் உ[illegible]




# iOS 7 இயங்குதளத்துக்கான Google Translate அப்பிளிக்கேஷனில் புதிய வசதி

கூகுள் நிறுவனத்தால் வழங்கப்பட்டு வரும் இணையத்தளம் மூலமான மொழிபெயர்ப்புச் சேவைக்கான மொபைல் அப்பிளிக் கேஷன்கள் உருவாக்கப்பட்டுள்ளன.
தற்போது சில தினங்களுக்கு முன்னர் அப்பிள் நிறுவனத்தால் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த ஐ.எஸ்.ஓ.7 இயங்குதளத்தில் செயற்படக் கூடியவாறு தனது மொழிபெயர்ப்பு அப்பிளிக்கேஷனை மேம்படுத்தியிருக்கின்றது கூகுள்.
இதில் டைப் செய்யாது கைகளால் தொடுதிரையில் எழுதப்படும் எழுத்துக்களைப் புரிந்துகொண்டு அவற்றை மொழிபெயர்ப்புச் செய்யும் வசதி உட்புகுத்தப்பட்டுள்ளது.
இவ்வாறு 70 இற்கு மேற்பட்ட மொழிகளைக் கையால் எழுதும்போது அவற்றை உணரக்கூடியவாறு காணப்படுவது இந்த அப்பிளிக் கேஷனின் சிறப்பியல்பு ஆகும்.

# Androi- 5.0 இயங்குதளம் இப்படித்தான் இருக்குமா?


கூகுள் நிறுவுனத்தினால் உருவாக்கப்பட்டு குறுகிய காலத்தில் பிரபல்யமடைந்த இயங்குதள மான அன்ரோயிட்டின் பதிப்புக்கள் சீரான இடை வெளியில் வெளிவந்த வண்ணம் உள்ளன.
அண்மையில் அன்ரோயிட்டின்- 4.4 Kit Kat என்ற புதிய பதிப்பு தொடர்பிலும் சில தகவல்கள் வெளியாகியிருந்தன.
இந்நிலையில் Craig Tuttle எனும் அன்ரோயிட் இயங்குதளத்தின் ரசிகர் ஒருவர் அன்ரோயிட்- 5.0 பதிப்பு எப்படி இருக்கும் என்று தனது கற்பனையை காணொளியாக்கியுள்ளார்.






# Kogan அறிமுகப்படுத்தும் அதி நவீன ஸ்மார்ட் கைப்பேசி

ஹோகன் என்ற நிறுவனம் அன்ரோயிட் இயங்குதளத்தை அடிப் படையாகக் கொண்ட அதி நவீன ஸ்மார்ட் கைபேசிகளை அறிமுகப்படுத்தியுள் ளது.
ஹோகன் அஹோறா (Kogan Agora ) என்ற இக்கைபேசிகள் 1.2GHz வேகத்தில் செயலாற்றக்கூடிய MT6589 Mediatek Processor, பிரதான நினைவகமாக 1ஜிபி நினைவகம் ஆகியவற்றைக் கொண்டுள்ளன.
இவற்றின் சேமிப்பு நினைவகமானது 4 ஜிபி ஆக காணப்படுவதுடன் microSD அட்டையின் உதவியுடன் 32 ஜிபி வரை அதிகரித்துக்கொள்ளும் வசதியும் தரப்பட்டுள்ளது. இவை தவிர 8 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமரா மற்றும் 2 மெகாபிக்சல்களை உடைய துணையான கமரா ஆகியனவற்றையும் கொண்டுள்ளது.
இவற்றின் விலையானது 189 டொலர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.




# தொலைபேசி அழைப்புக்களை உணர்த்தும் ஒளிரும் உடை

அறிவியல் வளர்ச்சியின் பயனாக கைபேசியைப் பயன்படுத்தும் மக்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், கைபேசி அழைப்பு வந்தால் அதனை உணர்த் தும் வகையில் ஒளிரும் தன்மையுடைய உடை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. லண்டனைச் சேர்ந்த நவநாகரிக வடிவமைப்பாளர் மாண வியான ஜியோர்ஜி டேவிஸ், சொனி எரிக்ஸன் நிறுவனத்துடன் இணைந்து தயாரித்துள்ள மகளிருக்கான ஆயத்த ஆடை, கைபேசி அழைப்பு வந்தால் ஒளிர்கிறது.
இந்த உடையை ரஷ்யாவின் நட்சத்திர டென் னிஸ் வீராங்கனை மரியா ஷரபோவா லண் டனில் அறிமுகப்படுத்தினார்.
தனது பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த ஒளிரும் உடையை உருவாக்கியதாகவும், கைபேசியில் உள்ள புளூ-டூத் வசதியைப் பயன்படுத்தி, இந்த ஒளிரும் உடை செயல் படுவதாகவும் ஜியோர்ஜி கூறியுள்ளார்.
பொதுவாக, டிஸ்கோதே, பார் உள்ளிட்ட அதிக சப்தம் நிறைந்த இடத்தில், செல்போன் அழைப்பு வந்தால் அது சம்பந்தப்பட்டவருக்குக் கேட்காது. இதனால் அந்த அழைப்பு தவறிய அழைப்பாகி விடுவதுண்டு.
சில முக்கியமான அழைப்புகளைக் கூட நாம் தவறவிட்டு விடுவது உண்டு. இதுபோன்ற சங்க டங்களைத் தவிர்ப்பதற்காகவே இந்த ஒளிரும் உடையை வடிவமைத்தேன் என்கிறார் ஜியோர்ஜி.

# தானாகவே இலக்குகளை குறி வைக்கும் துப்பாக்கி

தற்போதைய தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக துப்பாக்கிகளிலும் பல்வேறு புதிய உத்திகள் உட்புகுத்தப்பட்டு வருகின்றன.
இவற்றின் அடிப்படையில் இலக்குகளை தாமாகவே குறி வைத்து தாக்கக்கூடிய துப்பாக்கி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.
அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாநிலத்தைச் சேர்ந்த TrackingPoint Solutions என்ற நிறுவனத்தால் இந்தத் துப்பாக்கி உருவாக்கப் பட்டுள்ளது.
இத்துப்பாக்கியானது நீண்ட தூர சுடு திறனைக் கொண்டிருப்பதுடன், லேசர் கதி ரினை பயன்படுத்தி குறிவைக்கும் ஆற்ற லையும் கொண்டடுள்ளது.



# அடுத்த மாதம் அறிமுகமாகின்றது Ubuntu Touch Mobile இயங்குதளம்

வைரஸ் தாக்கங்கள் அற்றதும், திறந்த வளமாகவும் கருதப்படும் இயங்கு தளமான உபுன்டு (Ubuntu) மக்கள் மத்தியில் சிறந்த வரவேற்பைப் பெற்றிருந்தது.
இந்நிலையில் தற்போது தொடர்ச்சியாக அறிமுகப்படுத்தப்பட்டுவரும் ஸ்மார்ட் கைபேசிகள், ரேப்லட்கள் போன்ற மொபைல் சாதனங்களில் பல்வேறு இயங்குதளங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.
இதனைப் பின்பற்றி மொபைல் சாதனங்களுக்கான Ubuntu இயங்குதள உருவாக்கமும் விரைவுபடுத்தப்பட்டுள்ளது.
அதாவது இந்த இயங்குதளமானது முற்றிலும் தொடுதிரை தொழில்நுட் பத்திற்கு ஏற்றவாறு உருவாக்கப்படுகின்றது. இதனை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 17 ஆம் திகதி வெளியிடத் தீர்மானித்துள்ளனர்.



இந்த இயங்கு தள மானது முற்றிலும் தொடுதிரை தொழில்நுட் பத்திற்கு ஏற்றவாறு உருவாக்கப்படுகின்றது. இதனை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 17ஆம் திகதி வெளியிடத் தீர்மானித்துள்ளனர்.

## முதலாவது ஆண்டு நிறைவு விழா

கிளிநொச்சி, செப்.27
கிளிநொச்சி பொன்நகர் வடக்கு கலை வித்தியாரம்பச் சபைக் கலாமன்றத்தின் முதலாவது ஆண்டு நிறைவுவிழா நாளைய தினம் சனிக்கிழமை அங்குள்ள மைதானத்தில் இடம்பெறவுள்ளது.
இதனையொட்டி அன்றைய தினம் காலை 9 மணியளவில் பண்பாட்டு ரீதியான விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.
பின்னர் பிற்பகல் 3 மணியளவில் கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. நிகழ்வுகளுக்கு நடேசு ஜெயபானுஜன் தலைமை தாங்கவுள்ளார்.
மேலும் இவரை இதழாசியராகக் கொண்டு உருவாக்கம் பெற்ற கலை ஊற்று என்னும் சஞ்சிகையின் வெளியீடும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.
பொன்நகர் வடக்கு கலாமன்றம் இளைஞர்களையும், சிறுவர்களையும் இணைத்துச் செயற்படுவதாகவும் இளைஞர், சிறுவர்களிடையே நல்ல பழக்கவழக்கங்களை ஏற்படுத்தும் வகையில் செயற்படுவதாகவும் அதன் நிர்வாகிகளில் ஒருவர் தெரிவித்தார். (க)

## மதுபோதைக்கு தண்டம்

துணுக்காய், செப்.27
மதுபோதையில் வாகனங்களைச் செலுத்திய 63 பேரைத் தாம் இந்த ஆண்டு இதுவரை கைது செய்துள்ளதாக மல்லாவிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியான பொலிஸ் பரிசோதகர் சரத் விஜயசிங்க தெரிவித்தார்.
இவர்கள் அனைவரும் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டபோது 5 லட்சத்து 53 ஆயிரத்து 900 ரூபா தண்டம் செலுத்தியதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.
அண்மைக் காலமாக மதுபோதையில் வாகனங்களைச் செலுத்துபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் விபத்துச் சம்பவங்களும் அதிகளவில் இடம்பெறுவதாகத் தெரிவித்த அவர் தாம் இது தொடர்பாக துரித நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவித்தார். (க-415)

## மின்சாரத் தூண்களால் குழப்பம்

முல்லைத்தீவு,செப்.27
ஒட்டுசுட்டானில் மின்விநியோகம் இடம்பெறாத இடங்களில் தேர்தலுக்கு முன்பாகப் பறிக்கப்பட்ட மின்சாரத் தூண்கள் மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.
தேர்தலுக்கு முன்பாக மின்சாரத் தூண்கள் முத்துஐயன் கட்டிலும் பண்டாரவன்னியிலும் நடப்பட்டன. அத்துடன் கற்சிலைமடுவில் சில தூண்கள் பறிக்கப்பட்டுள்ளன.
ஆனால் ஒட்டுசுட்டானிலிருந்து இந்தப் பகுதிகள் வரை இந்தத் தூண்கள் தொடர்ந்து நடப்படாது இடையிடையே நடப்பட்டுள்ளதால் மக்கள் குழப்பத்தில் ஆழ்ந்துள்ளனர். இந்தத் தூண்கள் நடப்பட்டமை தேர்தலுக்காகவா அல்லது உண்மையாகவே மின்சாரம் வழங்கப்படுவதற்காகவாவென மக்கள் குழப்பத்தில் ஆழ்ந்துள்ளதைக் காணமுடிகின்றது. (க-500)

மழை பொய்த்துவிட்டதால்

# முல்லைத்தீவில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

முல்லைத்தீவு,செப்.27
மழை பொய்த்ததால் முல்லைத்தீவு மாவட்டத்தில் கடுமையான வறட்சி ஏற்பட்டுள்ளதுடன் மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.
மழை பெய்யாததால் இங்குள்ள குளங்கள் வறண்டு நீரின்றிக் காணப்படுகின்றன. தமக்கான குடிதண்ணீரைப் பெறுவதற்காகக் குளங்களை நாடிவரும் கால்நடைகள் அங்கு நீரில்லாததால் நீரைத் தேடி அங்குமிங்கும் அலைந்து திரிவதைக் காணமுடிகின்றது.
மேலும் காட்டு மிருகங்களும் காடுகளை விட்டு வெளியேறி குடிதண்ணீருக்காக மக்கள் இருப்பிடங்களை நாடி வருவதையும் காண முடிகின்றது.
அத்துடன் மேய்ச்சல் நிலங்கள் புல்பூண்டு இல்லாது காய்ந்த நிலையில் காணப்படுவதால் கால்நடைகள் உணவின்றி மடியும் நிலையும் ஏற்பட்டுள்ளது.
இதேவேளை காலபோகத்துக்கான நெற் செய்கையும் மழை பொய்த்ததால் தாமதமடைந்து வருகின்றது. தமது வயல் நிலங்களைப் பயன்படுத்துவதிலும் நெல் விதைப்பை மேற்கொள்வதிலும் ஈடுபட முடியாத நிலையில் விவசாயிகள் உள்ளனர்.
காலபோக நெற் செய்கைக்கான காலம் இதுவே என்றபோதிலும் அதனை மேற்கொள்ள முடியாததால் காலம் பிந்திய விதைப்புக் காரணமாகத் தாம் பாதிப்புக் களை எதிர்கொள்ள நேரிடுமோ வென்ற அச்ச நிலையும் விவசாயிகளிடம் ஏற்பட்டுள்ளது.
மேலும் விதை நெல்லின் விலையும் அதிகரித்துள்ளதால் விவசாயிகள் குழப்பமானதொரு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.
எனவே கலப்பில்லாத விதை நெல்லைநியாயமானவிலைக்கு விநியோகிப்பதற்கு விவசாயத் திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-500)




## சிவநகர் கிராமத்தில் நடமாடும் சேவை



கிளிநொச்சி, செப்.27
கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் நடமாடும் சேவையொன்று எதிர்வரும் முதலாம் திகதி கிளிநொச்சி சிவநகர் கிராமத்தில் இடம்பெறவுள்ளது.
கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலகபிரிவுக்குட்பட்ட சிவநகர், உருத்திரபுரம் வடக்கு, உருத்திரபுரம் மேற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த சுயதொழில்களில் ஈடுபடும் பயனாளிகளை இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் ஓய்வூதியத் திட்டத்தில் இணைக்கும் நடமாடும் சேவையே எதிர்வரும் முதலாம் திகதி மு.ப. 9 மணிக்கு சிவநகர் கிராம அலுவலர் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.
இந்த நடமாடும் சேவையில் இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் பா. பிரதீபன் கலந்து கொண்டு திட்டத்தின் பயன்கள் தொடர்பாக கருத்துரை வழங்கவுள்ளதாகப் பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் அறிவித்துள்ளார்.
பிரதேச செயலகத்தினால் இந்தத் திட்டம் தொடர்பாக நடமாடும் சேவைகள் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக நடத்தப்பட்டு வருவதாகவும் பெருமளவு மக்கள் முன்வந்து இதில் இணைந்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-9)

வயல் பாதையின் பாலம் உடைந்ததால்

## நூறு ஏக்கர்களில் விவசாயம் பாதிப்பு



முல்லைத்தீவு,செப்.27
கூழாமுறிப்பு வயல் பாதையிலுள்ள பாலம் உடைந்துள்ளதால் விவசாயிகளின் போக்குவரத்து பாதிப்படைந்துள்ளது. இதனால் சுமார் 100 ஏக்கர் விவசாயச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.
ஒட்டுசுட்டான் பிரதேசத்திலுள்ள கூழாமுறிப்பு கிராம மக்கள் பயன்படுத்தும் வயல் பாதையூடாகக் குளத்தின் வான் வெள்ளம் பாய்ந்ததால் கடந்த பெரு மழையின் போது அந்தப் பாதையில் அமைந்துள்ள பாலம் இடிந்து சேதமடைந்து காணப்படுகின்றது.
மேலும் இங்கு குழிகள் ஏற்பட்டுள்ளதால் விவசாய நிலங்களுக்கு வாகனங்களைக் கொண்டு செல்ல முடியாததால் சுமார் 100 ஏக்கர் விவசாய நிலத்தில் விவசாயம் செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இது தொடர்பாக அதிகாரிகள் தொடக்கம் அமைச்சர்கள் வரை அறிவித்தும் எந்தவித பயனும் கிடைக்கவில்லையெனத் தெரிய வருகின்றது.
எனவே தாம் இந்த வயல் நிலங்களில் காலபோக விவசாயச் செய்கையை மேற்கொள்வதற்கு முன்னோடியாக இந்தப் பாதையையும், பாலத்தையும் புனரமைக்குமாறு விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-500)

நிரந்தர நியமனத்துக்காக

## முல்லையில் காத்திருக்கும் தொண்டர் ஆசிரியர்களும் சுகாதாரத் தொண்டர்களும்

முல்லைத்தீவு.செப்.27
முல்லைத்தீவு மாவட்டத்தில் இதுவரை நிரந்தர நியமனம் வழங்கப்படாத தொண்டர் ஆசிரியர்களும், சுகாதாரத் தொண்டர்களும் தமக்கு இனியாவது வழிபிறக்குமா என்று ஆவலுடன் காத் திருப்பதைக் காணமுடிகின்றது.
தேர்தலுக்கு முன்னர் இத்தகையவர்கள் பலருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்ட போதிலும் சிலர் இன்னமும் நியமனம் வழங்கப்படாத நிலையிலேயே காணப்படுகின்ற னர்.
இவர்களில் பலர் சுமார் 12 வருடங்களுக்கும் மேலாகக் கடமையாற்றியுள்ளனர். சிலர் 40 வயதைக் கூட எட்டியுள்ளனர். தமக்கு நிரந்தர நியமனம் கிடைக்குமென்ற நம்பிக்கையில் இவர்கள் வேறு வேலைகளுக்குச் செல்லவில்லை. இதனால் மோசமான பொருளாதாரக் கஷ்டங்களை இவர்கள் எதிர்கொண்டு வருகின்றனர். தாம் தமது நிரந்தரப் பதவிக்குரிய சகல தகுதிகளையும் கொண்டிருந்த போதிலும் அநீதியான வகையில் தமக்கு நிரந்தர நியமனம் வழங்காது புறக்கணித்ததாக இவர்கள் வேதனையுடன் தெரிவித்தனர். மேலும் பாதிக்கப்பட்ட தமக்கு இனியாவது நிரந்தர நியம னத்தை வழங்குமாறும் இவர் கள் வேண்டுகோள் விடுத்துள் ளனர். (க-500)

> “ தாம் தமது நிரந்தரப் பதவிக்குரிய சகல தகுதிகளையும் கொண்டிருந்த போதிலும் அநீதியான வகை யில் தமக்கு நிரந்தர நியமனம் வழங்காது புறக் கணித்துள்ளதாக இவர்கள் தெரிவிக்கின்றனர்

ஒட்டுசுட்டான் பகுதியில்

## பொதுச் சந்தையும் பஸ் நிலையமும்

முல்லைத்தீவு.செப்.27
ஒட்டுசுட்டானில் பொதுச் சந்தை மற்றும் பஸ் நிலையம் ஆகியவற்றை அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையச் சந்தியில் முன்பு பொலிஸ் நிலையம் அமைந்துள்ள காணியின் ஒரு பகுதியில் பொதுச் சந்தையையும், பஸ் நிலையத்தையும் அமைப்பதற்கு வழங்கப்பட்ட அங்கீகாரத்துக்கமைவாக இவற்றை அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.
இவற்றுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த 20 ஆம் திகதி இடம்பெற்றது.
இந்த நிகழ்வில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மற்றும் ஜனாதிபதியின் முல்லை மாவட்ட இணைப்பாளர் ச.கனகரத்தினம் ஆகியோரும் கலந்து கொண்டனர். (க-500)

> இவற்றுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த 20 ஆம் திகதி இடம்பெற்றது.





மாந்தை கிழக்குப் பிரதேசத்துக்குச் செல்லும் செல்வபுரம் வயல் வீதி மிகவும் மோசமான நிலையில் காணப்படுகிறது. (க-415)

## கிளிநொச்சி மாணவர்கள் நடை பயணம்

கிளிநொச்சி, செப்.27
கிளிநொச்சி மாவட்ட மாணவர்கள் சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பான நடை பயணத்தை எதிர்வரும் ஒக்ரோபர் முதலாம் திகதி காலை 8 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளனர்.
கிளிநொச்சி மாவட்ட செயலக மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுவின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள இந்த நடைபயணம் நிகழ்வு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் ஆரம்பித்து மாவட்டச் செயலகம் வரை இடம்பெறவுள்ளது. சிறுவர் உரிமைகளை வலியுறுத்தும் பதாகைகளுடன் பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் நடை பயணத்தில் கலந்துகொள்ளவுள்ளனர்.(வ-9)

## வாரத்தில் 3 தினங்கள் மண்டைதீவில் மருத்துவமுகாம்



யாழ்ப்பாணம், செப். 27
மண்டைதீவு பிரதேசத்தில் வாரத்தில் மூன்று தினங்கள் விசேட மருத்துவ சேவை முகாம் ஒன்று இடம்பெற்று வருகின்றது.
சுகாதார சேவைகள் திணைக்களத்தின் உதவியுடன் குறித்த மருத்துவ முகாம் இடம்பெற்று வருகின்றது.
குறித்த பிரதேசத்தில் வைத்தியசாலை வசதிகள் எவையும் இல்லாத காரணத்தால் பிரதேச மக்களின் வசதி கருதி மருத்துவ முகாம் இடம்பெறுகிறது.
வாரத்தில் மூன்று தினங்கள் இடம்பெறும் இந்த மருத்துவ முகாமில் பெரும் எண்ணிக்கையான மக்கள் பங்கு பற்றி பயன் பெற்று வருகின்றனர். (வ-17)

# சங்கானை பஸ் நிலைய இருக்கைகள் சேதம்

### சீர் செய்யுமாறு மக்கள் கோரிக்கை

சங்கானை, செப். 27
சங்கானை பஸ் நிலையத்தில் அமைக்கப்பட்டிருந்த பயணிகள் இருக்கைகள் யாவும் உடைந்து பாவனைக்கு உதவாத நிலையில் உள்ளன.
தினமும் நூற்றுக்கும் மேற்பட்ட பயணிகள் இந்த நிலையத்தைப் பயன்படுத்துகின்றனர். சிமெந்திலான சாய்வு இருக்கைகளாக காணப்படும் இந்த இருக்கைகளின் சாய்வுப் பகுதிகள் யாவும் உடைந்த நிலையில் உள்ளன. இதே வேளை ஒருவருட காலத்துக்குள் அவை பழுதடைந்துள்ளன. இதனால் பயணிகள் பஸ்ஸுக்காக காத்து நிற்கும் வேளை அசௌகரியங்களுக்குள்ளாகின்றனர்.
குறிப்பாக முதியோர், நோயாளர்கள் அதிகமாக சிரமங்களைஎதிர்நோக்குகின்றனர்.

**சிமெந்திலான சாய்வு இருக்கைகளாக காணப்படும் இந்த இருக்கைகளின் சாய்வுப் பகுதிகள் யாவும் உடைந்த நிலையில் உள்ளன. இதேவேளை ஒருவருட காலத்துக்குள் அவை பழுதடைந்துள்ளன.**

இந்த நிலையம் வலி.மேற்கு பிரதேச சபையின் பராமரிப்பில் உள்ளதால் இந்த இருக்கைகளைச் சீர்செய்ய சபை கவனம் செலுத்த வேண்டுமெனப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-29)

## மிருசுவில் பொது நூலகத்தால் போட்டிகள்

யாழ்ப்பாணம், செப்.27
தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மிருசுவில் பொது நூலகத்தால் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் பல்வேறு செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.
இதில் பனர் காட்சிப்படுத்தல், சிறுவர் தினம், சிரமதானம், கட்டுரை, வாசிப்பு, பேச்சு, பொது அறிவு, சித்திரம், கதைகூறல் போட்டிகள், நூலகம் மற்றும் அதன் வளங்கள் தொடர்பாக பிரஜைகளுக்கு அறியத் தருதல், நூல் அன்பளிப்பு பெறல், துண்டுப் பிரசுரம் வெளியிடல், கருத்தரங்கு நடத்துதல், வாசகர் தொகை அதிகரித்தலும் ஊக்குவித்தலும், நடமாடும் நூலக சேவை, கதை சொல்லும் நேரம், சினிமாப் படம் மற்றும் காணொலி மூலம் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்துதல் ஆகியன நடத்தப்படவுள்ளன.போட்டிகளில் பங்குபற்ற ஆர்வமுடையவர்கள் நூலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு நூலகர் அறிவித்துள்ளார். (வ-14)

## சரசாலை பொது நூலகத்தில் வாசிப்பு மாதப் போட்டிகள்

தென்மராட்சி, செப். 27
சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை பொது நூலகத்தினர் தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி பாடசாலை மாணவர்களிடையே பல்வேறு போட்டிகளை நடத்தவுள்ளனர்.
சிறுவர்களுக்கான படம் பார்த்துக் கதை சொல்லும் திறந்த போட்டிகள் கட்டுரை, பேச்சு, வினாடிவினா ஆகியவை பிரிவுகள் ரீதியாகவும் வாசகர்களிடையே வழக்காடு மன்றப் போட்டியும் முன்பள்ளி சிறார்களிடையே ஆக்கத் திறன் கண்காட்சிப் போட்டியும் நடத்தப்படவுள்ளன.
போட்டிகளில் பங்குபற்றவுள்ள போட்டியாளர்கள உரிய விண்ணப்பப் படிவத்தில் ஒக்ரோபர் முதலாம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.
வாசிப்பு மாதத்தில் (ஒக்ரோபர்) தினமும் படக்காட்சிகள், நடமாடும் நூலக சேவை, கருத்தரங்குகள், முப்பரிமாண நூலகக் கண்காட்சிகள், கதைவேளை நேரம் போன்ற நிகழ்வுகள் நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நூலகர் இ.தர்மலிங்கம் அறிவித்துள்ளார். (வ-9)

## நினைவுப் பேருரை

யாழ்ப்பாணம், செப்.27
யாழ். ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முன்னாள் அதிபர் வி.சுப்பிரமணியத்தின் 17ஆவது ஆண்டு நினைவுப் பேருரை இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
கல்லூரி அதிபர் இ.ஈஸ்வரநாதன் தலைமையில் நடை பெறும் இந்த நிகழ்வில் "அறி வாற்றலும் ஒழுக்கமும் உள்ள சமுதாயத்தை உருவாக்குதல்" என்ற தலைப்பில் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் எஸ்.சத் தியசீலன் உரை நிகழ்த்துவார்.(வ-14)

## கட்டாக்காலிகளின் தங்குமிடமாக சங்கானை பஸ்நிலையம்

சங்கானை, செப். 27
சங்கானை பஸ் நிலையம் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளதால் கட்டாக்காலி நாய்களின் தங்குமிடமாக மாறியுள்ளது. மற்றும் செருப்புத் தைக்கும் தொழிலாளி ஒருவரும் தனது தொழிலை இந்நிலையத்தில் இருந்து மேற்கொண்டு வருகின்றார்.
அவரிடம் தினமும் வலி.மேற்குப் பிரதேச வரியிறுப்பாளர் வரி அறவிடும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (வ-29)

## போரால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு உதவி

யாழ்ப்பாணம்,செப்.27
யாழ்.மாவட்ட சர்வோதய அமைப்பால் வலி.மேற்கில் கடந்த கால போரால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு நிதியுதவி வழங்கும் நிகழ்வு நாளை சனிக்கிழமை சுழிபுரம் வழக்கம்பரை சிவபூமி அறக்கட்டளை நிதியத்தில் நடைபெறவுள்ளது.
சர்வோதய அமைப் பால் கிடைக்கப்பெற்றுள்ள ஒரு லட்சம் ரூபா நிதி 17 சிறுவர் களுக்கு வழங்கப்படவுள்ளது. (வ-14)

## கிராம அலுவலர் பதில் கடமை

யாழ்ப்பாணம், செப்.27
நல்லூர் பிரதேச செயலகப் பிரிவின் கொக்குவில் வட கிழக்கு இல.ஜே/121 கிராம அலுவலர் ஓய்வு பெற்றதை அடுத்து அவரது இடத்துக்கு கொக்குவில் கிழக்கு வட மேற்கு இல.ஜே/124 கிராம அலுவலர் பதில் கடமையாற்றுவார் என நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார். (வ-7)

தருவது வித்தியா

# இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?



**மேடம்:** நட்பு வட்டாரம் விரிவடையும். பணவரவு திருப்தி தரும். வியாபாரத்தில் மறைமுக எதிர்ப்புகளைச் சமாளிப்பீர்கள். பிரபலங்களைச் சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் மகிழ்ச்சியுண்டு.



**இடபம்:** உணர்ச்சிவசப்படாமல் அறிவுப்பூர்வமாக முடிவெடுக்கப்பாருங்கள். மற்றவர்களுடன் உங்களை ஒப்பிட்டுக் கொண்டிருக்க வேண்டாம். உங்களின் அணுகு முறையை மாற்றுங்கள். உத்தியோகத்தில் விமர்சனங்களை ஏற்றுக் கொள்வது நல்லது.



**மிதுனம்:** யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். வியாபாரத்தில் புதிய முதலீடு செய்யலாம். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். எதிலும் நிதானித்துச் செயல்படப்பாருங்கள்.



**கடகம்** :சில தினங்களாக தடைப்பட்டுவந்த காரியங்களெல்லாம் இன்று சுமுகமாக முடியும். உறவுகளுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் திறமைகள் வெளிப்படும். சக ஊழியர்களின் ஆதரவு உண்டு.



**சிங்கம்:** வீண்செலவுகளைத் தவிர்ப்பீர்கள். பேச்சில் தன்னம்பிக்கை பிறக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் ஆதரவைப் பெறுவீர்கள். முன் கோபம் குறையும். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி தரும்.



**கன்னி:** திட்டமிட்ட காரியங்களை சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். சகோதரவகையில் மகிழ்ச்சி தங்கும். நண்பர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

**நாளை**

புரட்டாதி-12 சனிக்கிழமை 28.09.2013
திதி: நவமி பி.இ. 01.03 வரை
நட்சத்திரம்: திருவாதிரை கா.06.27 வரை
சுபநேரம்: 03.02 - 04.32 வரை
இராகுகாலம்: 09.02 - 10.32 வரை



**துலாம்:** உங்களுடைய பலம் எது பலவீனம் எது என்று நீங்கள் உணர்ந்து கொள்வது நல்லது. உத்தியோகத்தில் ஓரளவு வேலைச்சுமை குறையும். தடைப்பட்ட வேலைகள் முடியும்.



**விருச்சிகம்:** இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். கல்யாணப் பேச்சு வெற்றியடையும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஆதரிப்பார். எதிலும் கவனமுடன் செயற்படுங்கள்.



**தனுசு:** திறமையுடன் செயற்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். மனக்குழப்பங்கள் நீங்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள். வேற்று மதத்தினரால் நன்மை கிட்டும். முன்கோபம், வீண் அலைச்சல் விலகும். நண்பர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.



**மகரம்:** சவால்கள், ஏமாற்றங்களைத் தாண்டி வெற்றிஅடைவீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். வீண் பதற்றம் அலைச்சல் நீங்கும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் பெறுவீர்கள்.



**கும்பம்:** வெளியூரிலிருந்து நல்ல செய்தி வந்து சேரும். உத்தியோகத்தில் வேலைசுமை குறையும். ஆடம்பரச் செலவுகளை தவிருங்கள். நட்பு வட்டாரம் விரிவடையும்.



**மீனம்:** தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு சில வேலைகளைச் செய்து முடிப்பீர்கள். வெளி வட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். நண்பர்களின் சந்திப்பு நிகழும். எதிர்காலத்துக்கான முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும்.

# சுடோக்கு


### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 4 | | 6 | 3 | 8 | 9 |
| | 8 | 7 | | 3 | 9 | | | |
| 3 | | 6 | | | | | | |
| | | | | 1 | | 8 | 5 | |
| 1 | | | 9 | | 8 | | | 7 |
| | 3 | 8 | | 2 | | | | |
| | | | | | | 9 | | 3 |
| | | | 1 | 9 | | 7 | 4 | |
| 9 | 7 | 4 | 3 | | 5 | 1 | 2 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | 5 | 7 | 4 | 8 | 6 | 9 | 2 |
| 8 | 6 | 7 | 2 | 3 | 9 | 1 | 5 | 4 |
| 2 | 9 | 4 | 1 | 5 | 6 | 3 | 7 | 8 |
| 4 | 2 | 9 | 5 | 7 | 1 | 8 | 6 | 3 |
| 6 | 7 | 3 | 9 | 8 | 2 | 5 | 4 | 1 |
| 5 | 8 | 1 | 3 | 6 | 4 | 7 | 2 | 9 |
| 3 | 5 | 2 | 4 | 1 | 7 | 9 | 8 | 6 |
| 7 | 4 | 6 | 8 | 9 | 3 | 2 | 1 | 5 |
| 9 | 1 | 8 | 6 | 2 | 5 | 4 | 3 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலி லும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப் பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடனான காலநிலை நிலவும்.

# கொடகே சாகித்திய விருது வழங்கிக் கௌரவிப்பு

வடமராட்சி, செப்.27

15 ஆவது கொடகே தேசிய சாகித்திய விருது (2013) வழங்கும் நிகழ்வு அண்மையில் கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரி மண்டபத்தில் பேராசிரியர் விமல் ஜி பலகல்லே தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தமிழ், சிங்கள, இலக்கிய வாதிகள் 19 பேருக்கு விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

தமிழ் மொழியில் 6பேர் இந்த விருதைப் பெற்றுக்கொண்டனர்.

விருது பெற்றோர் விவரம் வருமாறு:-

**வாழ்நாள் சாதனையாளர் விருது**
திருமதி அன்னலட்சுமி இராசதுரை

**சிறுகதை**
கொற்றை பி கிருஷ்ணானந்தன் (இன்னுமோர் உலகம்)
அல் அஸமத் (மண்ணில் வேரோட்டிய மனசோடு)

**நாவல்**
விருதுக்கு தகுதியான நாவல்கள் கிடைக்கப்பெறவில்லை.

**மொழிபெயர்ப்பு**
இரா.சடகோபன் (மாட்டீன் விக்கிரமசிங்கவின் அபேகம- எமது கிராமம்)

**முதல்நூல் வெளியீடு**
எட்டியாந்தோட்டை கருணாகரன்-கவிதை (அவமானப் பட்டவனின் இரவு). (ந-)

# நினைவு தினம்

வடமராட்சி, செப்.27

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தின் 28 ஆவது ஆண்டு நிறைவு தின நிகழ்வும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நாளைமறுதினம் ஞாயிற்றுக் கிழமை பி.ப.2.30 மணிக்கு வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் கழகத் தலைவர் வ.சிவச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றப் பதிவாளர் எஸ்.எம்.நசீர், சிறப்பு விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலக சமூகசேவை உத்தியோகத்தர் சு.வரதபாஸ்கரனும் கலந்து கொள்ளவுள்ளனர். (ந-35)

# நமக்கு எல்லாம் தேவைதானா?

வேதாந்தம் செல்வத்தை விட்டுவிடு என்று கூறவில்லை. அதிலுள்ள தணியாத தாகத்தையே விட்டுவிடும்படி கூறுகின்றது. பொருள்கள் போதுமானதாக இருந்தாலும் போதாது என்று அலைவதையே கண்டிக்கின்றது. புறத்தேயுள்ள பொருள்களை வேண்டாமென்று வேதாந்தம் கூறவில்லை. ஆனால் அதனுடன் ஏற்படுத்திக் கொள்ளும் தொடர்பு புத்திசாலித்தனமாக, தூய்மையுள்ளனவாக அமையவேண்டும். இருப்பதற்கு இடம், குடிப்பதற்கு நீர் தேவை. சுவாசிப்பதற்கு காற்றுத்தேவை. அதுபோல் உறக்கம்,ஓய்வு, பசி, உதவி, பாதுகாப்பு, உடை இவைகள் தேவைதான். ஆனால் அளவுடன் இருக்கவேண்டும்.

இவ்வாறு மனத்தை சுத்தப்படுத்திய பின் தியானம் நிலைக்கும். இது, அது என்று அலைபாயாது தனது அன்றாட கடமை யிலிருந்து விடுபட்டு மனம் வெளி உலகிலிருந்து உள்ளெடுக்கப்படுமானால் அது சூனியமாகின்றது. அது தனக்குள்ளே அதாவது மனத்துள்ளே ஓர் த்வேகத்தை ஏற்படுத்தி அடைந்து கொள்கின்றது. அப்போது பேரானந்தத்தை நமக்குள்ளே தேடிக்கொள்ளும் வாய்ப்பு இலகுவாக ஏற்படுத்தப்படுகின்றது.

ஞானக்கதிர்

# சமய சந்நிதிகளில்

சுழிபுரம், செப்.27

சுழிபுரம் வட கிழக்கு சோழியபுரம், சம்புநாதேஸ்வரி சமேத சம்புநாதேஸ்வரர் ஆலய சனீஸ்வரதோஷ நிவர்த்தி ஹோமப் பெருவிழா நாளை சனிக் கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்த ஹோமத்தில் சனிதோஷம் உள்ளவர்கள் பங்கு கொண்டுபயன்பெறலாம்.(ந-28)

★ ★ ★

சுழிபுரம், செப்.27

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் சனி விரத எண்ணெய் சுட்டி எரிப்பு இரண்டாம் வாரம் நாளை சனிக்கிழமை காலை ஆரம்பமாகி மாலை வரை நடைபெற ஆலய பரிபாலன சபையால் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

புரட்டாதி மாத நான்கு சனிக் கிழமையும் சனீஸ்வரனுக்கு விசேட பூசைகள், ஆராதனைகள் நடைபெற ஏற்பாடாகியுள்ளன. (ந-28)

# நிறுவுநர் நாளும் பரிசளிப்பு விழாவும்

சுழிபுரம், செப்.27

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் நிறுவுநர் நாளும் பரிசளிப்பு விழாவும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை திறந்த வெளி அரங்கில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் வ.ஸ்ரீகாந்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பொதுத் திறைசேரி முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களப் பணிப்பாளர், ச.க.குசலகுமாரனும் அவரது துணைவியார் ராதா குசலகுமாரனும், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரனும் கலந்துகொள்வர். நிறுவுநர் நினைவுப் பேருரையை மகரகம ஆசிரியர் கலாசாலை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ந.ரவீந்திரன் வழங்குவார். (ந)

# மறுமலர்ச்சிப் பயணத்தில் - யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி பத்தாண்டு பூர்த்தி விழா

கல்வி ஊட்டும் கலாசாலை என்பது ஆயிரம் காலத்து பயிராகும். பன்னெடுங்காலமாக நிலைபெற்று எண்ணற்ற இளம் சந்ததியினரை வருக வருகவென வரவேற்று இன்பம் கண்ட எம் பாடசாலை கடந்த கால கசப்பான அனுபவங்களின் ஊடாக மீண்டும் புத்துயிர் பெற்று இன்று பத்து வருடங்கள் பூர்த்தியாகிக் கொண்டிருக்கின்றன.

தற்போது எமது பாடசாலை வளர்ச்சிப் பயணத்தில் வெற்றிகளை கண்டு வருகின்றது. 2003.09.25 ஆம் திகதி எமது அதிபர் மௌலவி எம்.எஸ்.ஏ.எம். முபாரக் தலைமையில் ஆரம்பிக்கப் பட்டபோது இந்தப் பாடசாலையில் 41 மாணவச் செல்வங்களும், 2 ஆசான்களும் காணப்பட்டனர். உடைந்த கட்டடங்களுடன் கற்பதற்கு ஏற்ற சூழல் இல்லாமல் காணப்பட்டாலும், இறைவனின் அருட்கொடையும் இதனை உருவாக்கவேண்டும் என்ற நல்லெண்ணம் கொண்ட எமது சமூகத் தலைவர்களின் விடா முயற்சியாலும் அன்று பாடசாலை உருவாகியது. இதன் முன்னோடியாக மௌலவி பி.ஏ.எஸ்.சுபியான் அவர்கள் விளங்குகின்றார். இன்று இதன் வளர்ச்சி 450 மாணவ மாணவிகளுடனும் 28 ஆசான்களுடனும், 3 சிற்றூழியர்களுடனும் தனது வெற்றிப் பயணத்தைத் தொடர்ந்து வருகின்றது.

தரம் -05 வரை ஆரம்பிக்கப்பட்ட வகுப்பு தரம் 13 வரை வளர்ச்சியடைந்துள்ளது.

சகல பாடத்துறைகளுக்கும் ஏனைய பாடசாலைகளுடன் போட்டி போடக் கூடிய அளவு கல்விப் புலமே மெச்சக் கூடிய அளவு யாழ். ஒஸ்மானியா கல்லூரி தனது வெற்றிப் பயணத்தைத் தொடர்கின்றது.

மறுமலர்ச்சிப் பயணத்தின் கலங்கரை விளக்காய் எமது அதிபர் எம்.எஸ்.ஏ.எம். முபாரக் காணப்படுகின்றார். பல்வேறு துன்பங்களுக்கு மத்தியிலும் இதனை வளர்த்தெடுத்த எமது அதிபருக்கும் சமூகத்துக்கும் கல்விப் புலத்துக்கும் பாடசாலை சமூகம் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

திருமதி சி.நந்தகுமார் (ஆசிரியை)

# தெல்லிப்பழை கூட்டுறவு ஆஸ்பத்திரிக்கான வாடகையை வழங்காது இழுத்தடிப்பு

## யாழ். சுகாதாரத் திணைக்களம் மீது குற்றச்சாட்டு

தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலைக்குச் சொந்தமான கட்டடங்கள், யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் வாடகை அடிப்படையில் பெறப்பட்டபோதும், அதற்குரிய கொடுப்பனவுகள் ஒரு வ்ருடத்துக்கு மேலாக வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.


தெல்லிப்பழை பிரதேச செயலகத்துக்கு அண்மையில் தெல்லிப்பழை கூட்டுறவு வைத்திய சாலை 1949 ஆம் ஆண்டிலிருந்து இயங்கி வருகின்றது. போர்க்காலத்தில் வைத்திய சாலையின் செயற்பாடுகள் முடக்கப்பட்டிருந்தன.

பின்பு உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை தனது சொந்த இடத்துக்கு செல்ல முடியாமை காரணமாக எந்த வித வாடகையுமின்றி தெல்லிப்பழை கூட்டுறவு வைத்திய சாலைக் கட்டடத்தில் இயங்குவதற்குஅனுமதிக்கப்பட்டிருந்தது.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை 2011 ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் சொந்த இடத்துக்குச் சென்ற பின்னர், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை நோயாளர் பராமரிப்பு விடுதிகள், சுதேச வைத்தியசாலை முதலியன தொடர்ந்தும் தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலையிலேயே இயங்கி வந்தது.

இவ்வாறு இயங்குவதற்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், கூட்டுறவு வைத்தியசாலையுடன் ஒப்பந்தம் செய்துகொண்டதுடன், விலை மதிப்பீட்டு திணைக்களத்தினரால் நிர்ணயிக்கப்படும் வாடகையை செலுத்தவும் இணக்கம் காணப்பட்டிருந்தது. ஆனாலும் ஒரு வருடம் கடந்தும்இன்னமும் வாடகை செலுத்த வில்லை என்று தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலை நிர்வாகத்தினர் குற்றம் சாட்டு கின்றனர்.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரனிடம் கேட்டபோது வாடகைக்கான பணம் வழங்குவது தொடர்பில் பிரதம செயலாளருக்கு கடிதம் அனுப்பியுள்ளோம். அதற்கான அனுமதி கிடைத்ததும் வாடகைப் பணம் வழங்கப்படும்- என்றார்.(ஓ-5)



உலக சமாதான நாளான கடந்த சனிக்கிழமை யாழ்.குருநகர் சென்.சாள்ஸ் மகாவித்தியாலய வளாகத்தில் அதிபர் திருமதி இ.கிறிஸ்ரபெல் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்களால் மரக் கன்றுகள் நடப்பட்டன. (ஓ)

# நீர் இறைத்து நெல் விதைப்பு

சுழிபுரம், செப்.27

சுழிபுரம் பறாளாய்ப் பகுதியில் சுழிபுரம் பறாளாய் வயற் காணிகளில் கிணற்று நீர் கொண்ட வயல் உரிமையாளர்கள் தண்ணீர் இறைத்து நெல் விதைப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

பருவ மழை பெய்யாததால் பண்படுத்தப்பட்ட வயல்களில் தண்ணீர் இறைத்து உழுது, பண்படுத்தி நெல் விதைப்பில் ஈடுபடுகின்றனர் இந்தப் பகுதி விவசாயிகள்.

மழை பெய்யும் என்ற நம்பிக் கையுடன் நெல் விதைத்தாலும் மழை பெய்யாது போனால் கிணற்று நீரைப் பயன்படுத்தி இறைப்பதற்குரிய முன் ஏற்பாடாக வாய்க்கால்களை அமைத்தும் வருகின்றனர். (ந-28)

# பிரிவுபசார விழாவில் கௌரவிப்பு




தென்மராட்சி, செப்.27

தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்திக்கு வலய நலன்புரி சங்கத்தினால் அண்மையில் பிரிவுபசார விழா நடத்தப்பட்டது.

வலய கேட்போர் கூடத்தில் நலன்புரி சங்கத் தலைவர் த.சுந்தரசிவம் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார், பிரதிக் கல்விப் பணிப்பாளர் வே.பாலசுப்பிரமணியம், ஆரம்பப்பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் ந.சர் வேஸ்வரன் நிர்வாக அலுவலர் திருமதி யசோதரன், ஓய்வு பெற்ற சமூகக்கல்வி சேவைக் கால ஆசிரிய ஆலோசகர் இ.சர்வேஸ்வரன், ஓய்வு பெற்ற நிர்வாக அலுவலர் க.தர்மகீர்த்தி, சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தம், விவசாய பாட முதன்மை ஆசிரியர், செல்வராசா, ஓய்வு பெற்ற ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோர் உரையாற்றினர்.

வாழ்த்து மடல்கள் சக உத்தியோகத்தர்களால் வழங்கி கௌரவிக்கப்பட்டன. (ந-9)

# தரமான பொருள்களை மக்களுக்கு வழங்க வேண்டும்

## கூட்டுறவு ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்.குடாநாட்டில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தரமான பொருள்களைக் கொள்வனவு செய்து நுகர்வோருக்கு வழங்கவேண்டும். இவ்வாறு மா வட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சங்கங்கள் தமது இலாப நோக்கத்தைக் கவனத்தில் கொண்டு விலை குறைந்த தரமற்ற பொருள்களைக் கொள்வனவு செய்து கிளை விற்பனை நிலையங்களின் ஊடாக மக்களுக்கு வழங்கி வருகின்றன. இந்தத் தரமற்ற பொருள் விநியோகத்தினால் நுகர்வோர் தனியார் விற்பனை நிலையங்களை நாடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் இந்த தரமற்ற பொருள்கள் கிளை நிலையங்களில் விற்பனை இன்றி வண்டடித்து பழுதடைந்த நிலையில் உள்ளன. சங்கங்கள் தமது கொள்வனவு உப- சபையின் பரிந்துரையுடன் பொருள் கொள்வனவுகளை மேற்கொள்ள வேண்டும்.

கிளை விற்பனை நிலையங்களில் முகாமையாளர்களும் தரமான பொருள்களை உறுதி செய்து நுகர்வோருக்கு விநியோகிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ந-17)

# முருங்கைக் கன்றுகள் வழங்கப்படும்

யாழ்ப்பாணம், செப்.27

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் 2 ஆயிரம் முருங் கைக் கன்றுகள் வழங்கப்படவுள்ளன. முருங்கைப் பயிர்ச் செய்கையில் ஆர்வமுள்ள பயனாளிகள் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கிராம அலுவலர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் தெரி வித்துள்ளார். கடந்த வருடம் இந்தப் பகுதி கிராம அலுவலர் பிரிவுகள் மூலம் பயனாளிகளுக்கு ஆயிரம் முருங்கைக் கன்றுகள் வழங்கப்பட்டதாக பிரதேச செயலர் குறிப்பிட்டார். (ந-7)

## 9ஆம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு 12.08.1932 — இறப்பு 06.10.2004

திதி : அட்டமி



திருமதி கண்மணி சின்னத்தம்பி

ஆண்டுகள் ஒன்பது ஆனாலும்
ஆறாத்துயர் மட்டும் இன்றும் ஓய்ந்ததில்லை
மாறாப் பந்தமும் நீங்காத நினைவுகளும்
எம்மைவிட்டுப் போகவில்லை அம்மாவே!
எங்களோடு தான் நீங்கள் என்றும் வாழ்ந்திடுவீர்
வருடங்கள் எத்தனையானாலும்.

கோப்பாய் வடக்கு,
பூதர்மடம்.

குமார் (மகன்)
சத்தியா (மருமகள்)
சாளி, தேனு (பேரப்பிள்ளைகள்)

(32020) (7.6.3)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
26.05.1930

மறைவு
08.10.2012



அமரர்
பரமேஸ்வரி சுப்பிரமணியம்

திதி: அபரபக்க அட்டமி

ஆண்டொன்று ஆகியதே
அவனியை விட்டு நீர் ஏகி
அன்பான சகோதரியையும் உடன்
அழைத்தே சென்று விட்டீர்
அரனடியில் உங்கள் ஆன்மா
அடைகவே பெரும் சாந்தி

"சிவதர்ஷனம்"
கே.கே. எஸ் வீதி, இறுவில் மேற்கு. (31998)(3.4)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### சதாசிவம் ரகுநாதன் (ராஜன் -லண்டன்)



யாழ்ப்பாணம், கச்சேரியடியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் ரகுநாதன் (24.09.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவம் மற்றும் யோகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராசநாயகம்- மங்கையர்க்கரசி தம்பதியரின் மருமகனும், கெங்காதேவியின் பாசமிகு கணவரும், ஸ்ரீவன், ஜெய்சன் ஆகியோரின் தந்தையும், ந.கனகபூமணி (மணி), காலஞ்சென்ற யோகராஜா மற்றும் ஜெ.பத்மலோசனா (பவா), ந.பரமேஸ்வரி (மதி- லண்டன்) ஆகியோரின் சகோதரனும், நவரத்தினம், காலஞ்சென்ற ஜெயக்குமார் மற்றும் நகுலராசா ஆகியோரின் மைத்துனரும், அனுசியா, சுஜி, சுதன், நீரஜா, கபில், மோகன், நிரோ, பவா, சிறி, நந்தன் ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கச்சேரி கிழக்கு லேன்,
யாழ்ப்பாணம். (32069)(3.6.11)

தகவல் :
குடும்பத்தினர்.

### திருமதி ஜோய்ஸ் தயாளம் செல்லையா
(Retd. Teacher - J/Central College)



யாழ்ப்பாணம் இரண்டாம் குறுக்குத் தெருவைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜோய்ஸ் தயாளம் செல்லையா (21.09.2013) சனிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை செல்லையா அவர்களின் அன்பு மனைவியும், டேவிட், காமினி மற்றும் காலஞ்சென்ற லிலாணி ஆகியோரின் அன்புத் தாயாரும், றொகான், சுகிர்தா ஆகியோரின் மாமியாரும், திருமதி சுகிர்தம் தர்மரெட்டினம், திருமதி பவளம் சுவாம்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி றூத் இராஜநாயகம், திலகராஜா ஆகியோரின் மைத்துனியும், ஜெசிக்கா, ஏபியன், லோறா, மத்தியூ ஆகியோரின் பேர்த்தியும் ஆவார். அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (28.09.2013) சனிக்கிழமை லண்டனில் நடைபெறும்.

e-mail-rohanblanchard74@a01.com
T.P : 00442085519842

தகவல்:
குடும்பத்தினர்.

# யாழ். மத்திய கல்லூரி உயர்தர மாணவர்களுக்கு புலமைப்பரிசில்

## பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளை ஏற்பாடு

யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையும், வெளிநாடுகளில் செயற்படும் பழைய மாணவர் சங்கங்களும் இணைந்து யாழ். மத்திய கல் லூரியில் கல்வி கற்கும் ஜி.சீ.ஈ. உயர்தர மாணவர்களில் உதவி தேவைப்படும் திறமை மிக்க 20 பேருக்கு உயர் கல்வியைத் தொடர்வதற்கான புலமைப்பரிசில்களை வழங்கவுள்ளன.
2015ஆம் ஆண்டு முதன்முறையாக உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் இந்தப் புலமைப் பரிசில் திட்டத்தின்கீழ் இணைத்துக் கொள்ளப்படுவர் என்றும் -
மேலதிக விவரங்களை யாழ். மத்திய கல்லூரி அதிபரிடம் பெற்று அதற்குரிய விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் ஒக்டோபர் 10ஆம் திகதிக்கு முன்னர் உரிய முறையில் பூர்த்தி செய்து கல்லூரி அதிபரிடம் ஒப்படைக் குமாறும் யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளை தெரிவித்துள்ளது. (ஒ)

## அறிமுக விழாவும் கருத்தரங்கும்

திருகோணமலை அகில இலங்கை சைவப் புலவர் சங்க அறிமுக விழாவும் இளம் சைவப் புலவர்கள், சைவப் புலவர்கள் தேர்வுக்கான கருத்தரங்கும் நடை பெறவுள்ளன.
இந்த நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய கல்யாண மண்டபத்தில் சைவப் புலவர் மு.திருஞானசம்பந்தம்பிள்ளை தலைமையில் நடைபெறும். (ந)

## இணைய வழி கற்கை நெறி

யாழ்ப்பாணம், செப்.27
யாழ். பல்கலைக்கழக வெளிவாரி அலகின் ஊடாக வியாபார முகாமைத்துவமாணி கற்கை நெறிக்கு ஆள்சேர்ப்பு செய்யப்படவுள்ளதாக யாழ். பல்கலைக்கழக வெளிவாரி பரீட்சைகள் அலகின் கல்வி இணைப்பாளர் கே.சிவராஜா தெரிவித்துள்ளார்.
முதன் முதலாக இணைய வழியூடாக (ஒன்லைன்) தமிழ் மொழி மூலம் வெளிவாரி கற்கை நெறிப் பட்டப்படிப்பை தமிழ் மாணவர்கள் பெறும் வாய்ப்பினைப் பெறவுள்ளனர்.
2012-2013 கற்கை நெறிக்கான மாணவர்கள் அடுத்த மாதம் 11 ஆம் திகதியில் இருந்து உள்வாங்கப்படவுள்ளனர். (ந-50)

## ஒரு மாத குளிசையை ஒரே நாளில் போட்ட பெண் ஆஸ்பத்திரியில்

தென்மராட்சி, செப்.27
ஒரு மாத காலத்துக்கு பயன்படுத்த வழங்கிய குளிசைகளை ஒரே நாளில் பயன்படுத்தினார் குடும்பப் பெண்.
இந்தச் சம்பவம் புதன்கிழமை தனங்களப்பில் இடம்பெற்றது.
அதே இடத்தைச் சேர்ந்த 45 வயதுடைய குடும்பப்பெண் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் மனநல சிகிச்சைப் பிரிவில் பெற்றுச் சென்ற லாச்ரில் என்னும் குளிசைகளை ஒரே தடவையில் விழுங்கியுள்ளார்.
60 குளிசைகளை ஒரே நேரத்தில் பயன் படுத்தியதால் பாதிக்கப்பட்ட பெண் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ந-9)

## விபத்தில் சிக்கி குடும்பஸ்தர் காயம்

தென்மராட்சி, செப்.27
வீதி விபத்தில் சிக்கி குடும்பஸ்தர் காயமடைந்தார். இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.
சரசாலை வடக்கைச் சேர்ந்த இராசையா ஜசிகரன் (வயது-30) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ந-9)

## கண்ணீர் காணிக்கை



மாவட்டச் செயலக
கிராம அபிவிருத்தி
அலுவலகத்தில்
அபிவிருத்தி
உத்தியோகத்தராகக்
கடமையாற்றும்
திருமதி பிறேமிளா
ரமேஸ்
அவர்களின் அன்புத் தந்தை

### சின்னத்துரை ரவீந்திரன்

அவர்கள் 23.09.2013 திங்கட்கிழமை இறைபதம் அடைந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியினைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரது குடும்பத்தினருக்கு மாவட்டச் செயலகத்தின் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ்.மாவட்டச் செயலக
நலன்புரிகழகம். (32068) (3.6.11)

## கண்ணீர் அஞ்சலி



அச்சுவேலி, உலவிற்குளம், ஸ்ரீ சித்தி
விநாயகர் தேவஸ்தான
பரம்பரை அறங்காவலர்

### கணபதிப்பிள்ளை சண்முகலிங்கம்

அவர்கள் காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
அன்னாரின் ஆத்மா விநாயகர் நிழலில் அமைதி பெற பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகிகளும், பூசகர்களும், ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம்,
உலவிற்குளம், அச்சுவேலி. (32061)(3.6.11)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
22
*
04
*
1961



உதிர்வு
08
*
10
*
2012

### திருமதி. சாரதா-சிவராசா
(திதி: 27.09.2013)

அழும் ஒரு நிலை வரும்
தலை தனில் அது விழும்
மனம் படு மரமாய் போகும்
அதுவே ஈற்றில் கல்லாய் மாறும்

மறை முகம் மனதில் வரும்
தினம் தினம் நினைவு தரும்
படும் துன்பம் வேதனை யாவும்
அதில் கரைந்து ஆவி ஆகும்

நேற்று போல நினைவு தந்தாய்
காற்றாய் வந்து மூச்சில் நின்றாய்
வீழ்ந்த பின்பு உன்னோடு நாமும்
உறவாய் வந்து மறுமையில் கலப்போம்.

(32528)(10.14)

செம்மலை, முல்லைத்தீவு,
T.P: 077 64 53 717

குடும்பத்தினர்.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 28.08.2013 புதன்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி



திருமதி
### ஜெகிலா (மீரா) சற்குணம்

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள்
இன்று(27.09.2013) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00
மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.
அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து
அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

15/5, தலையாழி ஒழுங்கை,
யாழ்ப்பாணம். [32062][5.6.3]

குடும்பத்தினர்.

# பொலிஸ், காணி அதிகாரங்கள் வடமாகாண சபைக்கு வழங்குங்கள்

## பிள்ளையான் வேண்டுகோள்



வடக்கு மாகாண சபைக்குப் பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்று கிழக்கு மாகாண சபை உறுப்பினர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.
வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமோக வெற்றி பெற்றமை குறித்து கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
எந்த அரசியல் கட்சி வடக்கு மாகாண சபையைக்கைப் பற்றிக் கொண்டிருந்தாலும், அது பிரச்சினை அல்ல.
ஆனால் அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் கீழ் அந்த மாகாண சபைக்குரிய காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்பார்த்ததைவிட பெரும் வெற்றியொன்றை மக்கள் அவர்களுக்கு வழங்கியுள்ளனர்.
எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் மாகாண சபையொன்றுக்கு வழங்கமுடியாத அதிகாரங்கள் குறித்த யோசனைகள் கூட உள்ளடங்கியுள்ளன.
மாகாண சபையின் மூலமாக நிறைவேற்ற இயலாத விடயத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்தவிதம் நிறைவேற்றப் போகிறது என்பதை நாம் பொறுத்திருந்து பார்க்கவுள்ளோம்.
வடக்கின் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வரவேற்றாலும், கிழக்கு மாகாண சபை வெவ்வேறு இனங்களைக் கொண்டிருப்பதால் இங்கு பொதுத்தேர்தல் ஒன்றின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வெற்றி என்பது சிரமத்துக்குரியது- என்றார். (ச-22)

# ஒரு நாள் அவகாசத்தில் இடமாற்ற விண்ணப்பம்

## திருகோணமலை ஆசிரியர்கள் விசனம்

கொழும்பு, செப். 27
திருகோணமலை கல்வி வலயம் வருடாந்த ஆசிரியர்களுக்கான இடமாற்ற விண்ணப்பங்களை கோரியுள்ளது.
இந்த இடமாற்ற விண்ணப்ப விவரங்கள் 24.09.2013 அன்று பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.
அதில் விண்ணப்ப முடிவு திகதி 26.09.2013 என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
இந்த விண்ணப்பப்படிவங்களை ஒழுங்கு படுத்தி அதிபரிடம் கையொப்பம் பெற்று வலயக் கல்வி அலுவலகத்துக்கு அனுப்பி வைக்க இந்தக் கால அவகாசம் போதுமானதா என்று ஆசிரியர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.
இந்த விண்ணப்பங்கள் கல்விப் பணிப்பாளரின் 20/01/02 இலக்க கல்வி அமைச்சின் 2007/20 சுற்றறிக்கைக்கு அமைவாக கோரப்பட்டுள்ளன.
முதல் நியமனம் பெற்று சேவையாற்றுபவர்கள் நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கமைவாக அந்தப் பாடசாலையில் சேவையாற்ற வேண்டிய கால எல்லையை பூர்த்தி செய்யாதவர்கள் வருடாந்த இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்க முடியாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
இடமாற்றத்துக்கு விண்ணப்பிக்கும் ஆசிரியர்களுக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எதுவும் இல்லை என்பதை வலயக் கல்வி பணிப்பாளரின் உறுதிபடுத்திய கடிதம், முதல் நியமனக் கடிதப் பிரதி, நியமனத்தை உறுதிப்படுத்திய கடிதம் ஆகிய ஆவணங்களுடன் 26.09.2013 இற்கு முன்னர் விண்ணபிக்குமாறு வலயக் கல்வி அலுவலகம் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

**”விண்ணப்பப் படிவங்களை ஒழுங்குபடுத்தி வலயக்கல்வி அலுவலகத்துக்கு அனுப்பி வைக்க ஒரு நாள் அவகாசம் போதுமானதா? என்று ஆசிரியர்கள் கேட்கின்றனர்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 26.04.1933 மறைவு 08.10.2012

திருமதி
**அமிர்தாம்பாள் ஞானசுந்தரம்**

அன்னாரின் நினைவாக இன்று (27.09.2013) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் பங்கு கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(32079) (7.6.3)

**100/5, சம்பியன் லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.**

**குடும்பத்தினர்.**

## 16 ஆம் நாள் நிகழ்வு அழைப்பு



சென்ற 13.09.2013 சனிக்கிழமை இறைபதமடைந்த
எமது குடும்பத்தலைவர்
**அமரர்**
**அப்புத்துரை இராமநாதன்**
(ஓய்வுபெற்ற விரிவுரையாளர்: யாழ்ப்பாணம், கொழும்பு பல்கலைக்கழகம்,திறந்த பல்கலைக்கழகம்)

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், பாஷாண உத்தாபனம் (கல்லெடுப்பு) சபிண்டீகரணமும், நாளை (28.09.2013) சனிக்கிழமை காலை 5 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வுகளில் கலந்து கொள்வதோடு, தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் பங்கேற்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
(அழைப்பு நேரடியாகக் கிடைக்காத அன்பர்கள் தயவுசெய்து இந்த அழைப்பை ஏற்றுக்கொள்ளவும்)

**கந்தவனம்,
பொலிகண்டி.** (29532)(45.3.)

திருமதி **சிவயோகநாயகி இராமநாதன்**
(மனைவி)

## கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகிறோம்

எங்கள் குல இளவலே



**இரவீந்திரா**

என்றும் எமக்கு உறுதுணையாய் நின்றவனே
மங்காப் புகழோடு மாண்புற வாழ்ந்தவனே
கல்வியில் உயர்ந்து பட்டங்கள் பெற்றவனே
தனியார் கல்வி நிலையங்களில் சாதனை படைத்தவனே
கிளிநொச்சி மாநகர் கச்சேரியிலும் உயர்வான
உத்தியோகம் நிறைவாகச் செய்தவனே
பரம்பரை அர்ச்சகராம் தொண்டைமாநகர்
வீரமாகாளி அம்பிகைக்கும் பூசனை புரிந்தவனே
அம்மாவின் அதீத அன்பினைப் பெற்றவனே
ஐயகோ! விதி உன்னைப் பறித்துவிட்டதே
மனைவி பிள்ளைகள் சகோதர சகோதரிகள்
அத்தான்மார் அண்ணிமார் உறவினர் நண்பரோடு
பெற்ற அன்னையும் கலங்கிட நிமலனிடம் சென்றாய்
கண்ணீரையே பூக்களாகக் காணிக்கையாக்குகிறோம்
களங்கமில்லாதவனே நிலைத்திருப்பாய் இறை நிழலில்

**அம்மா, மனைவி, பிள்ளைகள்,
சகோதர, சகோதரிகள், உறவினர், நண்பர்கள்.**

**தகவல்: சிவஸ்ரீ சோ.நடராசாக் குருக்கள்,
சில்லையூர் முத்துமாரிஅம்மன் தேவஸ்தானம், பண்டத்தரிப்பு.**

(C/1216)(10,6,3)

தற்போது யாழ் நகரில்...



BTEC HND in
BIOMEDICAL SCIENCE
Leadind to BSc (Hons) from UK universities

- ஆய்வுகூட பரிசோதனைகளை உள்ளடக்கிய முழு நேர பாடநெறி
- உயிரியல் துறையில் தொழில் சார் Biomedical Scientist களாக UK இல் பதிவு செய்வதற்கான சந்தர்ப்பம்
- சர்வதேச ரீதியில் அதிக தொழில் வாய்ப்புக்களுக்கு இட்டுச் செல்லும்
- பாடநெறி முடிவில் பிரபல தனியார் வைத்தியசாலைகளில் உள்ளகப் பயிற்சி
- உயிரியல் துறையில் நவீன வசதிகளுடனான கற்றல் சூழல்




ISO 9001:2008 CERTIFIED
14 Years of Trust & Excellence in Higher Education

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
www.bcas.lk

16, Point Pedro Road, Jaffna.
021 221 9910 / 077 710 2131
Colombo : 077 482 9765
Kandy : 081 222 4731
Batticaloa : 077 766 6432
Kurunegala : 077 387 4747

Macro Ads

Building Careers - Transforming Lives

# தமிழருக்கு அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்காவிட்டால் சாட்சிக்காரர்கள் பிரச்சினையைக் கையிலெடுப்பர்

## அரசை எச்சரிக்கிறார் மனோ கணேசன்



கொழும்பு.செப்.27
தமிழ் மக்களுக்காகச் சாட்சிக் கையெழுத்துப் போட்டிருப்பது சர்வதேசமும், ஐ.நா. சபையும் தான். இங்குள்ள தமிழ்த் தலைவர்களுடன் அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்க மறுத்தால் சாட்சிக்காரர்கள் தான் எமது பிரச்சினையைக் கையிலெடுப்பார்கள் என்று இலங்கை அரசை எச்சரித்தார் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன்.

அதிகாரத்தைப் பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கத்தின் ஊடகவியலாளர் மாநாடு புதன்கிழமை இடம்பெற்றது. அந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடமாகாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெரு வெற்றியைப் பெற்ற பின்னரும், பிளவுபடாத நாட்டுக்குள்ளே அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வோம் என்று தான் மிகவும் பொறுப்புடன் சொல்லியிருக்கின்றனர்.

அவர்களது இந்த நல்லெண்ணப் பிரகடனத்தை அரசு புரிந்துகொண்டு ஏற்றுக் கொள்ள வேண்டும். வடக்கிலிருந்து நீட்டப்படும் தமிழரசுக் கட்சித் தலைவர் சம்பந்தனின் தேசிய முக்கிய கரத்தை தேச நலன் கருதி இறுகப் பற்றிக் கொள்ள வேண்டும்.

அரச தலைவருக்குப் பக்கத்தில் இருப்பவர்கள்அவருக்குஇவற்றை விளக்கிச் சொல்ல வேண்டும்.

நமது நாட்டுச் சிக்கல் சர்வதேச பிரச்சினையாகி விட்டது. நமது பிரச்சினை ஐ.நா. சபைக்குப் போய்க் கூடாரம் அடித்து பாய் விரித்துப்படுத்து குடியேறிவிட்டது. இனிமேல் சர்வதேச சமூகத்திடம் சொல்ல வேண்டாம் என்று ஒப்பாரி வைப்பதில் பலன் இல்லை.

இந்த அரசு உலகுக்கு காலம் காலமாகக் கொடுத்த வாக்குறுதிகளை அவர்கள் நினைவில் வைத்திருக்கின்றார்கள். நீங்கள் தந்தை செல்வாவை ஏமாற்றியது போல் உலகை ஏமாற்ற நினைக்க வேண்டாம்.

தமிழ் மக்களுக்கு இன்று ச்ாட்சிக் கையெழுத்துப் போட்டிருப்பது ஐ.நாவும் சர்வதேசமும் தான். பிளவுபடாத நாட்டுக்குள்ளேயே அதிகாரத்தைப் பகிர்ந்து வாழ்வோம் என்று சொல்லும் தமிழ்த் தலைவர் இருக்கும்போதே பேசித் தீர்த்து தீர்மானத்துக்கு வந்து முடிவு காணுங்கள். இல்லாவிட்டால் உலகம் நமது பிரச்சினையைத் தனது கைகளில் எடுத்துக் கொள்ளும் நாள் வரும்.

நீங்கள் மீண்டும் தவறு செய்தால் நாங்கள் விரும்பா விட்டாலும் கூட, முழு உலகமும் தமிழர் தரப்பாக மாறி நியாயம் தேடும் நாள் வரும். இந்த எச்சரிக்கையை அரசு புரிந்து கொள்ள வேண்டும்.

### எதிர்க்கட்சி கூட்டணிக்கு திரைமறைவில் பேச்சு

இன்று மஹிந்த அரசுக்கு எதிராக நாங்கள் பொது எதிரணிக்ளளள கட்சி. இந்த தமிழ், முஸ்லிம், சிங்கள விரோத மஹிந்த ஆட்சியை வீட்டுக்கு அனுப்பும் முகமாக பலமான எதிர்க்கட்சியாக ஐக்கிய தேசிய கட்சி தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும்.

தற்போது பல்வேறு திரை மறைவுப்பேச்சுகள் நடைபெறுகின்றன. அவற்றை நான் பகிரங்கமாகச் சொல்ல முடியாது. அவை வெற்றி பெற்று பலமான எதிர்க்கட்சி கூட்டணி ஒன்று விரைவில் உருவாக நாம் உழைப்போம்.

ஐக்கிய தேசிய கட்சி நாட்டை ஆண்ட கட்சி. ஆளப்போகும் கட்சி. அது இன்று பெரும் சிக்கலை சந்தித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சிகாரர்கள் புத்தியை பயன்படுத்தி வேலை செய்ய வேண்டும். என்ன செய்ய வேண்டும் என நான் சொல்ல வரவில்லை.

அந்தக் கட்சி பலமாக இருப்பது, அவர்களுக்கு மாத்திரம் அல்ல; எங்களுக்கும் நல்லது. நாட்டுக்கும் நல்லது. இன்று இந்தக் கட்சி காயம் பட்டுள்ளது.

விழுந்து காயம் பட்டவர்களை அடிக்க நான் விரும்பவில்லை. உண்மையில் கடந்த கால நிகழ்வுகளை காட்டி, நான் தான் ஐக்கிய தேசிய கட்சியை அதிகம் அடிக்க வேண்டும்.

நான் அத்தகைய பண்பாடு இல்லாதவன் அல்லன். அல்லது இதைக் காரணம் காட்டி அரசுடன் கரங்கோர்க்க விரும்புகின்றவனும் அல்லன்.

உண்மையில் கடந்த பொதுத் தேர்தலின் பின்னர் ஏற்பட்ட கசப்பான சம்பவங்களின் பிறகும்கூட, அவற்றை மறந்து விட்டு இன்றும் ஐ.தே.கவின் ஒரேயொரு மாநகரசபையான கொழும்பு மாநகர சபை நிர்வாகத்தை நடத்த நாங்கள் தான் உதவுகின்றோம். -என்றார். (ச-5)

# குறைந்த வாக்குப் பெறும் கட்சி தேர்தலில் போட்டியிட முடியாது

கொழும்பு.செப்.27
குறைந்தளவு வாக்குகளை பெறும் கட்சிகளுக்கு அடுத்த தேர்தலில் போட்டியிட அனு மதி வழங்கக் கூடாது என யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன என்று தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

தேர்தல் திணைக்களத்தில் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற் றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

கூடுதலான சுயேச்சைக் குழுக் கள் போட்டியிடுவதால் அவற்றுக்கான கட்டுப்பணத் தொகையை அதிகரித்து அதனை மட்டுப்படுத்த வேண் டும். மின்னணு வாக்குப் பதிவு முறை அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

புத்தளத்தில் வாக்காளர் அட்டை கண்டுபிடிக்கப்பட்ட சம்பவத்தின் மூலம் மின்னணு வாக்க ளிப்பு முறை துரிதமாக அறிமுகப்படுத்தப்பட வேண்டிய அவசியம் உணரப்படுகிறது.

சில மாவட்டங்களில் கூடுத லான அரசியல் கட்சிகளும் சுயேச்சைக்குழுக்களும் போட் டியிடும் போது வாக்கு எண்ணுவதில் தாமதம் ஏற்படுகிறது.

நீண்ட வாக்குப் பட்டியலை பிரித்து தனித் தனியாக எண்ண வேண்டும். அதனால் ஆயிரத்தில் ஒரு வாக்குக் கூட பெறாத க்ட்சிகளுக்கு அடுத்த தேர்தலில் வாக்களிக்க இடம ளிக்க முடியாதவாறு சட்டத் திருத்தம் செய்யப்பட வேண்டும்.

சுயேச்சைக் குழுக்களும் தேவை யின்றிப் போட்டியிடுவதால் அதனை கட்டுப்படுத்த கட்டுப் பணத்தொகை அதிகரிக்கப்பட வேண்டும் என்று யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

ஒரே தினத்தில் வாக்குகளும் விருப்பு வாக்குகளும் எண்ணாது மறுநாள் விருப்பு வாக்குகள் எண்ணும் முறையை அறிமுகப் படுத்துவதன் மூலம்பல நெருக்கடிகளைத்தவிர்க்கலாம்.

# பேராதனைப் பல்கலைக்கழக துணைவேந்தருக்கு நோட்டிஸ்

## விக்கிரமபாகு தாக்கல் செய்த வழக்கில்

பேராதனைப் பல்கலைக்கழ கத்தின் துணைவேந்தர் உட் பட 25 பேருக்கு அழைப்பாணை விடுக்குமாறு உயர் நீதிமன்றம் புதன்கிழமை உத் தரவிட்டுள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகத் தின் சிரேஷ்ட விரிவுரையா ளராக சேவையாற்றிய நவ சம சமாஜ கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ன தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மீறல் மனுவில் இவர்கள் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். விக்கிரமபாகு கருணாரட்ன, பல்கலைக்கழகத்தில் பணி யாற்றிய காலத்தில் அரசியல் காரணத்தின் அடிப்படையில் அவர் பணியில் இருந்து நீக் கப்பட்டார். அவருக்கு வழங்க வேண்டிய சம்பளப்பாக்கி, ஏனைய கொடுப்பனவுகள் உள்ளிட்ட உரிமைகள் வழங்காமைக்கு எதிராக கருணா ரட்ன இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## வாடகைக்கு வீடு/கட்டடம் தேவை

அறிவியல்நகர், கிளிநொச்சியில் அமையவுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொறியியல்பீட, விவசாயபீட மாணவர்களுக்கு விடுதி வசதி வழங்குவதற்காக சகல வசதிகளுடனும் கூடிய பெரிய, நடுத்தர வீடுகள்/கட்டடங்கள் கிளிநொச்சி திருமுருகண்டி வீதியை அண்மித்த பகுதிகளில் வாடகைக்குத் தேவை.

வீட்டை/கட்டடத்தை வாடகைக்குத்தர விரும்புவோர் கீழ்வரும் மாதிரிப் படிவத்தில் தயார் செய்யப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 18.10.2013 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு முன்னர் சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/ நிர்வாகக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் முகவரிக்கு கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பவும். கடித உறையின் இடது மேல் மூலையில் "யாழ். பல்கலைக்கழக பொறியியல்பீட/ விவசாயபீட மாணவர்களுக்கான வீடு/ கட்டடம்" என குறிப்பிடப்பட வேண்டும். பல்கலைக்கழக கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

தொடர்புகளுக்கான தொலைபேசி இல.: 021 222 6517
பதிவாளர்
சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/ நிர்வாகம்
யாழ். பல்கலைக்கழகம்

**யாழ்.பல்கலைக்கழகத்தின் பொறியியல்பீட/ விவசாயபீட உபயோகத்துக்கான வீடு/கட்டடம்**

மேற்படி விடயம் தொடர்பாக தங்கள்.....................ஆம் திகதிய பத்திரிகை விளம்பரத்துக்கு அமைவாக எனது பின்வரும் வீட்டை/கட்டடத்தை பல்கலைக்கழத்துக்கு குத்தகைக்குத்தர விரும்புகின்றேன்.

வீடு/கட்டடம் பற்றிய விவரங்கள்
1) வீடு/ கட்டடம் அமைந்திருக்கும் இடம்
........................................................................................
2) வீடு/ கட்டட சொந்தக்காரரின் பெயரும் அவரது நிரந்தர முகவரியும்
........................................................................
3) தொடர்புகொள்ள வேண்டியவரின் பெயரும் முகவரியும் தொலைபேசி இலக்கம்
பெயர்.......................................................................................
முகவரி.....................................................................................
தொலைபேசி இல..........................................................................
4) (a) வீட்டின்/ கட்டடத்தின் பரப்பரளவு (சதுர அடி)...................................
(b) வீடு/ கட்டடம் அமைந்துள்ள காணியின் பரப்பளவு...................................
5) அறைகளின் எண்ணிக்கை.................................................................
குளியல் அறைகளின் எண்ணிக்கை.......................................................
மலசல கூடங்களின் எண்ணிக்கை
6) மின்சார வசதி உண்டு/ இல்லை.........................................................
விவரம்.......................................................................................
7) தண்ணீர் வசதி: கிணறு/ குழாய் நீர்
விவரம்.......................................................................................
8) எதிர்பார்க்கும் குத்தகை/ மாதாந்த வாடகை............................................
(வீடு/கட்டட பராமரிப்பு தொடர்பான செலவுகள் உள்ளடங்கலாக)
9) குத்தகைக்கு தரக்கூடிய கால அளவு....................................................
10) வேறு யாதாயினும் கட்டுப்பாடுகள்/ நிபந்தனைகள் (இருப்பின்)....................

..................................
திகதி.............. விண்ணப்பதாரரின் கையொப்பம்



உ
## சேவை நலன் பாராட்டு
திருமதி.நாகேஸ்வரி சிவநாதன்




பெண் கல்விக்குப் பெரிதும் உழைத்த
பெருமகன் வம்சத் துதித்து
தன்முயல்வதனால் ஆசிரியத்தில்
தக்க உயர்வுகள் நாட்டி,
அன்பறம் தவறாக் கடமையால் அனைத்து
மாணவர் மனங்களும் வென்ற
பெண்மணி நாகேஸ் சிவநாதனாம்
பெருமகள் பணி மறவோமே.

(இன்று அகவை அறுபதில் பணி ஓய்வு பெறும்
கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலய ஆசிரியை
திருமதி நாகேஸ்வரி சிவநாதன் அவர்களுக்கு
எமது வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்)

- பழைய மாணவர் -

(32078)(3)



**மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு**

NP GK-xxxx இலக்க ஜமகா மேற் 90 விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 077 356 4245

(33081) (10,14)



உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111



**Soft View Computer Center**
கணினி சிங்கள மற்றும் ஆங்கில
வகுப்புக்கள் ஆரம்பம்
102, Main Street, (A9) Jaffna. E.C Colin
T.P : 021 222 4885, 077 905 3545
யாழ் திருமறைக் கலாமன்றம் அருகில்
(இரவு நேர வகுப்புக்கள் நடைபெறுகின்றன)



**Computer & Accessories Sales**

Intel 3.0 GHz Dual Core,3rd Generation Full Set : ~~54500~~. 49500. (Warranty 3Yrs)

Intel 3.3 GHz Core I-3, 3rd Generation Full Set : ~~64800~~. 58950 (Warranty 3Yrs)

Tablet PC : 1.3 GHz, 1GB, 16GB Nand Flash, 3G, 7.5" HD Screen, Keyboard Pouch.. Full Set : ~~28800~~. 25750 (1Yrs)

Tablet PC : 1.6 GHz, 1GB, 16GB Nand Flash, 3G, 9.7" HD Screen, Keyboard Pouch.. Full Set : ~~37800~~. 35350 (1Yrs)

சகல விதமான கணனி உதிரிப்பாகங்களையும் 30% விலைக்கழிவுடனும், கூடிய உத்தரவாதத்துடனும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

NORTH LEAD No:328, Stanly Road, Jaffna
(ஆரியகுளம் சந்திக்கு அருகில்)
Tel : 222 4459, Mob : 0772533390, Fax : 222 4460



**விசாலமான வீடு வாடகைக்கு**

அரச / தனியார் திணைக்களங்களின் பாவனைக்கு உகந்த விசாலமான வீடு வாடகைக்கு உண்டு.

அரியாலை, தபால் கட்டைச் சந்தியில். தொடர்பு: 0773126807

# மீண்டும் பேரழிவு; இந்தியா அடித்தளம்

## அரசு குற்றச்சாட்டு

"வடக்கு, தெற்கு மக்களிடையே நல்லிணக்கமும் சமாதானமும் ஏற்பட இருந்த வாய்ப்புகளைத் தடுத்து, நாம் இருக்கிறோம் எல்லாவற்றையும் பார்த்துக்கொள்கிறோம் எனக்கூறி தமிழ் இனவாதத்தைப் போஷித்து - சக்திப்படுத்தி நாட்டிற்கு பேரழிவை ஏற்படுத்தியது இந்திய மத்திய அரசும், தமிழ்நாடும் தான்" எனக் குற்றஞ்சாட்டினார் அமைச்சர் சம்பிக்க ரணவக்க.

"தற்போதும் அந்தப் பயணத்துக்கான ஆரம்பத்துக்கே இந்திய அரசு அடித்தளமிடுகிறது" என்றும் அவர் தெரிவித்தார்.

காஷ்மீரைப் பிரிப்பது தொடர்பில் 1948 ஆம் ஆண்டு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தக் கோரி ஐக்கிய நாடுகள் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோதும், தீவிரவாதத்துக்கும், இன வாதத்துக்கும் அஞ்சி, உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடான இந்தியா இன்னமும் அதை நடைமுறைப்படுத்தாமல் உள்ளது. இந்நிலையில்தான் தனிநாட்டுக் கோரிக்கை குறித்து அது இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கிறது என்றும் அவர் சாடினார்.

கொழும்பு - இசுருபாயவிலுள்ள ஜாதிக ஹெல உறுமயவின் கட்சித் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு.

**கோத்திரர்களாகவே இன்றும் தமிழர்கள்**

"இலங்கையில், சிங்கள மக்களின் சமூகம் நன்கு அபிவிருத்தி அடைந்துள்ளது. ஆனால், தமிழ்ச் சமூகம் தான் இன்னமும் 1960ஆம் ஆண்டுகளைப் போல கோத்திர சமூகமாகவே இருக்கின்றது. அந்த சமூகத்தில் எந்தவிதமான அபிவிருத்தியும் இல்லை. தமிழர்களின் இந்த அவல நிலை எமக்குப் பெரும் கவலையளிக்கிறது.

**இந்தியாவால் பேரழிவு**

வடக்கிலுள்ள தமிழ் மக்கள் தெற்கு மக்களுடன் நல்லிணக்கத்துடனும், சுதந்திரமாகவும் வாழ்வதற்கான பல வாய்ப்புகள் இருந்தன. மேற்குலக நாடுகளே இந்த வாய்ப்புகளைப் பறித்தன. இதன் பிரதான பங்கு இந்திய மத்திய அரசையும், தமிழ்நாட்டையுமே சாரும்.

1977ஆம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கம் என்ன கூறினார்? மகாத்மா காந்தி கிழக்கு பாகிஸ்தானை உருவாக்கியது போல தமிழீழத்தையும் பெற்றுத் தருவார் என்றார். இதையடுத்துதான் புலிகளால் ஆயுதப்போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு, இந்திய மத்திய அரசும் அதில் தலையிட்டு பேரழிவுகளை ஏற்படுத்த வழிவகுத்தது.

**சமாதானத்தை சீர்குலைக்கிறது இந்தியா**

போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர் 2010ஆம் ஆண்டுகளில் வடக்குத் தமிழ் மக்களிடம் ஓரளவுக்கு நல்லிணக்கம் ஏற்பட்டு வந்தது. இன வாதமும், பிரிவினைவாதமும் பின்னோக்கி போய்க்கொண்டிருந்தன. இந்நிலையில், அவற்றுக்கு மீண்டும் சக்தியளித்து, முழுமையாக முன்னோக்கி கொண்டு வந்தது இந்திய மத்திய அரசும், தமிழ்நாடும்தான்.

**தீவிரவாத அச்சத்தில் இந்தியா**

காஷ்மீரை தனி அலகாகப் பிரிக்க சர்வஜன வாக்கெடுப்பு நடத்தக்கோரி 1948ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையில் இந்தியாவுக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானத்தை இந்தியா இன்றுவரை நிறைவேற்றவில்லை. ஏன்? தீவிரவாதம், இனவாம் என்ற அச்சம் இந்தியாவிடம் இருக்கிறது.

அதுமட்டுமல்ல, 1939ஆம் ஆண்டுகளில் தமிழ்நாட்டை தனிநாடாக பிரிக்கக்கோரி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தனிநாடு இல்லாவிட்டால் எமக்கு சுதந்திரம் வேண்டாம் என்று வெள்ளையர்களிடம் தமிழ்நாட்டு அரசியல் வாதிகள் கோரிக்கை விடுத்தனர். இந்தியா சுதந்தரம் பெற்றதன் பின்னர் யாப்புத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, இனவாதம் பற்றி எவரும் வாய் திறந்தால் அவர் சிறைவைக்கப்படுவார் என்பதில் மத்திய அரசு உறுதியாக இருந்தது. அதன் பின்னர் 1977ஆம் ஆண்டுகளின் பின்னர்தான் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு தேர்தலில் போட்டியிடும் உரிமையை இந்திய மத்திய அரசு வழங்கியது. இதுதான் இந்திய வரலாறு. இவ்வாறான நிலையில் தான் இலங்கையில் தனிஈழத்தை உருவாக்குவது குறித்து இந்தியா பேசுகிறது" - என்றார் அமைச்சர் சம்பிக்க.

# அனுமதியற்ற விளம்பரங்கள் இம் மாதத்துடன் அகற்றப்படும்

யாழ்ப்பாணம், செப்.27

வலி.கிழக்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் சபையின் அனுமதியின்றி அமைக்கப்பட்ட சகல விளம்பரத் தட்டிகளும் இம்மாத இறுதிக்குள் அகற்றப்பட வேண்டும் என்று சபையின் தலைவர் அன்னலிங்கம் உதயகுமார் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொது இடங்கள் மற்றும் சொந்தமான நிலையங்களுக்கு முன்பாக சபையின் அனுமதியின்றி போடப்பட்ட விளம்பரத் தட்டிகள் யாவும் இம்மாத இறுதிக்குள் அகற்றப்படும்.

இவ்வாறு அகற்றப்படாத விளம்பரத் தட்டிகள் யாவும் உடனடியாகஅகற்றப்படுவதோடுஇவற்றை அமைத்தவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் சபையின் அனுமதியின்றி கல் அகழ்வோருக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்றார். (த-17)

# நேரடி வெளிநாட்டு முதலீடுகள் 540 மில்லியன் அமெரிக்க டொலர்

கொழும்பு, செப்.27

இந்த ஆண்டின் முதல் ஆறு மாத காலத்துள் இலங்கைக்கு 540 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான நேரடி வெளிநாட்டு முதலீடுகள் கிடைத்துள்ளன என்று முதலீடுகள் மேம்பாட்டு அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர் தன தெரிவித்தார்.

கடந்த ஆண்டின் முதல் ஆறு மாத காலத்துள் கிடைத்த முதலீடுகளின் அளவுப் பிரமாணத்துடன் இதை ஒப்பிட்டுப் பார்க்கும் போது இது நூற்றுக்கு 20 வீதமான அபிவிருத்தி என்று அமைச்சர் கூறினார்.

முதலீடுகள் மேம்பாட்டு அமைச்சில் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பிலேயே அமைச்சர் இவ்வாறு தெரி வித்திருந்தார்.

2012 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாத காலத்தில் இலங்கைக்கு கிடைத்த நேரடி வெளிநாட்டு முதலீடுகள் 452 மில்லியன் அமெ ரிக்க டொலர்கள் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (சு-22)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### வெள்ளவத்தை

கட்சிகளுடனும், தனி நபருடனும் பேச்சு நடத்த தயாராக உள்ளோம்" என்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பு, இசுருபாயவிலுள்ள கட்சித்தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேலும் தெரிவித்ததாவது.

**அமிர்தலிங்கத்தின் கதியே விக்னேஸ்வரனுக்கும்**

1977ஆம் ஆண்டு வட்டுக் கோட்டைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர், தமிழ் மக்கள் தனி ஈழத்துக்கு ஆணை வழங்கிவிட்டனர் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் அமிர்தலிங்கம் கூறினார். அதன் பின்னர் இது விடயத்தில் இந்தியா தலையிட்டதையடுத்து, பிரபா கரனால் ஆரம்பிக்கப்பட்ட ஆயுதப் போராட்டத்தில் அமிர்தலிங்கமும் பலியாகினார். அமர்தலிங்கத்துக்கு நேர்ந்த கதியே வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்கும் ஏற்படும்.

**பிரபாகரனின் வெற்றி**

வடமாகாணசபைத் தேர்தல் வெற்றியை பிரபாகரனின் ஆயுதக் குழுவுக்குக் கிடைத்த அரசியல் வெற்றியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காட்ட முயற்சிக்கின்றது. அத்துடன், பிரபாகரன் வீரன் எனக் காட்டவும் முயற்சிக்கிறது. பிரபாகரனின் நாஸிஸ வாதத்தைத் தான் வடக்குத் தேர்தலூடாக கூட்ட மைப்பு முன்வைத்துள்ளது. இதற்கு இடமளித்ததனூடாக இராணுத்தினர் பெற்றுத்தந்த மாபெரும் வெற்றியை அரசு காட்டிக் கொடுத்துள்ளது.

**புலிகளின் குடும்பங்களுக்கு தைரியமூட்டிய நவிப்பிள்ளை**

வட மாகாணசபைத் தேர்தலில் கூட்டமைப்பு வெற்றிபெற நவநீதம்பிள்ளை பெரும் அழுத்தம் கொடுத்தார். சர்வதேச ரீதியில் இலங்கைக்கு எதிராக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை நான் பார்த்துக் கொள்கிறேன் என்று புலிகளின் குடும்பங்களுக்கு தைரியம் ஊட்டினார். வடமாகாண சபைத் தேர்தலில் தலையிட்டு புலிகளின் சடலங்களைக் காண்பித்து தேர்தல் வெற்றிக்குப் பெரும் அழுத்தம் கொடுத்தார்.

தற்போது ஐக்கிய நாடுகள் சபையில், போர்க்குற்றங்கள் தொடர்பில் இலங்கை நம்பத்தகுந்த உள்ளக விசாரணைகளை மேற்கொள்ளாவிடின், எதிர்வரும் மார்ச் மாதத்தில் சர்வதேச விசாரணை நடத்தப்படும் எனத் தெரிவித்துள்ளார். சர்வதேச விசாரணை என இலங்கைக்கு அச்சுறுத்தி சவால்விடுத்து, மறுபுறத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சுய நிர்ணய ஆட்சியை நோக்கி கொண்டு செல்கிறார். ஐக்கிய நாடுகள் சபையும், இந்தியாவும், சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளும் இந்த விளையாட்டைத் தான் நடத்துகின்றன.

**சிங்களவர்களுக்கு எதிரான முதல் பிரசாரக்காரர் ஆயர்**

நாட்டிலுள்ள சிங்கள மக்களுக்கு எதிராக தமிழ் மக்களிடையே பிரசாரங்கள் மேற்கொள்ளப் படுகின்றன. இந்தப் பிரசாரக் காரர்களில் மன்னார் ஆயர் வண. இராயப்பு ஜோசப்பே முதல் ஆளாக இருக்கின்றார்.

**தூதரகங்கள் வடக்கில் ஆட்சி**

அன்று பிரபாகரனின் துப்பாக்கிக்கு அஞ்சிய வடக்கு மக்கள் இன்று புலம் பெயர் தமிழர்களின் குறுந்தகவல், ஈமெயில், தொலைபேசி அழைப்பு ஆகியவற்றுக்கு அஞ்சி செயற்படுகின்றனர். வட மாகாண முதலமைச்சர் விவகாரத்தில் தீர்மானிக்கும் சக்தியாக வெளிநாட்டுத் தூதரகங்கள் செயற்பட்டன. வட மாகாணத்தை, தூதரகங்கள் ஆட்சி செய்யும் நிலைதான் இருக்கின்றது.

**வெற்றிக்கு சர்வதேச அழுத்தம்**

போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு 2010ஆம் ஆண்டு வடக்கில் இடம்பெற்ற தேர்தலில் யாழ். மாவட்டத்தில் 75 ஆயிரம் வாக்குகளைப் பெற்ற கூட்டமைப்பு, இம்முறை 2 இலட்சத்து 39 ஆயிரம் வாக்குகளையும், வன்னியில் கடந்த தேர்தலில் 47ஆயிரம் வாக்குகளைப் பெற்ற கூட்டமைப்பு இம்முறை ஒரு இலட்சத்து 39ஆயிரம் வாக்குகளையும் பெற்றுள்ளது.

போர் முடிவடைந்த ஒரு வருடத்தைவிட, இம்முறைத் தேர்தலில் கூட்டமைப்பின் வாக்கு வீதம் 3 மடங்காக, நூற்றுக்கு 330 வீதமாக அதிகரித்துள்ளது. சர்வதேச அழுத்தமே இதற்குக் காரணம். குறிப்பாக இந்தியா தான் பிரதான காரணம்.

**கூட்டமைப்பின் அபாயகரமான பயணம்**

வெள்ளவத்தை, மட்டக்குளி, வத் தளை முதல் வடக்கு வரை நந்திக் கடலாக்கும் அபாயகரமான நடவடிக்கையையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்கொள்கிறது. இதற்கு நாம் இடமளித்தால், தமது தனி ஈழப் போராட்டத்தை கொழும்பிலும் முன்னெடுப்பர். தனி ஈழக் கோரிக்கையை முன் வைத்து இங்கும் வாக்குகேட்பர். இதைத் தோற்கடிக்க எம் இனத்தை ஒன்று சேர்த்து போராடுவோம் - என்றார்.

### பொறுப்புக்

மூன்று மாகாணங்களுக்கான தேர்தல் வெற்றிகரமாக நடந்துள்ளதற்கு இலங்கை மக்களுக்கு அமெரிக்காவின் வாழ்த்துக்கள்.

மாகாண சபைகளுடன் ஆக்கபூர்வமான முறையில் இணைந்து செயற்படுமாறும், அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்ளும் கடப்பாட்டை நிறைவேற்று மாறும் இலங்கை அரசை அமெரிக்கா கேட்டுக்கொள்கிறது.

குறிப்பாக கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் தொடர்பான கட்டுப்பாடுகள், மனித உரிமை ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள், நீதித்துறைத் தலையீடுகள் குறித்து மனித உரிமைகள் ஆணையாளரின் கவலைகளை நாமும் பிரதிபலிக்கிறோம்.

மத சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறைகள் மற்றும் பாகுபாடுகள் அதிகரித்து வருவது குறித்தும், மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சட்ட மீறல்களைப் புரிவோர் தண்டிக்கப்படுவதில் இருந்து தப்பித்தல், அமைதியாக ஒன்று கூடுவதற்கான கட்டுப்பாடுகள், வெலிவேரியவில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பான மனித உரிமைகள் ஆணையாளரின் கவலைகளுடன் நாமும் பங்கு கொள்கிறோம்.

பொறுப்புக்கூறுவதில் முன்னேற்றமின்மை, அனைத்துலக விசாரணையை வலியுறுத்தும் என்ற மனித உரிமைகள் ஆணையாளரின் கருத்தை நாமும் சுட்டிக்காட்டுகிறோம். நல்லிணக்க ஆணைக்குழுவின் ஆக்கபூர்வமான பரிந்துரைகளை நிறைவேற்றுவது, அனைத்துலக மனிதாபிமான, மற்றும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் தொடர்பான நம்பகமான, சுதந்திரமான விசாரணைகளை நடத்துவது உள்ளிட்ட, ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட 19/2, 22/1 தீர்மானங்களை நடைமுறைப் படுத்தும்படி இலங்கை அரசை நாம் கேட்டுக் கொள்கிறோம்.

ஐநா மனித உரிமைகள் ஆணையாளரின் பயணத்துக்கான ஒத்துழைப்பை வழங்கிய இலங்கையை மதிப்பதுடன், சம்பந்தப்பட்ட எல்லா ஐ.நா. பார்வையாளர்களும் பயணம் செய்வதற்கு ஒழுங்குசெய்யும்படி இலங்கையைக் கேட்டுக்கொள்கிறோம்.

ஐநா மனித உரிமைகள் ஆணையத்தின் தொழில்நுட்ப உதவிகளை ஏற்றுக்கொள்ளும்படியும் இலங்கையை ஊக்குவிக்கிறோம் - என்றுள்ளது. (த)

### ஈழத்து

காக்கவோ, தக்க நடவடிக்கைளை ஐ.நா. எடுக்கவில்லை; அதில் தோற்றுப்போனது; அதற்கு, ஐ.நா. உறுப்பு நாடுகளின் ஒத்துழைப்பு இல்லாததே காரணம் என்று கூறியிருக்கிறார்.

உலகத்தின் கண்களில் மண்ணைத் தூவுவதற்காகத்தான், வடக்கு மாகாண சபைத் தேர்தலை சிங்கள அரசு நடத்தியது. ஆளும்கட்சி வெற்றிபெற்று விடக் கூடாது என்பதற்காகவே துன்பத்தில் உழலும் ஈழத் தமிழ் மக்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குப் பெருவாரியாக வாக்குகளைத் தந்து வெற்றிகளைத் தந்தனர்.

இந்தச் சூழ்நிலையில், ஐ.நா.வின் பொதுச்செயலாளர் தந்துள்ள ஒப்புதல் வாக்குமூலம், ஐ.நா. சபையின் திட்ட மிட்ட தோல்வி என்பது மட்டும் அல்ல, திட்ட மிட்ட துரோகம் என்பதுதான் உண்மை. கடமை தவறிய ஐ.நா. அதிகாரிகளும், இந்த இனக் கொலைக் குற்றத்திற்குப் பொறுப்பாளிகள் ஆவார்கள். ஐ.நா. பொதுச்செயலாளர் பான் கீ மூனும் இதற்குப் பொறுப்பாளி ஆவார்.

புதைக்கப்பட்ட உண்மைகள், ஒருநாள் வெளிவந்தே தீரும்; ஈழத் தமிழர்களுக்கு நீதியும், சுதந்திரத் தமிழ் ஈழ விடியலும் மலர்வது காலத்தின் கட்டாயம் என்ற நம்பிக்கையோடு உலகெங்கும் உள்ள தமிழர்களும், மனித உரிமை ஆர்வலர்களும், ஈழத்தமிழர் படுகொலை குறித்த நீதி விசாரணைக்கு, ஓங்கிக் குரல் எழுப்ப வேண்டும்; எந்தெந்த வழிகளில், இயலுமோ, அனைத்தையும் செய் வதற்கு தியாக தீபம் திலீபனின் 26 வது நினைவுநாளாகிய இந்த நாளில் சூளுரை மேற்கொள்வோம்" என்றுள்ளது.

### காணி

யீட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கை விசாரித்த கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றம், 13 ஆவது திருத்தத்தின்படி, காணி தொடர்பான அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டிருப்பதாக தீர்ப்பளித்திருந்தது.

இதனையடுத்து, கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பை இரத்துச் செய்யுமாறு கோரி உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டது.

நேற்று அந்த வழக்கை விசாரித்த மூவரடங்கய குழுவினர், 13 ஆவது திருத்தத்தில் காணி அதிகாரங்கள் எவையும் மாகாண சபைகளுக்கு வழங்கப்படவில்லை என்று தீர்ப்பளித்துள்ளனர்.

இந்தத் தீர்ப்பு, அரசுக்குக் கிடைத்த பெரிய வெற்றி என்று வர்ணித்தார் அரச தரப்பு சட்ட வாதி கோமின் தயாசிறி. காணி தொடர்பான அதிகாரம் மாகாணசபைகளுக்கு இருப்பதாக இதுவரை பொய்யான பிரசாரங்கள் செய்து வந்த அரசுக்கு எதிரான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சக்திகளுக்கு இந்தத் தீர்ப்பு முறையான பதிலை அளித்திருக்கிறது. உயர்நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பை இந்தச் சக்திகள் எளிதாக நிராகரிக்க முடியாது என்றும் அவர் மேலும் கூறினார்.

உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணி கோமின் தயாசிறி பெருந்தோட்ட அமைச்சின் சார்பிலும், சிரேஷ்ட சட்டத் தரணியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் எதிர்த்தரப்பின் சார்பிலும் முன்னிலையாகி இருந்தனர்.

மாகாண சபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்று தமிழர் தரப்பு வலியுறுத்தி வரும் நிலையில், வடக்கு மாகாண சபைக்கு புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டுள்ள சூழலில் இந்தத் தீர்ப்பு வெளியாகி உள்ளமை சர்ச்சையையும் சந்தேகத்தையும் ஏற்படுத்தி உள்ளது என அரசியல் அவதானிகள் குறிப்பிடுகின்றனர். (த)

### தேசிய

ரங்களுக்கான பிரதிநிதி ஜீன் லம் பார்ட் தெரிவித்துள்ளார்.

வன்முறை மற்றும் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் 68 வீதமாக மக்கள் வாக்களித்துத் தமது விருப்பத்தைப் பிரதிபலித்துள்ளனர். தேர்தலில் இடம்பெற்ற வன்முறை மற்றும் அச்சுறுத்தல்கள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்படும் என நம்புகிறோம் என்றும் ஜீன் லம்பார்ட் கூறினார்.

வடக்கு மாகாண முதலமைச்சராகத் தெரிவாகியுள்ள க.வி.விக்னேஸ்வரனுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்ட ஜீன் லம்பார்ட், வடக்கு மாகாண மக்களின் நன்மைகள் தொடர்பாக முக்கிய பொறுப்புகள் அவருக்கு வழங்கப்பட்டுள்ளன என்றும் குறிப்பிட்டார்.

இலங்கை அரசியல் அமைப்பின் கட்டமைப்புக்குள் தேசிய மற்றும் மாகாண ஆட்சியாளர்கள் முழுமையான ஒத்துழைப்புடன் செயற்பாடுவர்கள் என நம்புவதாகவும் அவர் மேலும் கூறினார். (த)

### காங்கேசன்

வரப்பட்டு அங்கு வைத்துப் பொதி செய்யப்பட்டு விநியோகம் இடம் பெறவுள்ளது.

இதற்குரிய வகையில் புனரமைப்பு பணிகள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

# கொக்குவில் இந்துவுக்கு கிண்ணம்



வலி வடக்கு செப் 26

தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியின் நவமகாஜனன் சிற்பி அமரர் தெ.து.ஜெயரத்தினத்தின் 100 ஆவது பிறந்தநாளையொட்டி இடம் பெறும் நூற்றாண்டு விழா நிகழ்வுகளில் நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம் பெற்ற 08 பேர் பங்கு பற்றும் 05 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டி ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி சம்பியனாக தெரிவானது.

மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற இறுதி ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரியும் கொக்குவில் இந்துக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி 05 ஓவர்கள் நிறைவில் ஒரு இலக்கை இழந்து 57 ஓட்டங்களை பெற்றது.

பார்த்தீபன் 32 ஓட்டங்களையும் சத்தியன் 14 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 08 ஓட்டங்களும் பெறப்பட்டன.

மானிப்பாய் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த திலக்சன் ஒரு ஓவர் பந்து வீசி 11 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் இந்துக் கல்லூரி 05 ஓவர்கள் நிறைவில் ஒரு இலக்கை இழந்து 37 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

குகபிரசாந் 16 ஓட்டங்களையும் பிரதீபன் 11 ஓட்டங்களையும் டிலக்ஸன் 09 ஓட்டங்களை பெற்றதுடன் உதிரியாக ஒரு ஓட்டமும் பெறப்பட்டது.

கொக்குவில் இந்துக் கல்லூரியைச்சேர்ந்த சத்தியன் ஒரு ஓவர் பந்து வீசி 13 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கைக் கைப்பற்றினார். (த-86)



## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், செப்.27

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ்ப்பாணச் சமர் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நக்கீரன் விளையாட்டுக் கழகம் மோதும். (த-23)

★ ★ ★

யாழ்ப்பாணம், செப். 27

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கம்பர் மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டத்தில் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் மோதும். (த-23)

# யாழ்ப்பாணச் சமரில் வெற்றி பெற்ற அணிகள்



யாழ்ப்பாணம், செப்.27

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் நடத்தும் 'யாழ்ப்பாணச் சமர்' உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரம் வருமாறு:-

இளவாலை யங்ஹென்றிஸ் 'பி' அணிக்கும் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இளவாலை யங் ஹென்றிஸ் 'ஏ' அணிக்கும் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட் டத்தில் இளவாலை யங்ஹென் றிஸ் 'ஏ' அணி 6:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

# திருமலை லீக் நடத்தும் உதைபந்தாட்டப் போட்டி

திருகோணமலை, செப்.27

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவரின் அனுசரணையுடன் திருகோணமலை உதைபந்தாட்ட லீக் நடத்தும் 11 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை ஏகாம்பரம் விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகிறது.

முதலாவது ஆட்டத்தில் ஈஸ் ரேர்ன் ஈகிள்ஸ் விளையாட் டுக் கழக அணியை எதிர்த்து விக்வூட் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

இரண்டாவது ஆட்டத்தில் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கிறீன் லைட் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

# மகாஜனவின் வீதி ஓட்டத்தில் வெற்றி பெற்ற வீராங்கனைகள்



வலி.வடக்கு.செப்.27

தெல்லிப்ப்ழை மகாஜனக் கல்லூரியின் நவமகாஜனன் சிற்பி அமரர் தெ.து.ஜெயரத்தினத்தின் 100 ஆவது பிறந்த நாளையொட்டி இடம்பெறும் நூற்றாண்டு விழா நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் புதன் கிழமை காலையில் பாடசாலை மாணவர்களின் வீதி ஓட்டப் போட்டிகளுடன் ஆரம்பமாகியது.

பெண்களுக்கான 10 கிலோ மீற்றர் தூர வீதி ஓட்டப் போட்டியில் மகாஜனக் கல்லூரியின் சுற்று வட்டத்தில் உள்ள பாடசாலைகளின் வீதி ஓட்ட வீராங்கனைகள் 44 பேர் கலந்து கொண்டார்கள்.

இவர்களில் 17 பேர் போட்டியை நிறைவு செய்துள்ளார்கள்.

இவர்களில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்குப் பணப் பரிசில்கள் வழங்கப்படுவதுடன் ஏனையவர்கள் அனைவரும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப் படவுள்ளார்கள்.

இந்தப் போட்டியில் தெல்லிப் பழை யூனியன் கல்லூரி, மகாஜனக் கல்லூரி, மல்லாகம் மகா வித்தியாலயம், பண்டத்தாப்பு பெண்கள் உயற்;தரப் பாடசாலை, அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம், இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம், குளமங்கால் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை ஆகிய பாடசாலைகளின் வீராங்கனைகள் கலந்து கொண்டார்கள்.


இந்தப் போட்டியில் முதல் பத்து இடங்களைப் பெற்ற வீராங்கனைகளின் விவரம் வருமாறு:-

1 ஆம் இடம்-குணசேகரம் நிகேதினி (அளவெட்டி அருணோதயாக் கல்லூரி), 2 ஆம் இடம்-சற்குணம் டிலக்ஷி (சுன்னாகம் ஸ்கந்தவரோத யாக் கல்லூரி), 3 ஆம் இடம் -பாஸ்கரன் சானு (தெல்லிப் பழை மகாஜனக் கல்லூரி), 4 ஆம் இடம்- சண்முகலிங்கம் சரண்ஜா (தெல்லிப்பழை மகா ஜனாக் கல்லூரி).

5 ஆம் இடம்- இந்திரஜித் தமிழ் அரசி (பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாட சாலை), 6 ஆம் இடம்- கதிர்காமதாஸ் லக்ஷகா (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி), 7 ஆம் இடம்- சிவனேஸ்வரன் தாமிகா (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி). 8 ஆம் இடம்-சுவேந்திரன் கௌரி (தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி), 9 ஆம் இடம்- சிவகுமார் கஜிந்திலா (தெல் லிப் பழை மகாஜனக் கல் லூரி).

10 ஆம் இடம்-கணேசராசா அர்சிகா (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி). (த-86)

## மஞ்சி கிண்ண ஆட்டங்கள்



யாழ்ப்பாணம், செப்.27

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான மஞ்சி வெற்றிக் கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் ஆட்டங்கள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை ஏகம்பரம் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (த-23)

## வெற்றி பெற்ற அணிகள்



யாழ்ப்பாணம், செப். 27

முல்லைத்தீவு உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் உடுப்புக்குளம் அலை ஓசை விளையாட்டுக் கழகம் முல்லைத்தீவு உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையே நடத்தும் 11 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று வியாழக்கிழமை காலை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றிபெற்ற அணிகளின் விவரம் வருமாறு:

ஒட்டுசுட்டான் பண்டாரவன்னியன் விளையாட்டுக்கழக அணிக்கும் முல்லைத்தீவு யங்கர்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட் டத்தில் ஒட்டுசுட்டான் பண்டாரவன்னியன் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

கைவேலி உதிக்கும் திசை விளையாட்டுக்கழக அணிக்கும் முள்ளியவளை வளர்மதி விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் கைவேலி உதிக்கும் 'திசை விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

# மகாஜனக் கல்லூரி நடத்தும் உதைபந்தாட்டம் இன்று

வலி.வடக்கு.செப்.27

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் நவமகாஜனன் சிற்பி அமரர் தெ.து.ஜெயரத்தினத்தின் 100 ஆவது பிறந்த நாளையொட்டி இடம் பெறும் நூற்றாண்டு விழா நிகழ்வில் இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிமுதல் பாடசாலைகளுக்கு இடையேயான 9 பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்டப் போட்டிகள் ஆரம்பமாகவுள்ளன.

நாளைய போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரி எதிர் புங்குடுதீவு மத்திய மகா வித்தியாலயம்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி எதிர் யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரி.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி எதிர் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.

ஊர்காவற்துறை சென்.அன்ரனீஸ் கல்லூரி இரண்டாம் சுற்றில் இருந்து மோதவுள்ளது.

முதல் நாள் இடம் பெறும் போட்டிகளில் அரையிறுதி ஆட்டம் வரையான போட்டிகள் இன்று நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (த-86-23)

# நியூசிலாந்துக்கு எதிரான இலங்கை 'ஏ' அறிவிப்பு



இலங்கைக்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம்மேற்கொண்டு போட்டிகளில் பங்குபற்றி வரும் நியூசிலாந்து ஏ அணிக்கும், இலங்கை ஏ அணிக்குமிடையிலான ஒருநாள் போட்டிகளின் முதலிரு போட்டிகளுக்குமான இலங்கை ஏ குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

கண்டியில் 29ஆம் திகதியும், அடுத்த மாதம் முதலாம் திகதியிலும் இடம் பெறவுள்ள இந்தப்போட்டிகளின் தலைவராக டினேஷ் சந்திமால் தொடர்ந்தும் செயற்படவுள்ளார்.

15 பேர் கொண்ட குழாம் அறிவிக்கப்பட்டுள்ள இந்தக் குழாமில் இலங்கை சார்பாக சர்வ்தேசப் போட்டிகளில் பங்குப்பற்றும் வீரர்களுடன், இளைய வீரர்களும் இணைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை டெஸ்ட் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் திமுத் கருணாரத்ன, அண்மைக்கால மட்டுப்படுத்தப்பட்ட பந்துப்பரிமாற்றங்கள் போட்டிகளின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் குஷால் ஜனித் பெரேரா, இளைய சகலதுறை வீரர் அஞ்சலோ பெரேரா, இளைய மத்திய வரிசை வீரர் கித்துருவன் விதானகே ஆகியோர் இந்தக் குழாமில் காணப்படுவதோடு, பந்து வீச்சாளர்களில் ஷமின்ட எரங்க, சுரங்க லக்மால் ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.

முழுமையான குழாம்:
திமுத் கருணாரத்ன, குஷால் ஜனித் பெரேரா, டினேஷ் சந்திமால், அஞ் சலோ பெரேரா, அஷன் பிரியஞ்சன், கித்துருவன் விதானகே, சச்சித்திர சேரசிங்க, சத்துரங்க டீ சில்வா, டில்ருவான் பெரெரே, சீக்குகே பிரசன்ன, ஷமின்ட எரங்க, சுரங்க லக்மால், இஷான் ஜெயரத்ன, றமித் றம்புக்வெல்ல.

# காதலியை கரம் பிடிக்கிறார் ஜோகோவிக்


பிரபல ரென்னிஸ் வீரர் நோவக் ஜோகோவிக் தனது காதஷலியை மணமுடிக்க உள்ளார்.

சர்வதேச ரென்னிஸ் போட்டிகளுக்கான தரவரிசைப் பட்டியலில் முதலிடம் வகிப்பவர் சேர்பிய நாட்டை சேர்ந்த நோவக் ஜோகோவிக். இவர் தனது நீண்ட கால தோழியான ஜெலீனா ரிஸ்டிக்கை கரம் பிடிக்கிறார்.

இது குறித்து டுவிட்டரில், மிக்க மகிழ்ச்சி! வாழ்த்துகளுக்கு எனது நன்றி எனத் தனது நண்பர்களைக் குறிப்பிட்டு கருத்து தெரிவித்துள்ளார்.

இவரது காதலியான ஜெலீனாவும் சேர்பிய நாட்டை சேர்ந் தவர் தான்.காதலி இவருக்கு முத்தமிடுவது போன்ற புகைப் படத்தையும் வெளியிட்டுள்ளார்.

மேலும், தொடர்ந்து 100ஆவது வாரமாக முதலிடம் வகிக்கும் டென்னிஸ் வீரர் என்ற பெருமையையும் ஜோகோர்விக் சுபீத்தில் நிகழ்த்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (கு)



# ரகசியங்களை அம்பலப்படுத்துவேன்



வாழ்நாள் தடை குறித்து அதிர்ச்சி தெரிவித்துள்ள லலித் மோடி, விரைவில் பல்வேறு ரகசியங்களை வெளியிடப் போவதாக எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஐபிஎல் போட்டிகளில் பல்வேறு முறைகேடுகள் செய்ததாக லலித் மோடி கடந்த 2010ஆம் ஆண்டு பணி நிறுத்தம் செய்யப்பட்டார்.

இந்த விவகாரம் தொடர்பாக முடிவு எடுக்க கிரிக்கெட் சபையின் சிறப்பு பொதுக் குழு கூட்டம் சென்னையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் லலித்மோடிக்கு, வாழ்நாள் தடை விதிக்கப்பட்டது.

இது குறித்து அதிர்ச்சி தெரிவித்துள்ள லலித் மோடி, தாம் சில தவறுகள் செய்திருந்தாலும் கிரிக்கெட் சபைக்கு ஐ.பி.எல் மூலமாக சுமார் 800 பில்லியன் டொலர் வரை பெரும் வர்த்தகத்தை உருவாக்கியுள்ளேன்.

விரைவில் கிரிக்கெட் சபையில் உள்ளவர்கள் குறித்து பல்வேறு ரகசியங்களை அம்பலப்படுத்துவேன் என்று எச்சரித்துள்ளவர், இனிமேல் தன்னுடைய கவனம் முழுவதும் கிரிக்கெட் சபை யை கண்காணிப்பதிலேயே இருக்கும் என்றும் கூறியுள்ளார். (கு)

# வென்றது ராஜஸ்தான் றோயல்ஸ்

சம்பியன்ஸ் லீக் 20/20 தொடரின் இரண்டாவது போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி வெற்றிபெற்றுள்ளது. லயன்ஸ் அணிக் கெதிரான இந்தப் போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 30 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. ஜெய்ப்பூர் சவாய் மன்சிங் மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற லயன்ஸ் அணி முதலில் களத் தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 183 ஓட்டங்களைப் பெற்றது. 9.3 பந்துப்பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து 67 ஓட்டங்களுடன் காணப்பட்ட ராஜஸ்தான் அணி சார்பாக மத்திய வரிசை வீரர்களான ஷேன் வொட்சன், பிரட் ஹொட்ஜ், ஸ்ருவேர்ட் பின்னி ஆகியோர் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

துடுப்பாட்டத்தில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி சார்பாக பிரட் ஹொட்ஜ் 23 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 46 ஓட்டங்களையும், ஸ்ருவேர்ட் பின்னி 20 பந்துகளில் 38 ஓட்டங்களையும், ஷேன் வொட்சன் 24 பந்துகளில் 33 ஓட்டங்களையும், ராகுல் ட்ராவிட் 30 பந்துகளில் 31 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் லயன்ஸ் அணி சார்பாக லொன் வபோ சொற்சொபி 26 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், டுவைன் பிறீற்றோ ரியஸ் 27 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், சொஹைறல் தன்வீர் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

184 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய லயன்ஸ் அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 153 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 30 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

வேகமான ஆரம்பத்தைப் பெற முனைந்த போதிலும், 5 பந்துப்பரிமாற்றங்களின் நிறைவில் 3 இலக்குகளை இழந்து 36 ஓட்டங்களுடன் தடுமாறிய லயன்ஸ் அணி, அதன் பின்னரும் தொடர்ச்சியாக இலக்குகளை இழந்திருந்தது.

துடுப்பாட்டத்தில் லயன்ஸ் அணி சார்பாக அல்விரோ பீற்றர்சன் 28 பந்துகளில் 40 ஓட்டங்களையும், ஹார்டஸ் வில்ஜோன் 21 பந்துகளில் 24 ஓட்டங்களையும், தமி சொலக்கிலே 14 பந்துகளில் 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி சார்பாக பிரவீன் தம்பே 3 பந்துப்பரிமாற்றங்களில் 15 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும், விக்ரம்ஜீத் மலிக், ஜேம்ஸ் ஃபோள்க்னர் இருவரும் தலா 2 இலக்குகளையும், ஷேன் வொற்சன் ஓர் இலக்கையும் கைப்பற்றினர். இந்தப்போட்டியின் நாயகனாக பிரவீன் தம்பே தெரிவானார்.



# லலித் மோடிக்கு ஆயுள் தடை

இந்தியன் பிறீமியர் லீக் அமைப்பின் ஸ்தாபகரும், அதன் முன்னாள் பணிப்பாளருமான லலித் மோடி ஆயுள் தடை விதிக்கப்பட்டுள்ளார். இந்தியக் கிரிக்கெட்-கட்டுப்பாட்டுச் சபையின் விசேட பொதுக் கூட்டத்தின் போது அவருக்கு இந்தத் தடை விதிக்கப்பட்டது.

இந்தியன் பிறிமியர் லீக் தொடரின் பணிப்பாளராக இருந்த போது லலித் மோடி கடுமையான குற்றங்களிலும், ஒழுங்கமின்மைகளிலும் ஈடுபட்டார் எனவும், அதன் காரணமாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் விதிகளின் படி அவரை ஆயுளுக்கும் தடை செய்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது.


இந்தத் தடையின் காரணமாக தனது ஆயுளுக்கும் லலித் மோடியால் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் நிர்வாகத்தில் அங்கம் வகிக்க முடியாது என்பதோடு, இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் கீழ் காணப்படும் கழகங்களின் நிர்வாகங்களிலும் அவரால் அங்கம் வகிக்க முடியாது.

விசேட கூட்டத்தை நடத்துவதற்கு லலித் மோடி எதிர்ப்புத் தெரிவித்து உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்த போதிலும், அந்த விவகாரத்தில் உச்ச நீதிமன்றம் தலையிடாது என அறிவிக்கப்பட்ட சில நிமிடங்களில் லலித் மோடி மீதான தடை அறிவிக்கப்பட்டது.

இந்தியன் பிறிமியர் லீக் தொடரில் தொலைக்காட்சி உரிமங்களில் குழறுபடிகள், வீரர்களின் ஏலத்தில் குழப்பங்கள், கழகங்களை அச்சுறுத்தியமை, நிதிகளைச் சரியாகக் கையாளாமை உட்படப் பல குற்றச்சாட்டுக்கள் லலித் மோடி மீது இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் ஒழுக்க செயற்குழுவினால் நிரூபிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(த)



# நம்பிக்கையுடன் றயன் ஹரிஸ்



ஆஸ்திரேலியாவில் இடம் பெறவுள்ள ஆஷஷ் டெஸ்ட் தொடரில் பங்குபற்றுவது தொடர்பாக நம்பிக்கையுடன் காணப்படுவதாக ஆஸ்திரேலிய அணியின் வேகப் பந்து வீச்சாளர் றயன் ஹரிஸ் தெரிவித்துள்ளார்.

தற்போது உபாதைக்குள்ளாகியுள்ள நிலையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்தில் அண்மையில் நிறைவடைந்த ஆஷஷ் தொடரில் அவுஸ்திரேலிய அணி சார்பாக போட்டித் தொடரின் நாயகனாகத் தெரிவான றயன் ஹரிஸ், அத்தொடரில் 4 போட்டிகளில் பங்குபற்றி 24 இலகுகளைக் கைப்பற்றியிருந்தார். முதற்போட்டியில் பங்குபற்றியிருக்காத அவர், அடுத்த 4 போட்டிகளிலும் பங்குபற்றியிருந்தார். இதில் அவர் பங்குபற்றிய 4ஆவது போட்டியான 5ஆவது ஆஷஷ் போட்டியில் அவர் இறுதி நாளில் உபாதைக்குள்ளாகி மைதானத்திலிருந்து வெளியேறிருந்தார்.


பின் தொடைத் தசைநார் உபாதைக்காக சிகிச்சைகளைப் பெற்று வரும் றயன் ஹரிஸ், தற்போது உடற் பயிற்சிகளைச் செய்ய ஆரம்பித்துள்ளதாகவும், 2 வாரங்கள் பந்து வீசாதிருந்த நிலையில், தற்போது தனது பலத்தை அதிகரிப்பதற்கான பயிற்சிகளில் ஈடுபட்டு வருவதாகக் குறிப்பிட்டார்.

நவம்பர் 21 ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள ஆஷஷ் தொடரில் பங்குபற்றுவது குறித்து நம்பிக்கையுடன் காணப்படுவதாகக் குறிப்பிட்ட றயன் ஹரிஸ், 5 போட்டிகளில் பங்குபற்ற எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டார். (த)

# ஒட்டாகோ அணிக்கு இலகு வெற்றி

சம்பியன்ஸ் லீக் 20/20 தொடரின் போட்டிகளில் நேற்று முன்தினம் நடந்த முதற் போட்டியில் ஒட்டாகோ வோல்ற்ஸ் அணி இலகுவான வெற்றியைப் பெற்றது. பேர்த் ஸ்கோர்ச்சர்ஸ் அணிக்கெதிரான இந்தப் போட்டியில் ஒட்டாகோ வோல்ற்ஸ் அணி 62 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

ஜெய்ப்பூர் சவாய் மன்சிங் மைதானத்தில் இடம்பெற்ற இந்தப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பேர்த் ஸ்கோர்ச்சர்ஸ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.



இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஒட்டாகோ வோல்ற்ஸ் அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 242 ஓட்டங்களைக் குவித்தது. 2.2 பந்துப்பரிமாற்றங்களில் 2 இலக்குகளை இழந்து 9 ஓட்டங்களைப் பெற்றுத் தடுமாறிய அவ்வணி, அதன் பின்னர் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. குறிப்பாக, இறுதி 61 பந்துகளில் ஓர் இலக்கு இழப்புக்கு 166 ஓட்டங்கள் குவிக்கப்பட்டிருந்தன.

துடுப்பாட்டத்தில் ஒட்டாகோ வோல்ற்ஸ் அணி சார்பாக நீல் ப்ரூம் 56 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 117 ஓட்டங்களையும், றயன் றென் டூஸ்காட்டா 26 பந்துகளில் 66 ஓட்டங்களையும், டெரன் டீ பூடர் 28 பந்துகளில் 45 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பேர்த்ஸ் ஸ்கோர்ச்சர்ஸ் அணி சார்பாக ஜோயல் பரிஸ் 2 இலக்குகளையும், அடம் வோகஸ், ஜேஸன் பெஹ்றென்டோர்ப் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

243 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பேர்த் ஸ்கோர்ச்சர்ஸ் அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 180 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 62 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

முதலாவது பந்திலேயே முதலாவது இலக்கை இழந்த அவ்வணி, முதலாவது பந்துப்பரிமாற்றத்தின் இறுதித் பந்தில் அடுத்த இலக்கையும், அடுத்த பந்துப்பரிமாற்றத்தின் 3ஆவது பந்தில் 3ஆவது .இலக்கையும் இழந்து தடுமாறியது. தொடர்ந்து களமிறங்கிய வீரர்கள் ஓரளவு சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய போதிலும், மிகப்பெரிய வெற்றி இலக்கை நோக்கிப் பயணம் செய்திருக்க முடிந்திருக்கவில்லை.

துடுப்பாட்டத்தில் பேர்த் ஸ்கோர்ச்சர்ஸ் அணி சார்பாக ஹில்ற்றன் கார்ட்றைட் 53 பந்துகளில் 68 ஓட்டங்களையும், அடம் வோகஸ் 27 பந்துகளில் 36 ஓட்டங்களையும், அஸ்ரன் ரேணர் 18 பந்துகளில் 27 ஓட்டங்களையும், ரொம் ட்ரிஃபிற் 17 பந்துகளில் 25 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஒட்டாகோ வோல்ற்ஸ் அணி சார்பாக இயன் பட்லர் 3 இலக்குகளையும், ஜேம்ஸ் மக்மிலன், நேதன் மக்கலம் இருவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.

இந்தப்போட்டியின் நாயகனாக நீல் ப்ரூம் தெரிவானார். (த)

# 3000 ஓட்டங்களை கடந்தார் டிவில்லியர்ஸ்

தென்னாபிரிக்காவின் ரைற்றன்ஸ் அணி வீரர் டிவிலியர்ஸ் நேற்று முன் தினம் 3000 ஓட்டங்களை கடந்தார்.

சம்பியன்ஸ் லீக் தொடரில் பிரிஸ்பேன் அணிக்கெதிரான போட்டியில் ரைற்றன்ஸ் அணி 4 ஓட்டங்கள் வித்தியாசத்தில் த்ரில் வெற்றி பெற்றது.

இப்போட்டியில் ரைற்றன்ஸ் வீரர் டிவில்லியர்ஸ் 3000 ஓட்டங்களை கடந்தார். இவர் இதுவரை பங்கேற்ற 139 போட்டிகளில், ஒரு சதம், 17 அரைசதம் உட்பட மொத்தம் 3010 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

சர்வதேச அரங்கில் இந்த இலக்கை எட்டிய 37ஆவது வீரர் இவர். முதல் மூன்று இடங்களில் மேற்கிந்திய தீவுகளின் கிறிஸ் கெய்ல் (5752 ஓட்டங்கள்), ஆஸ்திரேலியாவின் பிராட் ஹொக் (5567), டேவிட் ஹசி (5354) உள்ளனர்.(த)



# பார்சிலோனா அணி வெற்றி

ரியல் சோசிடெட் அணிக்கு எதிரான லா லிகா தொடரின் லீக் போட்டியில் பார்சிலோனா அணி வெற்றி பெற்றது.

ஸ்பெயினில் லா லிகா கால்பந்து தொடர் நடக்கிறது. இதன் லீக் போட்டியில் பார்சிலோனா, ரியல் சோசிடெட் அணிகள் மோதின. போட்டியின் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய பார்சிலோனா அணிக்கு, நெய்மர் (5ஆவது நிமிடம்) முதல் கோல் அடித்தார். தொடர்ந்து சில நிமிடத்திலேயே நட்சத்திர வீரர் மெஸ்ஸி (8ஆவது நிமிடம்), செர்ஜியோ (23ஆவ்து நிமிடம்) ஆகியோர் அடுத்தடுத்து கோல் அடிக்க முதல் பாதியில் பார்சிலோனா அணி 3-0 என முன்னிலை பெற்றது.

பின் இரண்டாவது பாதியில் ரியல் சோசிடெட் அணிக்கு ஆல்பர்டோ (64ஆவது நிமிடம்) ஒரு கோல் அடித்தார். இதற்கு பார்சிலோனா வீரர் மார்க் பார்டா (77ஆவது நிமிடம்) பதிலடி கொடுத்து அணியின் வெற்றியை உறுதி செய்தார்.

முடிவில், பார்சிலோனா அணி 4-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை A/L எழுதியோர்,உயர்கல்வி மாணவர்கள்,இளைஞர்,யுவதிகள் மற்றும் தொழில்தேடுவோர் இணைந்துகொள்ள முடியும்
ஆங்கிலத்தில் ஓரெழுத்து தெரியாதவர்கள் கூட எமது இப் பயிற்சியில் இணைந்து பயிற்சிபெற முடியும்.
பயிற்சி நெறி ஆரம்பம் 30.09.2013 திங்கட்கிழமை காலை 09.00
10 வருட ஆராய்ச்சியின் மூலம் உருவாக்கப்பட்ட எமது பயிற்சியில் இணைவதன் மூலம் 3 மாதங்களில் தமிழ்போல ஆங்கிலம் பேசமுடியாதிருப்பின் முழுப் பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம் எம்மால் வழங்கப்படும்.
சர்வதேசத்தால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய சான்றிதழுடன் கூடிய கற்கைநெறி.
SAAMSON
Easy Way English
279,ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்ப்பாணம்
077 621 4567

கணனி,முகாமைத்துவ, ஆங்கில கற்கை நெறிகளுக்கான புதிய பிரிவு ஆரம்பம்
28.09.2013
காலை 10.00மணி
மேலதிக விபரங்களுக்கு: 021 4922 741
IIS
INSTITUTE OF INFORMATICS STUDIES
இல 100, மணிக்கூட்டு வீதி , யாழ்ப்பாணம்
தொ.பே. 021 222 2631

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.09.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.